50வது ஆண்டை நோக்கி...

# மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



தமிழ் இலக்கியத்தை நேசிக்கும்

சகோதர சிங்கள எழுத்தாளர்

நவம்பர்-டிசம்பர் 2012

விலை 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகைக்கு வாழ்த்துக்கள்

—மல்லிகை அபிமானி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

* முல்லை முஸ்ரிபா * ஈழக்கவி * முல்லை வீரக்குட்டி

## ஞாயகக் குறிப்பு

விடியல் சிவா
- ந.இரவீந்திரன்

திக்கவயல் சி.தர்மகுலசிங்கம்
- த.எலிசபெத்

## விமர்சனம்

ஆர்.எம்.நௌஸாத்
'வெள்ளி விரல்'
- மேமன்கவி

## நேர்காணல்

உபாலியுடன்
ஓர்
உரையாடல்

## சிறுகதை

* க.கோபாலப்பிள்ளை * கே.எஸ்.சுதாகர் * ச.முருகானந்தன்

## மொழிபெயர்ப்பு-ஆய்வு

சிங்களத்தில்:
பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி

தமிழில்:
எம்.ரிஷான் ஷெரீப்

தொகுப்பு : உபாலி லீலாரட்னவின் நாவல்களில் இருந்து சில பகுதிகள்

எதிர்வினை




தூண்டில




## பாராளுமன்றத்தில் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களின் உரையும், ஈழத்துத் தமிழ் இலக்கியமும்

மீண்டும் ஒருமுறை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்கள் பாராளு மன்றத்தில் ஈழத்து தமிழ் இலக்கியத்தைப் பற்றி பேசியுள்ளார். இம்முறை ஈழத்துத் தமிழ் சஞ்சிகை வெளியீட்டாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றியுள்ளார்.

இவ்வாறாக ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்கள் அடிக்கடி இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றி வந்திருப்பதை நாம் அறிந்ததே. அஸ்வர் அவர்கள் இவ்வாறு உரையாற்றுவதற்கு அடிப்படையில் ஒரு கலைஞராக இருப்பதே முதற் காரணமாகக் கொள்ளலாம். அடுத்து, சமீப காலமாக ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைப் பற்றி சமூகத்தின் பல்வேறு தரப்பினருக்குமிடையே ஒர் அவதானம் ஏற்பட்டுள்ளதென்பதையும் அஸ்வர் அவர்களின் உரை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஒரு நாட்டின் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதும், அவ்வுரை பாராளுமன்றத்தின் உத்தியோகப்பூர்வமான ஆவணமான 'ஹன்சாட்'டில் பதியப்படுவது இலங்கையில் மட்டுமே சாத்தியமாகியுள்ளது. இதற்காக ஒட்டுமொத்த தமிழ் இலக்கிய உலகத்தினர் அஸ்வர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளார்கள்.

இலங்கைப் பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் இலக்கிய உணர்வு மிக்கவர்கள், படைப்பாளிகள், இலக்கிய சிந்தனைவாதிகள் தொகையளவில் குறைவாக இருப்பினும் கூட, அன்று முதல் இன்று வரை ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்கள், மறைந்த எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்கள், கலாச்சார பிரதி அமைச்சராகப் பணிபுரிந்த பி.பி.தேவராஜ் அவர்கள், தற்போது நீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சராக பணிபுரியும் ரவூப் ஹக்கீம் அவர்கள் ஆகியோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவர்களில் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்கள் இத்தகைய பணிகள் புரிவதில் முன்முக மாகத் திகழ்கின்றார். பாராளுமன்றத்தில் அதைப் பற்றிப் பேசுவதோடு நில்லாமல் அவர் முஸ்லிம் கலாச்சார பிரதி அமைச்சராகப் பணியாற்றிய போது முஸ்லிம் கலை இலக்கியவாதிகள் மட்டும் அல்லாது முஸ்லிம் அல்லாத கலை இலக்கியவாதிகள் உட்பட நூற்றுக்கணக்கான கலை இலக்கியவாதிகளை வாழ்வோரை வாழ்த்துவோம் என்ற மகுடத்தின் கீழ் கௌரவித்திருப்பதையும் இங்கு நாம் குறிப்பிட வேண்டும்.

அஸ்வர் அவர்களின் மேற்படி உரை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகோதர சிங்கள அங்கத்தவர்கள் இலங்கை இலக்கியத்தைப் பற்றி பல்வேறு புதிய தகவல்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக அமைந்தது. அச்சிங்கள சகோதர அங்கத்தவர்கள் பலர் கலை இலக்கிய உணர்வு மிக்கவர்களாக இருந்தும், அவர்களில் பலர் எழுத்தாளர்களாக இருந்தும், அவர்தம் கலை இலக்கிய வளர்ச்சியைப் பற்றி பிரஸ்தாபித்திருப்பதை அறிந்திருக்காத சூழலில் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களின் மேற்படி உரையின் மூலம்தான் சிங்கள இலக்கிய வளர்ச்சி சம்பந்தமான தகவலைக் கூட அவர்கள் அறியக் கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக, இம்மாத மல்லிகை அட்டைப்படத்தை அலங்கரிக்கும் சகோதர சிங்கள எழுத்தாளரான உபாலி லீலாரத்ன அவர்கள் தமிழக எழுத்தாளரான கு.சின்னப்ப பாரதியின் சுரங்கம் என்ற நாவலை சிங்களத்தில் மொழிபெயர்த்து, இந்தியாவில் நல்லி திசை எட்டும் விருதினை சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்காகப் பெற்றுக் கொண்டதன் மூலம், இந்தியாவின் வரலாற்றில் முதன் முதலாக ஒரு சிங்கள நூல் விருதினை பெற்றுக் கொண்டது என்பதை மேற்படி அங்கத்தவர்கள் அஸ்வர் அவர்களின் உரையின் மூலமே அறிந்து கொண்டார்கள்.

மேலும் அஸ்வர் அவர்களின் இந்த உரை வெறுமனே சம்பிரதாயபூர்வமான உரையை விட முக்கியத்துவம் வாய்ந்தது. அதற்குக் காரணம் அஸ்வர் அவர்கள் ஆற்றும் உரைகள் தமிழ் பேசும் மக்களின் கலை கலாசாரம் சார்ந்த விடயங்களாக இருப்பதனால் இன்னும் தீர்க்கப்பட வேண்டிய தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளில் அதுவும் ஓர் அம்சமாக இருப்பதே காரணமாக இருக்கின்றது. இவ்வாறாக அஸ்வர் அவர்கள் ஆற்றும் அவ்வுரைகளில் ஒரு மானசீகமான உணர்வும், ஆர்வமும், முயற்சியும் பொதிந்திருப்பதை அவதானிக்கலாம்.

அதன் காரணமாக அஸ்வர் அவர்கள் ஆற்றும் அந்த உரைகளில் பேசப்படும் விடயங்களை நடைமுறைப்படுத்தும் 'அதிகாரம்' கொண்ட சக்திகளிடமும், அதே மானசீக உணர்வும், முயற்சியும், ஆர்வமும் அமையப் பெற்றால்தான் அஸ்வர் அவர்கள் ஆற்றும் உரையில் காணப்படும் விடயங்களுக்கான தீர்வுகள் சாத்தியமாகும். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அஸ்வர் அவர்கள் கொடுக்கும் அழுத்தத்திற்கு ஈழத்துத் தமிழ் கலை இலக்கிய உலகம் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும். அப்பொழுதுதான் கலை இலக்கிய உணர்வுடன் அதைப் பற்றிய பிரச்சினைகளை பாராளுமன்றம் போன்ற மிக முக்கியமான ஒரு தளத்தில் குரல் கொடுக்கும் அஸ்வர் அவர்களைப் போன்ற செயற்பாட்டாளர்களின் உழைப்புக்கு தகுந்த பயன் கிட்டுவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படம்

# இன்றைய இலக்கியச் சூழலில் உபாலியின் வருகை

**- திக்குவல்லை கமால்**

உபாலி லீலாரத்ன என்றவுடன் காலத்தின் தேவையான மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடுகின்ற ஒருவர் என்பதற்கப்பால், ஒரு சிங்களவராக இருந்து கொண்டு தமிழ் இலக்கியப் படைப்புகளை சிங்களத்திற்குக் கொண்டு செல்கின்றாரே என்ற மகிழ்ச்சி மேலிடுகின்றது.

இதுவரை இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களை மொழி பெயர்த்துள்ளார். மலாண்டன், ஈழத்து சோமு, பத்மா சோம காந்தன், உதயணன், ஜீவகுமாரன் போன்ற இலங்கை எழுத் தாளர் நூல்களை மட்டுமன்றி, புகழ் பெற்ற இந்தியத் தமிழ் எழுத்தாளர்களான ஜெயகாந்தன், பிரபஞ்சன், சின்னப்ப பாரதி, சுஜாதா போன்றவர்களை சிங்கள வாசகர் வட்டத்தில் உலாவரச் செய்துள்ளார்.

மொழிபெயர்ப்புக்காக அரச இலக்கிய சான்றிதழ், சின்னப்ப பாரதி விருது, நல்லி திசையெட்டும் விருது என்பனவற்றையும் சிரமாபிமானய கௌரவ விருதையும் பெற்றுள்ளார்.

தென் மாகாணம் அஹங்கமையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், வளர்ந்ததும் படித்ததும் மத்திய மாகாணம் தலவாக்கலை யில் தான். தற்பொழுது களுத்துறை மாவட்டம் ஹொரணையில் வாழ்ந்து வருகிறார். மாமன் மகள் இந்துமதியை திருமணம் செய்த இவருக்கு இரண்டு பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது அப்பா திரு. குணபால அச்சுத்துறையைத் தொழிலாகக் கொண்டவர். தமிழ், முஸ்லிம் நண்பர்களோடு நெடுங்காலம் பழகியவர். அப்பா வழியாக உபாலி இரண்டு விடயங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார். அச்சுத்துறையையே தனது தொழிலாக வகித்துக் கொண்டு அதன் நவீன எல்லைகளையும் தொட்டுள்ளார். இதன் வெளிப்பாடாக 'அச்சுத் தொழில் நுட்பம்' (முத்ரன தாக்ஷன) என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

இரண்டாவதாக தமிழ் சகவாசத்தின் காரணமாக தனது மொழியறிவை விருத்தி செய்து கொண்டதால் ஒரு நல்ல இலக்கிய மொழிபெயர்ப்பாளராக வளரக் கூடிய வாய்ப்பு அவருக்குக் கிட்டியது.

தற்போது கொடகே நிறுவன வெளியீட்டுப் பிரிவில் முக்கிய பதவி வகிக்கிறார்.

லக்திவ, சடன, திரமின, கல்பனா (சஞ்சிகை) போன்றவற்றில் ஊடகவியலாளராகவும் செயற்பட்டுள்ளார் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

தமிழ், சிங்கள எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினராக உபாலி லீலாரத்ன அதன் முக்கிய செயற்பாட்டாளரும் 'தீப(ம்)' சஞ்சிகையின் தொகுப்பாசிரியராகவும் கடமையாற்றுகிறார்.

தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களோடு நெருக்கமான தொடர்பு வைத்துள்ள இவர் இந்திய, மலேசிய குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களோடும் நெருக்கமாகச் செயற்படுகிறார்.

"யுத்தத்திற்குப் பின்னரான இலக்கியம், இனப் புரிதல்களோடு இலங்கையைக் கட்டியெழுப்பும் ஊற்றுக் கண்களைக் கொண்டிருக்க வேண்டும். எந்தப் பேதமுமின்றி சகல படைப்பாளிகளும் அதில் பங்காளியாக வேண்டும்" என்று தெரிவிக்கும் உபாலியின் சுயமான ஆக்கங்களையும் நாம் மறந்துவிட முடியாது.

நான்கு நாவல்களை இதுவரை வெளியிட்டுள்ளார். இவ்வாண்டில் இன்றும் இரண்டு நாவல்கள் வெளிவர வாய்ப்புண்டு. இவரது சில நாவல்கள் மலையக மக்களின் பிரச்சினைகளைப் பேசுகின்றன.

'விடைபெற்ற வசந்தம்' (பின்வன் தலாவ) என்ற நாவல் மலையகப் பின்னணியில் சிறார்களை வைத்துப் பின்னப்பட்டுள்ளதாகும். அதில் தானும் ஒரு பாத்திரமென்று தெரிவிக்கிறார். இந் நாவலில் பிரதான கதாபாத்திரமாக வெள்ளையன் என்ற தமிழ் சிறுவன் இயங்குகிறான். மலையக இலக்கியம் பற்றிப் பேசும் போது இதனையும் ஒரு கூறாக சேர்த்துப் பார்ப்பது ஆரோக்கியமானதாகும்.

மேற் குறித்த நாவல் தமிழ் மொழி பெயர்ப்புக்கூடாக தற்போது மலையாள மொழியில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய இலக்கியச் சூழலில் உபாலி லீலாரத்ன விசேட சிறப்பியல்புள்ளதொரு ஆளுமையாகத் திகழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்று வெள்ளிக்கிழமை!

மாலை ஆறு மணிக்கெல்லாம் சுடலை வைரவர் கோவிலில் ஒலிபெருக்கி ஒலிக்கத் தொடங்கியிருந்தது. நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள பொங்கல் வேள்வியையொட்டி கோவில் சுற்றாடல் துப்பரவாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆயத்தங்கள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவிக்குமாப் போல் ஒலிபெருக்கியை நேரகாலத்துடன் ஒலிக்க விட்டிருந்தனர்.

ஆண்டுக்கொரு முறை இந்த உற்சவம் நடைபெறுவது வழக்கம். இந்த உற்சவத்தின் போது, இரவிரவாகப் பொங்கலுக்கான ஆயத்தங்கள் நடைபெற்று, காலையில் படையல் நடைபெறும். அதைத் தொடர்ந்து காலை ஏழு மணியளவில் ஆரம்பமாகும் கிடாய் வெட்டு முடி வடைந்ததும் அங்கு ஒரு திருவிழா நடந்ததற்கான அடையாளமே தெரியாதபடி கோவில் வெறிச்சோடி விடும்.




இந்த வைரவர் கோவில் பெரிய தொரு கோவிலுமில்லை. கோவிலை அண்டி குடிமனைகள் கூட இல்லை. கோவிலிலிருந்து அரை மைல், முக் கால் மைலுக்கப்பால்தான் குடிமனை கள் அமைந்துள்ளன. கோவிலின் இடதுபுறமும் வலதுபுறமும் வயல் வெளிகளும், பின்புறமாக இந்துக் களின் சுடலையும், அதற்குப் பின்புற மாக வயல்வெளியும், அதைத் தாண்டிச் சென்றால் பனங்கூடல் களிடையே கிறிஸ்தவர்களுக்கான சவக்காலையும் உள்ளன. கோவிலின் முன்புறமாகச் சிறிய சிதைவடைந்த கேணியும், அதற்கும் அப்பால் சிறிய மடமும் அதை ஒட்டினாற் போல் தெற்கு வடக்காக கிறவல் வீதியும் உண்டு. அவ்வீதியால் தெற்குப் பக்கமாக் சிறிது தூரம் சென்றால் கடற்கரையை அடைந்து விடலாம்.

பெரும்பாலும் அந்தக் கோவில் சுற்றாடல் சனநடமாட்டம் குறைந்த ஒரு பகுதி யாகவே இருந்தது. காலை, மாலையில் கடற்றொழிலாளர் அவ்வீதியால் போக்கு வரத்துச் செய்வர். அதைவிட சுடலைக்கும் சவக்காலைக்கும் இறுதிச் சடங்குக்கு வரும்போதுதான் அப்பகுதியில் அதிக சனநடமாட்டத்தை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலையால் வேயப்பட்ட சிறு கொட்டி லில் வைரவ சூலம் வைக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கு நாளாந்த பூசையும் நடப்ப தில்லை. வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் அந்தக் கோவிலுக்கு உரிமை கோரும் குடும்பத்தில் ஒருவர் விளக்கேற்றுவார். அந்தக் குடும்பமே வழி வழியாக அதனைப் பராமரித்து வந்துகொண்டிருக் கிறது.

"நாளைக்கு வேள்வி போலை. இப்பவே 'லவுட் ஸ்பீக்கர்...' போட்டுட் டாங்கள்" என்றான் யோகேந்திரன்.

"ஓ... நாளைக்கு இவ்விடமெல்லாம் ஒரே கலகலப்பாகத்தான் இருக்கப் போகுது" என்றபடி சைக்கிளை வேகமாக மிதித்தான் ரவி.

இருவரும் நீண்டகால நண்பர்கள். அவர்கள் ஆலய வழிபாடுகளிலோ, இந்தக் கொண்டாட்டங்களிலோ நம்பிக்கை இல்லாதவர்கள் என்பதோடு, வேள்வி போன்ற மூடப் பழக்கவழக்கங்களை இல் லாதொழிக்க வேண்டுமென்ற அவாவும் கொண்டவர்கள். ஆனால், இவற்றைச் செய்பவர்களது கூட்டம் வலுவானதென்ப தால் நேரடியாக எதுவும் செய்ய முடியா திருந்தனர்.

நேரம் கிடைக்கும் மாலை வேளை களில் இருவரும் கடற்கரைப் பக்கம் போய் அங்குள்ள கடற்றொழிலாளர்களின் மடத்தில் இருந்து நாட்டு நடப்புக்களையும் ஊர்ப் புதினங்களையும் பற்றி அளவாளவி விட்டு வருவதுண்டு. இப்போதும் கடற் கரைக்கே போய்க்கொண்டிருந்தனர். அங்கு போவதானால் வைரவர் கோவிலைக் கடந்துதான் போக வேண்டும். அவர்கள் கோவிலடியைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது,

"நாளைக்கு ஆற்றை கிடாயாம் பெரிய கிடாய்?" என்றான் யோகேந்திரன்.

"வழக்கம் போல இம்முறையும் காங் கேயன்ரை கிடாய்தானாம் பெரிசெண்டு கதைக்கிறார்கள். ஆனா, வேறையும் ஆரோ வெளியில கதை வெளிவராத மாதிரி போட்டிக்கு வளக்கிறான் எண்டும் கேள்வி. உண்மை பொய் நாளைக்குத் தான் தெரியும்."

ரவி இவ்வாறு கூறியதும், "காங்கே யனை வெல்லேலாதடாப்பா. உனக்குத் தெரியும்தானே. அவன் கிடாய் வளக்கிற மாதிரி..." என்றான் யோகேந்திரன்.

காங்கேயனின் கிடாய் வளர்ப்பு முறை பற்றி அந்நாட்களில் கதை கதையாகப் பேசிக்கொள்வார்கள். அவன் கிடங்கு வெட்டி அதைச் சீமெந்தாலை எல்லாம் பூசி, லைற் எல்லாம் போட்டு, கழிவுகள் போறதுக்கு ஏத்த மாதிரி எல்லா ஒழுங்கும் செய்து அதுக்குள்ளை ஆட்டை விட்டுத் தான் வளக்கிறவன். கிடங்குக்கை விட்டு வளக்கிறதுக்கு ரெண்டு காரணம் இருக் காம். ஒண்டு, மற்றவையின்ரை கண் ணிலை வேள்விக்கு முன்னுக்கு கிடாய் தெரியக்கூடாதெண்டது. மற்றது, அப்பிடி கிடாயை கிடங்குக்கை விட்டு மேலை உயரமா இலை, குழையளைத் தொங்க விட்டா, கிடாய் தொங்கித் தொங்கி அதைத் தின்னிறதால் அதுகின்ரை வளர்ச்சியில் உயரம் கூடும் எண்டது. இப்படிப் பலவாறான கதைகள் இருந்தன.

கிடாய்க்கு நேரத்துக்கு நேரம் சாப்பாடு குடுக்க, கிடங்கைத் துப்பரவாக்கவெண்டு ரெண்டு, மூண்டு வேலையாட்களை சம்பளத்துக்கு வைத்துக்கொண்டுள்ளதாக வும் பேசிக்கொண்டார்கள்.

இருவரும் உரையாடியவாறே கடற் கரையை அடைந்து மடத்தில் அமர்ந்து கடற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றைச் சுவாசிக்கத் தொடங்கினர். மெல்லிய காற்றில் கரையில் கட்டி வைக் கப்பட்டிருந்த தோணிகள் அசைந்தாடிக் கொண்டிருந்தன. அங்கே, இரவு மீன் பிடிக் கச் செல்வதற்கான ஆயத்தங்களில் மீன வர்கள் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டி ருந்தனர்.

"இந்தக் காலத்திலையும் இப்பிடி மோட்டுத்தனமா கிடாயை வெட்டுறன், கோழியை வெட்டுறன், பலி குடுக்கிற னெண்டு ஏமாந்து கொண்டிருக்குதுகளே இந்தச் சனம். இதுகளை என்னெண்டு திருத்திறது. இதாலை ஆருக்கு என்ன லாபம்? சரி, இறைச்சி தின்ன ஆசை யெண்டா கடையிலை வாங்கித் தின்ன லாம் அல்லது கிடாயை வாங்கிப் பங்கு போட்டுத் தின்னலாம். கடவுளின்ரை பேரைச் சொல்லி ஏன் இந்த மோட்டுத் தனமான வேலை. ஆடு வளக்கிறவை, தங்கடை ஆட்டுக்கு ஏதும் வருத்தம் வந்திட்டுதெண்டா, அல்லது ஆடு சினைப் பட்டுட்டுதெண்டா ஆட்டுக்குச் சுகம் வந்தா கிடாய் வெட்டுவன், கிடாயக் குட்டி போட்டா ஒரு குட்டி உனக்குத்தான் எண்டெல்லா மெல்லே நேர்த்தி வைச்சு வெட்டுறாங்கள்" என்றவாறாக அந்த மக்களின் செயற்பாடு களைப் பற்றி இருவரும் பேசிக்கொண்டி ருந்தனர்.

"சரி, கோயிலுக்கு நேர்ந்து விடுறியள். அது சரி எண்டு எடுத்தாலும், அதை வெட்டுப் போட்டு கோவிலுக்கே குடுத் திட்டுப் போக வேண்டியதுதானே. அப்பிடி யுமில்லாமை அதைப் பேரம் பேசி விக்கி றாங்கள் அல்லது தாங்களே பங்கு போட்டு விக்கிறியள். இது எந்த விதத் திலையடா கடவுளுக்குப் போகுது? இதிலை இலாப நட்டமெல்லோ மிஞ்சி நிக்கிது? எனத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினான், யோகேந்திரன்.

"உங்களுக்குச் சொல்லி, விளங்கப் படுத்தித் திருத்தேலாது... மச்சான். அப் படிச் சொல்லப் போனா, சொல்லுறவனை 'நாஸ்திகன்' எண்டு முத்திரை குத்து வாங்கள். இதுக்கு ஒரே வழி சட்டம் போடு றதுதான். இவ்வளவு காலத்திலையும் ஆலயங்களில் உயிர்ப்பலி கொடுக்கிற தைத் தடுக்கச் சட்டமில்லைக் கண்டியோ. அப்பிடி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து கொஞ்சப் பேரைத் தண்டிச்சாத்தான் உவங்கள் வளத்திலை வருவாங்கள். மற்றும்படி இவங்களுக்குச் சொல்லிப் பிரயோசனமில்லை" என்று தனது கருத்தைச் சொன்னான் ரவி.

"அது சரிதானடாப்பா. 'மாட்டுக்கு மாடு சொன்னா கேக்காது. மணிகட்டின மாடு சொன்னாத்தான் கேக்கும்' எண்டு எங்கடை பெரியவை சொல்லி வைச்ச மாதிரி கடுமையான ஒரு சட்டம் வந்தாத் தான் உதுகளுக்கு முடிவு கட்டலாம்" என ரவியின் கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளும் பாங்கில் பேசினான் யோகேந்திரன்.

நேரம் போவதே தெரியாது பேசிக் கொண்டிருந்த இருவரும், நன்கு இருட்டி விட்ட பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கோவில் பக்கமாகவே வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். மின்சார வசதியில்லாத அந்தப் பக்கத்தில் கார் பற்றரி மூலம்தான் ஒலிபெருக்கி இயங்கிக் கொண்டிருந்தது. பற்றரி பழையதோ, 'சார்ஜ்' குறைந்ததோ தெரியவில்லை ஒலிபெருக்கி ஈனஸ் வரத்தில் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. கோவில் உரிமையாளர் "பொங்கல் பொங்க விரும்பும் அடியார்கள் உரிய காலத்துடன் வந்து அதற்கான ஆயத்தங் களைச் செய்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என இடையிடை அறிவித்துக்கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலடி என்றுமில்லாதவாறு மின் அலங்கார விளக்குகளால் பகல் போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது. 'லைற் எஞ்ஜின்' மூலமே மின்சாரம் வழங்கப் பட்டுக் கொண்டிருந்தது. கோவிலின் முன் புறத்தில் கடா வெட்டும் இடம் சதுர வடி வில் கயிறுகளால் பிரித்து விடப்பட்டி ருந்தது. பக்கத்தில் அரைவாசி தூர்ந்து போன கேணியைச் சுற்றி யாரும் விழுந்து விடாதவாறு பாதுகாப்பாகக் கயிறு கட்டி விடப்பட்டிருந்தது.

பொங்கலுக்காக வந்திருந்த பெண் களும் அவர்களுக்கு உதவியாக வந்த பிள்ளைகள் அல்லது கணவன்மாரும் பொங்கலுக்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இவற்றை அவதானித்தவாறே ரவியும் யோகேந்திர னும் கோவிலடியைக் கடந்து சென்று கொண்டிருந்தனர்.

**ம**றுநாள் காலை ஆறு மணியான போதே வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் கிடாய்களைக் கொண்டு செல்லும் ஆர வாரம் தொடங்கிவிட்டிருந்தது. மேள தாளத்துடன் கொண்டு செல்வோரும், கிடாய்க்கு மாலை போட்டுக் கொண்டு செல்வோரும், வண்டில்களில் ஏற்றிச் செல்வோருமாகச் சென்றுகொண்டிருந் தனர். கிடாய்களின் வயிறுகள் வீங்கிப் புடைத்திருந்தன. தோற்றத்தைப் பெரி தாகக் காட்டி அதிக விலை விற்பதற்காக இரவிரவாக அளவுக்கதிகமான உணவை ஊட்டியதாலேயே அப்படி வயிறுகள் புடைத்திருந்தன போலும்.

ஆங்காங்கே மறி ஆடுகளைக் கொண்டு செல்வோரும் தென்பட்டனர். 'எரிஞ்ச வீட்டில பிடுங்கினது அறுதி' என்பது போல, சாகப் போகிற கிடாய்கள் மூலம் இலவசமாகத் தமது ஆடுகளைச் சினைப்படுத்திவிடும் நோக்கில் சிலரும், கேள்விக்காகக் கொண்டுவரப்படும் கிடாய் களில் அதிகமானவை ஒழுங்குமுறைப்படி வளர்க்கப்பட்ட, உயர்ந்த இனத்தவை என் பதால், அந்த வகையான பரம்பரையை உண்டாக்கும் நோக்கில் சிலருமாக கணிச மான மறி ஆடுகளையும் கொண்டு சென்றுகொண்டிருந்தனர்.

சில கடா சொந்தக்காரர்கள், 'சற்று நேரத்தில் சாகப் போவதுதானே' எனச் சினைப்படுத்தும் கைங்கரியத்துக்குச் சம் மதிப்பார்கள். ஆனால், சிலரோ சம்மதிக் கவே மாட்டார்கள். சினைப்படுத்தும் நட வடிக்கைக்கு ஒத்துழைத்தால், தமது கடா வின் கம்பீரம் குறைந்து விடும், வீரியம் குறைந்து சோர்வடைந்து விடும். அதனால் விலை வீழ்ச்சி கண்டுவிடும் என அனு மதிப்பதேயில்லை.

பல கடாய்கள் கோவிலடிக்குக் கொண்டுவரப்பட்டு விட்டன. இன்னும் வந்துகொண்டுமிருந்தன.

இரண்டு, மூன்று கூட்டம் நாதஸ்வர, தவில் கச்சேரியுடன் காங்கேயனின் கடாய் வந்துகொண்டிருப்பதான செய்தியும், நாதஸ்வர ஓசையும் கேட்டு வீடுகளிலிருந் தவர்கள் வீதியை நோக்கி ஓடுகிறார்கள், பார்ப்பதற்காக.

பெரியதொரு கூட்டம் சூழ வர, மாலை போட்டு நெற்றியில் குங்குமம் இட்டு அலங்கார நாயகனாய் காங்கேயனின் கடா வண்டில் ஒன்றில் வந்துகொண்டிருந்தது. கடாயால் நடக்க முடியவில்லை. சுமார் நாலடி உயரம் வரை மதிப்பிடக்கூடிய பருத்த தோற்றத்துடன், நடுத்தர மாடு அள வான மாடு போல அது காட்சியளித்தது. வயிறு நன்கு புடைத்திருந்தது. எள்ளுப் புண்ணாக்கைப் பொடியாக்கி தண்ணீரில் ஊறவைத்து, அடிப்பாகத்தில் உறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் குறுணிகளை நீக்கியபின் போத்தலில் நிரப்பி, கடாயின் நாக்கை கடவாய் பக்கத்தால் வெளியே இழுத்து வைத்துக் கொண்டு போத்தலை வாயில் விட்டுச் சரிக்க, வேறு வழியின்றி விழுங்கியே ஆகவேண்டும் என்ற நிலையில் மடக்... மடக்கென கடாய் அந்தப் பதார்த்தத்தை மென்று விழுங்கிவிடும். காங்கேயனின் ஆடு வளர்ப்பில் இதுவும் ஒரு உண வூட்டும் முறையாக இருந்தது.

இரவிரவாக மூன்று, நான்கு தடவைகள் இவ்வாறு எள்ளுப் புண்ணாக்குக் கலவையைப் பருக்கியதால்தான் கடாயின் வயிறு இத்துணை பெரிதாகியிருந்தது.

எங்கிருந்தோ வந்து அந்தக் கூட்டத்தில் நுழைந்த இருவர், காங்கேயனின் கடாயைப் பார்த்துவிட்டு, "எட இது என்னடா கிடாய்... நாங்கள் வளத்த கணேசன்ரை கிடாய் எல்லே கிடாய்... அதுகின்ரை வாலிலை தொங்க வேணும் இது. இந்த முறை எங்கடை கிடாய்தான் தலைக் கிடாய்" என நக்கலாகப் பேசினான் வந்த இருவரில் ஒருவனான கோவிந்தன்.

"ஓமண்ணை, அது 'லாண்ட றோவரி'லை வாற வடிவைப் பாக்க வேணுமே... அது கண்கொள்ளாக் காட்சி யெல்லே!" எனக் காங்கேயன் பக்கத்தினரை வெறுப்பேத்தினான் மற்றையவனான சுந்தரம். கணேசனின் கடாயை வளர்த்தவர்கள் இந்தக் கேவிந்தனும் சுந்தரமும்தான்.

கணேசன் வீட்டில் இரவிரவாக நடந்த தண்ணிப் பாட்டியில் வயிறு முட்டக் குடித்துவிட்டு நிதானமிழந்துவிட்ட நிலையில் இருவரும் காங்கேயனின் கடாயைப் பார்க்கும் ஆவலால் வந்திருந்தனர்.

காங்கேயனின் கிடாய் வளர்ப்பில் ஈடுபட்டவர்களுக்கு இவர்களது நக்கலையும் நையாண்டியையும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இரு தரப்பினருக்குமிடையே வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியது. அங்கு நின்றவர்களில் பலர் காங்கேயன் தரப்பினர் என்பதால் கோவிந்தனும் சுந்தரமும் நையப் புடைக்கப்பட்டனர்.

அவர்களிடையே மோதல் இடம்பெற்றதைக் கவனத்திற் கொள்ளாத காங்கேயனின் மனக்குதிரை, அவங்கள் சொல்வது போல அந்தக் கணேசனின் கிடாய் முதலிடத்தைப் பிடித்துவிடுமோ என்ற வாக்கில் ஓடிக்கொண்டிருந்தது.

"எங்களைப் அடிச்சுப் போட்டம் என்டு கொக்கரிக்காதையுங்கோ. [illegible] வெட்டு முடியட்டும். என்ன ந[illegible] பாருங்கோ" என எச்சரித்தான் கோவிந்தன், உள்ளே இறக்கிய தண்ணியின் வீச்சு குறைந்துவிட்ட நிலையில்.

"அதையும்தான் பாத்திடுவம்" என்றான் காங்கேயனின் கடாய் வளர்ப்புக்காரனான மாணிக்கம்.

"கிடாய் வளர்க்கிறாங்களாம் கிடாய். இந்த முறை நீங்கள் தோக்கத்தானே போறியள். திரும்பவும் சொல்லுறன். இந்த முறை கணேசன்ரை கிடாய்தான் முதல் இடத்தைப் பிடிக்கப் போகுது" என்று சொல்லிக்கொண்டே சுந்தரமும் கோவிந்தனும் குறுக்குப் பாதையாகப் பாவிக்கப்பட்ட வயல்வெளியூடாகச் சென்றனர்.

"அப்பிடி நடந்தா இனிமேல் கிடாய் வளக்கிற வேலையையே நான் செய்யப் போறதில்லை" எனச் சூளுரைத்தான் மாணிக்கம். வெளியிலே இப்படிப் [illegible] கொண்டாலும் அவனது உள்[illegible] சிலவேளை தோற்றுவிடுவமோ [illegible] பயம் தொற்றிக்கொள்ளவே செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கா**லை ஏழு மணிக்கெல்லாம் அதிகளவான கடாய்கள் வந்து சேர்ந்துவிட்டிருந்தன. கடாய் வாங்குவோரும் விற்போரும் வெட்டுவதற்கு முன்பாகவே விலை பேசும் படலத்திலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கடாய் வெட்டப்பட்ட பின் அதன் தோற்றப் பொலிவு குன்றி விடும் என்பதால், உயிரோடு இருக்கும் போதே விலையைப் பேசி முடித்துவிட சில கடாய்ச் சொந்தக்காரர் விரும்புவர். வாங்க வந்த சிலரும் இதே நோக்கில், வெட்ட முன்னர் வாங்குவதைத் தவிர்த்துக் கொள்வர். இருந்தும் விற்பனையும், வாங்குதலும் இடம்பெற்றுக்கொண்டு முற் கொடுக்கல் வாங்கல்களும் நடந்து கொண்டிருந்தன.

யோகேந்திரனும் ரவியும் சனத்தோடு சனமாக அங்கு நடப்பவற்றைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர்.

மேள தாள வாத்தியங்களுடன் பெருங் கூட்டம் சூழவர ஆடல் பாடல்களுடனும் மாலை மரியாதைகளுடனும் 'லான்ட் மாஸ்டர்' ஒன்றில் கணேசனின் கடாய் கம்பீரமாக வந்து சேர்ந்தது. உண்மையில் அது முதலிடத்தைப் பிடிக்கக்கூடிய கடாய் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாதுதான்.

காங்கேயனின் கடாயை விலைபேச சிலர் வந்தபோது, "எண்ணூறு ரூபா வெண்டா ஆருக்கும் தருவன்" எனக் கறாராகத் தெரிவித்தான் அவன். காங்கேயனின் கடாயைச் சுற்றிப் பெருங் கூட்டம் ஒன்றும் கூடியிருந்தது.

"அறுநூறு ரூபாவுக்கு மேலை பெறாது. அந்த விலையெண்டா, இப்பவே முழுக்காசும் தரலாம். வெட்டின பிறகு கிடாயைத் தந்தா சரி" என்றார் ஒருவர்.

காங்கேயன் அதற்குச் சம்மதிக்கவில்லை.

சிறிது நேரத்தில் கணேசனின் கடாய் வந்து சேர்ந்ததும் ஒட்டுமொத்தக் கூட்டமும் ஒன்று சேர்ந்துவிட்டதைப் போன்று அங்கு கூடிவிட்டிருந்தது. இது காங்கேயன் குழுவினருக்கு எரிச்சலையூட்டுவதாக இருந்தது. காங்கேயனாலோ, மாணிக்கன் உட்பட்ட அவர்களது ஆட்களாலோ இந்தத் தோல்வியை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. அதிலும் மாணிக்கன் வெறி பிடித்தவன் போலக் காணப்பட்டான்.

காங்கேயன் நிதானமாகச் சிந்திக்கும் நிலையை இழந்துவிட்டிருந்தான். தனது இடுப்பிலிருந்து வேட்டி கழன்று விட்டது போன்றதொரு உணர்வு அவனுக்கு.

"டேய் மாணிக்கம்... நான் வீட்டை போறன். கேக்கிற விலைக்குக் கிடாயைக் குடுத்திட்டு வந்து சேர்... என்னாலை இங்கை நிக்கேலாது..." எனச் சொல்லிக் கொண்டே 'விறு விறு' எனப் போய்க் காரில் ஏறிச் சென்றுவிட்டான்.

இதை அவதானித்த கணேசன் கூட்டத்தினர், "தோத்துப் போய் ஓடுறாங்களடா" எனக் கைகொட்டிச் சிரித்தபோது, "கிடாய் வெட்டு முடியட்டும்" என மனதுள் கறுவிக் கொண்டான் மாணிக்கம்.

'எரியிற நெருப்பிலை எண்ணெய் வார்த்தது போல' - "என்னடா மாணிக்கம், இப்பெண்டாலும் உங்கடை தோல்வியை ஏத்துக்கொள்ளுறியளே?" எனக் கிண்டலடித்தான் கோவிந்தன்.

"நீ எவ்வளவு துள்ளுறாய் எண்டு பாத்துக்கொள்ளுறன்" என்ற மாணிக்கம். கோவிந்தனுக்கு காலையில் குடுத்தது காணாது, நல்லதொரு பாடம் புகட்ட வேணும் எனத் தீர்மானித்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகாலமும் இல்லாது காங்கேயன் தலைகுனிந்து கொண்டு போன காட்சியை மாணிக்கனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் கணேசன்ரை கிடாய் வளர்த்த கோவிந்தன் மேல் கோபம் கோபமாக வந்தது அவனுக்கு.

படையல்கள் முடிந்ததும், கோவில் விளக்கு வைப்பவருக்கு உரு வந்துவிட்ட தாகப் பேசிக்கொண்டனர். கோவிலைச் சுற்றி ஓடியவர், பாம்பு மூச்சு விடுவது போல் உஷ்... உஷ்... உஷ்... என்று செய்த படி கோவிலின் சுவர் மீது சாய்த்து வைக் கப்பட்டிருந்த கடாய் வெட்டும் கத்தியைத் தூக்கிக்கொண்டு உடலை அசைத்தபடி ஓடிவந்து தேசிக்காய் ஒன்றை எடுத்து கத்தியின் முனையில் குத்திவிட்டு கடாய் வெட்ட ஆயத்தமானார்.

ஒரு கடாய் வெட்ட பதினைந்து ரூபாவும், சேவல் வெட்ட மூன்று ரூபாவும் என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. கடாய் உரிமையாளர்கள் தமது கடாயை வெட்டுவதற்கான கட்டணத்தைக் கட்டியபோது, கடாய்களை வெட்டுவதில் ஓர் ஒழுங்கு முறையைக் கடைப்பிடிப்ப தற்காக இலக்கத் துண்டுகள் கொடுக்கப் பட்டிருந்தன. அதன்படி முதலாம் இலக் கத்தைப் பெற்றிருந்த பெரிய கடாய் ஒன்று முன்னால் கொண்டு வந்து நிறுத்தப் பட்டது. ஒருவர் கடாயின் இரு பின்னங் கால்களைப் பிடித்து சற்றுத் தூக்கிக் கொள்ள தலையை அங்கிங்க அசைய விடாது கொம்புகளோடு சேர்த்துச் செவி களை மற்றொருவர் பிடித்துக்கொள்ள ஏதோவொரு ஓர் ஒலியை எழுப்பியவாறு ஒரே முறையில் கடாயின் கழுத்து வேறு, உடல் வேறு ஆகுமாறு வெட்டினார். வெட்டும் காட்சியைப் பார்ப்பதற்காக சனக்கூட்டம் முட்டி மோதிக்கொண்டி ருந்தது.

ஒரு கடாயை வெட்டியதுடன் அவர் கத்தியை வேறொருவருடன் கொடுத்து விட, கடாய்களையும், சேவல்களையும் கத்தியைப் பெற்றவர் வெட்ட ஆரம்பித் தார். கடாய் வெட்டுபவருக்கு ஒரு கடாய்க்கு மூன்று ரூபாவும், சேவலுக்கு ஐம்பது சதமும் தருவதாகப் பொருத்தப் பட்டிருந்தது.

ஒவ்வொரு கடாயும் வெட்டப்பட்டதும் தலைப்பாகத்தைப் பிடித்தவரும் கால் களைப் பிடித்தவரும் ஒருபக்கமாக அவற்றை வீச, கடாய்ச் சொந்தக்காரர் அல்லது அவரது உதவியாளர்கள் வேறொரு இடத்திற்குக் கொண்டு சென்று உடலுடன் தலை பொருந்துமாப் போல் கிடத்தி வைத்துக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சியானது கடாய் உடலையும் தலையையும் நிலத்தில் சாய்த்துப் படுப்பது போல் இருந்தது.

சேவல்களை மிக இலாவகமாக வெட்டி வீசியதும், உடல் துள்ளிக் குதித்து அங்கிருப்பவர்களின் உடைகளில் இரத்தத்தைப் பீச்சியடிக்கும் காட்சிகளும் நடந்துகொண்டிருந்தன. ஒரே வெட்டில் தலை வேறு உடல் வேறாக வெட்டா விட் டால் தனது திறமையைக் குறைத்து மதிப் பிட்டு விடுவார்கள் என்பதால், ஓங்கி ஓங்கி கடாய்களை வெட்டிக்கொண்டி ருந்தார் வெட்டுபவர்.

"இவன் திறமான வெட்டுக்காரன டாப்பா" என வெட்டுபவரின் திறமையை மெச்சிக்கொண்டிருந்தனர் சிலர்.

ஒருபுறம் கடாய் வெட்டு நடந்து கொண்டிருக்க, வெட்டிய கடாய்களுக்குப் பேரம் பேசல்களும் நடந்துகொண்டி ருந்தன. பேரப் பேச்சுக்களின் போது தமக்கு ஒத்துவராத விலையை யாரும் கேட்டுவிட்டால், "நான் கொண்டுபோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு போட்டா, இதைவிடக் கூடுதலான காசு கிடைக்கும்'' எனச் சிலர் சீறி விழுந்துகொண்டுமிருந்தனர்.

காங்கேயனின் கடா வெட்டப்பட்டதும் பலர் அதற்கு விலை பேசத் தொடங்கினர். "எண்ணூற்றைம்பது ரூபாய்க்கு ஒரு சதம் குறைஞ்சாலும் தரமாட்டன். நானே கொண்டுபோய்ப் பங்கு போடுவன்'' என உறுதியாகக் கூறிக்கொண்டிருந்தான் மாணிக்கன். அறுநூற்றைம்பது ரூபா வரை கேட்ட ஒருவருக்குக் கூடத் தர மறுத்து விட்டான்.

எள்ளுப் புண்ணாக்கையே அதிகம் தின்று வளர்ந்ததென்பதால், அதன் கொழுப்பும் இறைச்சியும் நன்கு சுவையாகவும், நல்லதொரு மணம் வீசுவதாகவும் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்தபோதும், பங்கு போடும் கணக் கைப் பார்த்து விலையைக் குறைத்துக் கேட்டுக்கொண்டிருந்தனர். உண்மையில் வியாபார நோக்கில் பங்கு போட்டால், அவன் சொல்லும் தொகைக்குப் பங்கு போட முடியாதுதான்.

அதேவேளை கணேசனின் கடாய் தொளாயிரம் ரூபா வரை கேட்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவன் ஆயிரத்து நூறு என்றால் ஆருக்கும் குடுப்பன் என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

விற்பனையான கடாய்கள் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருந்தன. தொடர்ந்து விற்பனைகள் நடந்துகொண்டு மிருந்தன.

''கடைசி விலையைச் சொன்னா எடுக்கிறதோ இல்லையோ என முடிவைச் செய்யலாம்'' என ஒருவர் கேட்க,

"நான் கடைசி விலையாத்தான் முன் னூறு ரூபா சொன்னனான். நீங்கள் இரு நூற்றைம்பது கேட்டா எப்பிடித் தரேலும்?'' எனக் கேட்டான் மற்றொரு கடாய்க் காரனான சந்திரன்.

"சரி, இன்னொரு இருபது ரூபாயைக் கூட்டித் தாறன். கையை விடப்பா'' என கடாயின் கால் பகுதியை நோக்கிக் கையை நீட்டினார் வாங்க வந்தவர்.

''கிடாயிலை தொடாதையும். ஒரு கணக்கைப் போட்டுப் பாரும். பங்கு வைக் கிறதெண்டா பதினைஞ்சு பங்கு வைக்க லாம் இருபது ரூபாப்படி... தலையும் நாலு காலும் இருபத்தைஞ்சு ரூபாய்க்குக் குடுக்கேலும்... குடல் பதினைந்து ரூபாய்க் குக் குடுக்கேலும். தோல் பத்து ரூபாய்க் குக் குடுக்கேலும். எப்பிடிப் பாத்தாலும் முன்னூற்றி ஐம்பது ரூபா தேறும். நான் சொன்ன விலைக்கு உமக்கு நட்டமே?'' எனக் கணக்குக் காட்டியும் அவர் சம்மதப் படாதபோது,

இவர்களின் பேரத்தை அவதானித்துக் கொண்டிருந்த மற்றொருவர் இடைபுகுந்து,

"இருநூற்றி எழுபதெண்டா நான் எடுக் கிறன்'' என்று சொன்னதும் சற்று யோசித்த சந்திரன், இன்னுமொரு பத்து ரூபாயை வைத்துத் தாப்பா'' என இறங்கி வந்தார்.

''இல்லை. நான் நியாயமாகத்தான் கேட்டனான். நான் கேட்ட விலை எண்டா உடனை காசு தாறன். பிறகு பின் எண்ட இழுபறி இல்லை'' என கறாராகப் பேசி யதும் கடாய்க்காரர் விற்பனையை முடித் துக்கொண்டார். தானே கொண்டு சென்று பங்கு போட்டிருந்தால், குறைந்தது முன் னூற்றைம்பது தேறியிருக்கும் என்ற எண்ணம் இருந்தாலும், பங்கு போட்டு விற்பதில் உள்ள நடைமுறைச் சிக்கலை சந்திரன் நன்கறிவான்.

பங்கிறைச்சி எடுப்பவர்கள் எல் லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனேயே பணத்தைக் கொடுத்து விடுவதில்லை. பிறகு தருவ தாகச் சொல்லி வாங்கிச் செல்வர். பின்னர் அதை வாங்கிச் சேர்ப்பதற்குள் முதலில் சேர்ந்த காசு வேறு தேவைகளின் பொருட்டுக் கரைந்து விடுவதுண்டு. எனவேதான் குறைந்தாலும் உடன் காசுக்குக் கொடுத்து விட முடிவு செய்திருந்தான் சந்திரன்.

கப்பல் போன்ற காரிலிருந்து வெள்ளையும் சுள்ளையுமாக வந்திறங்கிய மூவர் அங்குள்ள கடாய்கள் எல்லா வற்றையும் சுற்றிப் பார்த்தனர். பின்னர் காங்கேயனின் கடாயையும் கணேசனின் கடாயையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு இறுதியில்,

அவர்கள் கணேசனின் கடாயைக் கேட்டதும், "தொளாயிரம் கேள்வியில் இருக்கு. ஆயிரத்து நூறுக்கு உடன் காசெண்டா ஆருக்கும் குடுப்பன்" என்றான் அவன்.

வந்தவர்கள் தமக்கிடையே பேசிக் கொண்டனர். "சாமான் சங்குதான். இங்கை உள்ளதிலை இதுதான் பெரிசும். இதை வாங்குவம்" என ஒருவர் தெரி விக்க, மற்றவர்களும் சம்மதம் தெரி வித்தனர்.

"ஆயிரமெண்டா சொல்லப்பா. மனதுக் குப் பிடிச்சபடியாத்தான் அந்த விலை. பெறுமதிக்கு அது வராது" என அவரும் விட்டுக்கொடுக்காமல் பேசினார்.

கணேசனும் படிந்து வந்தான். அந்த விலைக்குச் சம்மதம் தெரிவிக்க வியா பாரம் முடிந்தது.

"இஞ்சை ஆரும் கிடாயை உரிச்சு பங்குபோட்டுத் தரக்கூடியவையை புடிக்கேலுமே. உரிக்கிறவைக்கு ஆட்டுத் தோலும், கால்களும் குடுத்து இருவத் தைஞ்சு ரூபா காசும் குடுப்பம்" என்றான் கடாயை வாங்கியவன்.

"கோவிந்தனும் சுந்தரமும் போய் உரிச்சுக் குடுத்துப் போட்டு வாறியளே?" என்று கணேசன் கேட்டதும் இருவரும் ஒத்துக்கொண்டு அவர்களோடு புறப்பட ஆயத்தமாயினர்.

கடைசியாக காங்கேயனின் கடாய் எழுநூற்றைம்பதுக்கு விலை போனது. கோவிலடியை விட்டுப் போகும் போது, "உன்னைப் பாத்துக் கொள்ளுறன்ரா" என கோவிந்தனைப் பார்த்து எச்சரித்துக் கொண்டே போனான் மாணிக்கம்.

"குலைக்கிற நாய் கடிக்காதடா. போ... போ... போய் காங்கேயனிட்டை வாங்கிக் குடி..." என மேலும் வெறுப்பேத்தினான் கோவிந்தன்.

அங்கங்கே விலை போகாத கடாய் களும், விலைபோகாத கடாய்களும் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டி ருந்தன. மெல்ல மெல்ல கோவில் சூழல் வெறிச்சோடத் தொடங்கியது. அங்கு நடந் தவைகளை எல்லாம் கண்ட பெருமூச்சு விட்டவாறே ரவியும் யோகேந்திரனும் சனத்தோடு சனமாகப் போய்க்கொண்டி ருந்தனர்.

சிறிது நேரத்தில் ஆளரவமற்ற பகுதி யாகி விட்ட கோவிலடியில் கடாய் வெட்டப்பட்ட இடத்தில் சிதறிக்கிடந்த இரத்தத் துணிக்கைகளை உணவாக்கிக் கொள்ளும் முயற்சியில் காகங்கள் பறந்து பறந்து ஈடுபட்டுக்கொண்டிருந்தன.

மாலை ஆறு மணியிருக்கும்.

ரவியின் வீட்டுக்கு வந்த யோகேந்திரன், "என்னடா நீ வீட்டுக்கை கிடக்கிறாய். பிந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி தெரியுமே மச்சான்? அவன் கோவிந்தனை எல்லே மாணிக்கன் குத்திக் கொண்டு போட்டானாம்'' என்று தான் அறிந்த தகவலைச் சொன்னான்.

''என்னடா சொல்லுறாய்? ஆருக் காகவோ சண்டை பிடிச்சு இப்ப கொலை யிலை போயிற்றுதே? எங்கையாமடா நடந்தது?''

''மணியங்கடை சந்தியிலைதான் நடந் திருக்கு. இவன் கோவிந்தன் எங்கேயோ கிடாய் உரிக்கப் போனவனாம். அவங்கள் ஊத்திக் குடிச்சதை வயிறு முட்டக் குடிச் சிருக்கிறான். அது போதாதெண்டு, கணே சன் வீட்டிலையும் இண்டைக்குப் பெரிய பாட்டியாம். அங்கையும் உரும்பிரா யானைக் குடிச்சுப் போட்டு வீட்டை போகேக்கை தான் எங்கையோ மறைஞ்சு நிண்ட மாணிக்கன் இவனைக் குத்திப் போட்டு ஓடிப் போனதா கதைக் கிறாங்கள்.''

''இஞ்சாலை ஒருத்தருக்கும் தெரியாது போல. இதைப் பற்றி ஆரும் கதைப் பாரில்லை'' என ரவி சொன்னபோது,

''நீ வீட்டுக்கை இருந்தா என்னெண்டு தெரியும். றோட்டிலை பார், கூடிக்கூடி நிண்டு இதுதானே கதையாக் கிடக்கு'' எனச் சொல்லிக்கொண்டு யோகேந்திரன் போவதற்காக வெளியே வந்தபோது, சனம் கூடிக்கூடிக் கதைத்துக்கொண்டிருந்தது.

''கிடாய் வளத்து கடவுளுக்குப் பலி குடுக்க வெளிக்கிட்டு, இப்ப கிடாய் வளத்தவனையும் பலி குடுத்தாச்சு'' எனக் கூறியபடி சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான், யோகேந்திரன்.


# Happy Photo

**Excellent Photographers**
**Modern Computerized Photography**
**For**
**Wedding Portraits**
**&**
**Child Sittings**

***Photo Copies of Identity Cards (NIC), Passport & Driving Licences Within 15 Minutes***

**300, Modera Street,**
**Colombo - 15.**
**Tel : 2526345**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகமயப்படும் பதிப்புத்துறையில் விடியல் சிவாவின் பங்களிப்பு



அண்மைக்காலத்தில் மார்க்சியம் சார்ந்தும் சமூக மாற்றம் தொடர்பிலும் பன்முகப்பட்ட உலகளவிலான வாசிப்புக்குரிய படைப்புகள் வேற்று மொழிகளிலிருந்து தமிழாக்கித் தரப்பட்டிருந்ததை அறிவோம். அத்தகைய நூல்களை அதிகம் தந்தது விடியல் பதிப்பகம் என்பதும் அறிவோம். அதன் சூத்திரதாரி என்கிறவகையில் பதிப்பக உரிமையாளர் விடியல் சிவா என அழைக்கப்பட்டார். அவரது மறைவுச் செய்தி அறிந்ததும் பலரும் துயருற்று அஞ்சலிச் செய்திகளை வெளியிட்டிருந்ததை கண்ணுற்றோம். சமூக வலைத் தளங்கள் மேலாதிக்கத்துக்கு பயனளிக்க உள்ள வாய்ப்பு எவ்வளவு இருந்தபோதிலும், அதனை சமூக மாற்றத்துக்கு பயனுள்ள வகையில் கையாள இருக்கும் வாய்ப்பு முற்போக்கு சக்திகளால் தவறவிடப்பட்டிருக்கவுமில்லை. விடியல் சிவாவின் மறைவையடுத்து சமூகவலைத் தளத்தில் வெளிப்பட்ட கருத்தாடலில் இப்பண்பைக் காண இயலுமாயிருந்தது. அவை வெறும் அஞ்சலிக் குறிப்புகளாயல்லாமல் சமூகமாற்றப் பங்களிப்பில் விடியல் சிவாவின் இடம் பற்றிய தேடலாய் அமைந்தன.

இங்கு அந்த மதிப்பீடுகள் சார்ந்து மட்டுமன்றி என் சொந்த அனுபவம் சார்ந்தும் சில கருத்துப் பதிவுகளை முன்வைப்பேன். பாலாஜியின் சவுத்விசனில் அவரைக் காணச் சென்றபோது உடனிருந்த விடியல் சிவாவை அங்கு சந்தித்து உரையாடியது முதல் சந்திப்பாக அமைந்தது. பின்னர் புத்தகக் கண்காட்சிகளில் காண முடிந்தபோதும் ஆற அமரக் கதைக்க வாய்த்ததில்லை. திருச்சிக்கு வந்திருந்த வன்னியசிங்கத்தைக் காணச் சென்றபோது அவர் தொலைபேசி வாயிலாக விடியல் சிவாவுடன் உரையாட ஏற்பாடு செய்திருந்தார். ஹொரேஸ் பி டேவிஸ் இன் 'தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு' நூலுக்கு ஒரு விமர்சனம் எழுதுமாறு கேட்டுக் கொண்டார். தனி விமர்சனமாயல்லாது எமது தேசிய இனப்பிரச்சனைத் தீர்வில் அந்த நூல் திசைப்படுத்தும் வலுவான பங்களிப்பு என்பதான முழுமையான கட்டுரையாக்கி மல்லிகை ஆண்டு மலரில் வெளிவரச் செய்தேன். அந்த மலரை அவருக்கு அனுப்பிய போதிலும் கிடைத்தது குறித்தோ வேறுவகையிலோ பின்னர் எந்தத் தொடர்பும் ஏற்படவில்லை. நான் நாடு திரும்பியமையும் தொடர்பு சாத்தியமற்றுப் போனதற்குக் காரணமாயிற்று.



**ந.இரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியல் பல்வேறு காத்திரமான நூல்களை வெளியிட்டிருந்தது. பிரதானமாக சர்வதேசப் புரட்சிகர ஆளுமைகள் தொடர்பிலான நூல்கள் விதந்துரைக்கத் தக்கன. உடன் நினைவில் வரும் நூல்களைக் குறிப்பிடலாம். எர்னஸ்டோ சேகுவேராவின் 'கனவிலிருந்து போராட்டத்திற்கு', ஜோர்ஜ் ஜி. காஸ்டநாடாவின் 'சேகுவேரா: வாழ்வும் மரணமும்', டேவிட் மாசியின் 'ஃபனான்: அல்ஜீரிய வாழ்வும் விடுதலையும்' எனும் மூன்று நூல்கள் பருக்கைப் பதங்களாக அமைய வல்லன. முதலிரு நூல்கள் சேகுவேரா பற்றியன. அவர் தீவிர மார்க்சியவாதியாக அறியப்பட்டவர். அடுத்துள்ள ஃபனான் ஆபிரிக்கத் தேசியம் பற்றிய தேடலை மேற்கொள்ளும்போது மார்க்சியம் போதிய அளவில் உதவவில்லை என விலகல் கொண்டவர். ஆம், விலகலே, மார்க்சியத்துக்கு விரோதமாகப் போனதில்லை. தொடக்கத்தில் நம்பிக்கைவைத்திருந்த மார்க்சியம் தமது இனத் தேசியம் குறித்த தேடலுக்கு ஏற்ற மார்க்கத்தைப் போதிய அளவில் காட்ட எத்தனிக்கவில்லை என்பதோடு மேலாதிக்க ஆக்கிரமிப்பு நாடுகளின் கொம்யூனிஸ்ட்டுகள் என்போரும் பேரின நோய்க்கு ஆட்பட்டவர்களாயே உள்ளனர் என்ற விமர்சனத்தையும் முன் வைத்தார்.

**“ஒடுக்கும் தேசங்களில் புரட்சி நெருக்கடி நிலையடைந்ததில் ஒடுக்கப்படும் நாடுகளின் சுரண்டல் வளம் புரட்சிகர சமூகத்தளத்தைச் சிதைப்பதற்குப் பயன்படுத்தப்படுவதாய் ஒடுக்கும் நாடுகளின் நிலவரம் அமைந்துள்ளது என்பது உண்மையே!”**

அந்த விமர்சனங்கள் அப்படியே ஏற்கத் தக்கன இல்லை என்ற போதிலும் முற்றாகப் புறக்கணிப்பதும் சாத்தியமில்லை. மார்க்சியத்தை வறட்டுத்தனமாக வர்க்கப் போராட்டத்துக்கு உரியது என மட்டுப்படுத்திக் குறுகத்தறிக்கும் போக்கு இல்லாமலில்லை. அதனை முறியடிப்பதாக மேலே குறித்த ஹொரேஸ் பி டேவிஸின் 'தேசியம் குறித்த மார்க்சியக் கோட்பாடு' எனும் நூல் அமைவது, அதனைத் தமிழாக்கி வெளியிட்டதன் வாயிலாக இடைவெளியை நிரப்பிக் கொள்கிறார் விடியல் சிவா என்பதே கவனிப்புக் குரியது. டேவிஸ், 'உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்று சேருங்கள்' என லெனின் அறை கூவித், தேசிய இனப் போராட்டங்களின் பால் கவன ஈர்ப்புச் செய்தமையை மனங் கொண்டு, வர்க்கப் பிரச்சனையோடு தேசிய இனப் பிரச்சனைகளையும் ஆய்வுக்குள்ளாக்குவது மார்க்சியர் பணி என வலியுறுத்தியிருப்பது பொருளுள்ளது.

இன்னுமொன்று, ஃபனான் ஆபிரிக்கா வஞ்சிக்கப்பட்டுள்ள மூன்றாமுலக சக்தியாயுள்ளது எனக்கூறியிருந்ததை மாஓ சேதுங் கவனத்தில் எடுத்தார். ஆபிரிக்கா மீது தீவிர கவனங்குவித்தார். அத்தோடு அமையாது, மூன்றுலகக் கோட்பாட்டை மேலும் விரிவுபடுத்தி சீனாவின் வெளி விவகாரக் கொள்கையில் ஒடுக்கப்படும் முன்னாள் கொலனித்துவ நாடுகள் அனைத்தையும் (ஆபிரிக்க நாடுகளையும்) மூன்றாம் உலக நாடுகளாய்க் கொண்டு நாட்டுக்கும் நாட்டுக்குமான உறவு எனும் அடிப்படையில் இந்நாடுகளுக்கு முன்னுரிமை அளித்தார். சேகுவேராகூட ஆபிரிக்காவில் புரட்சியை எதிர்நோக்கி சில மாதங்கள் பணியாற்றினார் என்பதறிவோம். ஒடுக்கும் தேசங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சி நெருக்கடி நிலையடைந்ததில் ஒடுக் கப்படும் நாடுகளின் சுரண்டல் வளம் புரட்சி கர சமூகத்தளத்தைச் சிதைப்பதற்குப் பயன் படுத்தப்படுவதாய் ஒடுக்கும் நாடுகளின் நில வரம் அமைந்துள்ளது என்பது உண்மையே! அதையும் மீறி அந்நாடுகளின் பாட்டாளி வர்க்கமும் கொம்யூனிஸ்ட்டுகளும் தத்தம் நாடுகள் ஒடுக்கப்பட்ட நாடுகளின் மேல் மேற்கொள்ளும் அக்கிரமங்களுக்கு எதிரா கக் குரல் கொடுத்தே வந்துள்ளனர். வரு கின்றனர்.

பிரதான விடயம், ஃபனானை தமிழாக் கித் தரும்போது மார்க்சிய நிராகரிப்பாள ருக்கு வாய்ப்பாகுமோ என்ற தயக்கம் கொள்ளாமல், வாசகர்கள் மீது ஆளுமை மிக்க நம்பிக்கையை ஏற்படுத்திக்கொண்டு அவற்றை தமிழாக்குவதோடு, மாற்று வாசிப்புக்குரிய படைப்புகளையும் உடனுக் குடன் வழங்குகிறார் என்பதிலேயே அவரது பங்களிப்பின் முக்கியத்துவம் தங்கியுள்ளது. நள்ளிரவில் அவரைத் தேடிப் போகையிலும் அத்தகைய தேடலோடு பலவகை நூல் களின் வாசிப்பில் அவர் மூழ்கியிருப்பதைக் கண்டிருப்பதாய்ப் பல நண்பர்கள் குறிப்பிட் டுள்ளனர். அவர் ஒரு மார்க்சிச-லெனினிச- மாஓ சேதுங் சிந்தனை நெறியாளர் என்ற போதிலும் ட்ரொட்ஸ்கியின் வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கத்தையே வெளி யிட்டிருப்பவர் என்பதிலிருந்து அவரது பல்தளம் சார்ந்த தேடலில் வாசகர்களின் வாசிப்பு விரிவாக்கத்தைக் கோருபவர் என்ற நிலைப்பாட்டை இனங்கண்டு விடுகிறோம்.

இதன் காரணமாக வலுவான அடித் தளமற்ற, கண்டது கடியதை வெளியிட்டுத் தள்ளுபவர் எனும் முடிவுக்கு வந்துவிட இயலாது. அடிப்படையில் மார்க்சியம் பற்றிய ஆழமான புரிதல் ஏற்படவும் சரி யான பிரயோகத்துக்கான நாட்டங் கொள்ள வழிப்படுத்த ஏற்றதாய்யுமுள்ள படைப்பு களையே தேடிக்கண்டறிந்து தமிழ்ப்படுத்தி பதிப்பித்து வந்துள்ளார் விடியல் சிவா. அந்தப் படைப்புகளின் உள்ளடக்கம் சார்ந்து இதனை உறுதிபடக் கூற இயலு மாயிருக்கும் அதேவேளை, அவர் இந்தத் துறையில் பரிணமித்து வளர்ந்த செல் நெறியும் இதற்கான ஆதாரமாயுள்ளது.

இவர் சேலம் அருகிலுள்ள அக்ரகாரா நாட்டார் மங்கலம் என்னுமூரில் 2.6.1955 இல் ஆறு ஆண்களில் நாலாவது பிள்ளை யாகப் பிறந்தவர். நடுவிலானாக அமைவதி லுள்ள சாதக பாதகங்கள் எல்லாம் அவர் வளர்ச்சியில் காணக்கிடக்கிறது. வீட்டில் அவர் தங்குவது அருமை. பயணமொன்றி லிருந்து திரும்பிய கையோடு அடுத்த புறப் பாட்டுக்கான கால அட்டவணையை அவரிடமிருந்து எதிர்பார்க்கலாம் என மகள் குறிப்பிட்டிருந்ததை இங்கு தொடர்புபடுத்திக் காணலாம். தொழில் நுட்பப் பயிற்சி(ஐ.ரி.ஐ.) பெற்று நூற்பாலைப் பணி செய்தபோது மார்க்சியத்தோடு பரிச்சயமேற்பட்டது. இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) இல் இயங்கியவர், அது பிளவடைந்தபோது 'மக்கள் யுத்தக் குழு' எனும் பிரிவில் இயங்கினார். மார்க்சிஸ்ட் கட்சியில் இயங்கிய அ.மார்க்ஸ் தேசிய இனப் பிரச்சனை உள்ளிட்ட சில விவா தங்கள் காரணமாக வெளியேற்றப்பட்ட போது இந்த "மக்கள் யுத்தக் குழு"வில் வந்து சேர்ந்த வேளை 'சீனியராக' இருந்த சிவாவை வயதிலும் மூத்தவராகக் கருதிப் பழகியதாயும், அவரது இறப்பின் பின்னரே தன்னிலும் வயதில் இளையவர் என்பது தெரிந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். மிகுந்த ஆளுமையோடு அவரது தொடர் பாடல் அமைவதற்கு எடுத்துக்காட்டாக இதனைக் கருதுவர். விவாதங்கள் புதிய அணியிலும் முடிந்தபாடாயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.மார்க்ஸ் அங்கிருந்து வெளியேறி 'நிறப்பிரிகை' அணியாக இயங்கிய போதான விவாதங்களைத் தொகுத்து வெளியிடும் பொறுப்பை ஏற்கும்போதே புதிய பதிப்பகமாக விடியல் தோற்றம் பெறுகிறது. அப்போதும் சிவா மக்கள் யுத்தக் குழுவில் இயங்கினார் என்றே தெரிகிறது. அந்த அமைப்புச்சார்ந்த வெளியீடுகளை அவர் பதிப்பித்ததுடன் நீண்ட நாட்கள்(தான் விலகிய பின்னரும்) அவ்வமைப்போடான தொடர்பைப் பேணி வந்துள்ளார். அ.மார்க்ஸ் வெளியீடுகளும் சிவாவை விலகி வேறு தளங்களுக்கு நகர்ந்தமையை அறிவோம். அவ்வேளை பாண்டிச்சேரியின் ஃபிரெஞ்சு ஆய்வு நிறுவனத்துடனான தொடர்பும் அதனோடு இணைந்ததாக எம்.கண்ணன் தொடர்பும் ஏற்பட்டது. இதன்பேறாக ஏராளமான மொழிபெயர்ப்பு நூல்களை வெளிக்கொணர இயலுமாயிற்று.

இந்தப் பணியில் மொழிபெயர்ப்பாளர்களுடனான உறவு எத்தனை வலியது என்பதை உணர்ந்துகொள்ளக் கடினமேதுமில்லை. அது பிரச்சனையை ஏற்படுத்தத் தவறியிருக்காது என யூகங்கொள்ள அவசியமில்லாவகையில் நெருக்கடி தோன்றியுள்ளது. மிக நெருக்கமாக இருந்து அற்புதமான மொழிபெயர்ப்புகளைச் செய்த தோழர்கள் இறுதிக் காலத்தில் மனத்தாபத்துடன் விலகியுள்ளார்கள். அவர்களுடனான உறவை ஒருவகையில் முதலாளி தொழிலாளி வடிவானதாக சிவா பேண முயன்றதாக விமர்சனம் முன் வைக்கப்படுகிறது. இதனை உறவின் நெருக்கடியாகக் கருதலாமேயல்லாமல் குரூரமாய் எவரும் விகாரப்படுத்தவில்லை. பெரும் பின்புலங்கள் இல்லாமல் இத்தனை கனதியான இடது சாரிப்புத்தகங்களை வெளியிட்டு, வெற்றிகரமாக விநியோகித்திருக்கிறார் என்பதே முதன்மை பெறுகிறது என்ற வகையில், இந்த நெருக்கடி திருஷ்டிப் பரிகாரமாகவே பார்க்கப்படுகிறது.

“மாற்று வாசிப்புக்குரிய படைப்புகளையும் உடனுக்குடன் வழங்குகிறார் என்பதிலேயே அவரது பங்களிப்பின் முக்கியத்துவம் தங்கியுள்ளது.”

புற்றுநோய்ப் பாதிப்பில் மரணத்தின் அண்மிப்பை உணர்ந்தபோது ட்ரஸ்ட் ஒன்றை ஏற்படுத்தி பதிப்புப் பணி தொடர ஏற்பாடு செய்துள்ளார் விடியல் சிவா. ஆயினும் அவரது பங்களிப்பின் கனம் காத்திரத்தோடு அவரால் நியமிக்கபபட்ட ட்ரஸ்ட்டினரால் இயங்க இயலாதிருக்கும் என்ற விமர்சனம் எழுந்துள்ளது. ஏற்றவர்களை இனங் காணவில்லை எனும் ஆதங்கம் வெளிப்பட்டுள்ளது. முன்னதாக வணிக வெற்றியில் மேற்கிளம்பிய சிக்கலின் பேறு இது என்பர். எவ்வாறெனினும், உழைப்புக்காக உழைப்பு, லாபத்துக்காக லாபம் என்ற பண வேட்டை முனைப்பாகியிருந்த உலக மயமாதல் சூழலில் வெற்றிகரமாக அற்புதமான இடதுசாரி நூல்கள் பலவற்றைத் தமிழ் கூறு நல்லுலகுக்கு வழங்கியுள்ளார் என்பதன் பேரில் என்றென்றும் சமூக மாற்ற இயக்க சக்திகளின் வணக்கத்துக் குரியவராய் விடியல் சிவா வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# இரண்டு கவிதைகள்



-முல்லை முஸ்ரிபா

## இசைத்தல் அவாவும் காற்றும் காலமும்

இசைத்தல் மரத்துப்போன பியானோவின் நரம்புகளில்
மீளவும் உயிர்ப்பதென்ன
பூக்களும் வியந்து வியாபிக்கும் ஈரநினைவுகளால்
காற்றின் அதிதூரத்திலிருந்து
மெல்லென நாதமிசைக்கிறாய் தேனினிப்பு.

என் மௌனம் தீயெழ
பியானோவின் இசையில் நிரம்பி வழிகிறது
கனவுகளில் உறைந்த நேற்றைய பாடல்

இனி
மீத்துயர் கவியும் வரள்மனசிலிருந்து
நீயெதை மீட்டல் கூடும்

இசைத்தல் மரத்துப்போன பியானோவின் நரம்புகளில்
மீளவும் உயிர்ப்பதென்ன

வசீகரத்தின் லாவண்யம் பூரிக்க
நீ
மேலும் ஒரு காதை தூரம் பறக்கிறாய்
சிறகுகளும் இசைக்க யார் கேட்டால் கூடும்

கரித்துப்போன நானும் நாளும் நரம்புகளுமாய்
அலைந்து திரிகிறது
மௌனம் போர்த்திய காற்றும் காலமுமாய்
இற்றைப் பொழுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிமொழியில் உறையும் பறவையின் நாளைய பாடல்


நான்
திசை புதிதாய் உந்திப் பறக்கும்
பறவை வானம்
ஈரம் சொட்டும் என் பாடல் மீது
நாளைக்கான புதிய அர்த்தங்களை
தேடல் தொடங்கிற்றுக் காலம்

புராண காலக் கல்வெட்டிலும் செப்பேட்டிலும்
ஓலைச்சுவடியிலும்
புதிதாய் கணினியிலுமாய்
எனக்கான சிறகுகளைத் செதுக்கியே
பறத்தல் தொடர்கிறது.

என்னை உயிர்த்த ஆதி மொழியும்
உறைந்து போயிற்று பழஞ்சாசனத்தில்

நான்
என்னை உயிர்த்து வானம் அவாவும்
இறக்கைகளை மீள வரைதல் தொடங்கினேன்.

புதிய மெருகாய் இறக்கைகள் வளரவும்
பேனாவின் கூர்முனை துடித்தது
கல்வெட்டில் படிந்து கணினி வெளியில்
மின் எழுத்தாய் உந்திப் பறந்தேன்
வானம் விரிய என் சிறகுகள் நிறைந்தன



ஆதி வேரின் ஈரம் கிளைத்துத்துத் தூவ
என் பாடல் மீது
மேலுமாக மலர்ந்தன
மொழிகளற்ற மொழியின் சொற்கள் பூக்களென

சொற்களைக் கொறித்து மீளவும் விதைக்கிறேன்
புதிது புதிதாய் அர்த்தங்கள் விளைகின்றன
அடர்வனமாய்

நான்
திசை மேலும் தேடி உந்திப் பறக்கிறேன்
என்னில்
நான்களாகிக் கிளைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

மெல்பேர்ணில் உள்ள தோமஸ்ரவுனில் (Thomas town) எனக்கொரு நண்பர் இருந்தார். பேரம்பலம் என்பது அவர் பெயர். இளைமைக் காலத்து நண்பர். வயது அறுபதைத் தாண்டி விட்டது. அவரைவிட எனக்கு மூன்று வயதுகள்தான் குறைவு.


அவருக்கு லாட்டரிச் சீட்டு எடுப்பதில் அலாதிப்பிரியம். எப்பவாவது தனக்கு விழும் என்ற நம்பிக்கை உள்ளதாகச் சொல்லுவார். என்னுடன் முன்பு வேலை செய்யும்போது அப்பிடியெல்லாம் அவருக்கு நம்பிக்கை இருந்ததாகத் தெரியவில்லை. மனைவி வந்த அதிர்ஷ்டம், லாட்டரிச் சீட்டு எடுக்கின்றேன் என்பார். அவருடைய மனைவிக்கு விக்கல் வியாதி. அவ போகாத கோயில் இல்லை. பார்க்காத வைத்தியம் இல்லை. பேரம்பலத்தைக் கண்டதும் அவரிடம் ஏறிய விக்கல் எந்தவித மருந்து மாந்திரீகத்திற்கும் கட்டுப்படவில்லை.

விக்கலும் தும்மலும் லேசுப்பட்ட சங்கதிகள் அல்ல. ஒருகண நேரத் தும்மலில் கார் அக்ஷிடென்ற் வந்துவிடலாம். எமக்கு வீட்டுக்கு அருகிலிருப்பவர் தும்மும் போது தெருவே அதிரும். விக்கல் சபையோரின் மத்தியில் இருப்பவரை அடையாளம் காட்டி விடும். இரண்டுமே ஆக்களைப் பொறுத்து பலவித தாளலயக் கட்டுக்களுடன் தோன்றும்.

ஒருமுறை பேரம்பலத்தின் பேர்த்தியின் நான்காவது பிறந்தநின விழாவிற்காக அவரது வீட்டிற்குப் போனோம். அப்போதுதான் அவருக்கு 'லொட்டோ' (Lotto) மீதிருந்த அதீத ஈடுபாட்டைக் கண்டேன். எல்லாரும் அவுஸ்திரேலியா - இந்தியா கிரிக்கெட் மச் பார்த்துக்கொண்டிருந்தோம். "ரி.வி. சனலை மாத்தப் போறன். எல்லாரும் என்னை மன்னிச்சுக் கொள்ள வேணும்'' கையில் ஏ4 சைஸ் கொப்பி ஒன்றுடன் ஹோலிற்குள் நுழைந்தார் பேரம்பலம். ஒன்றரை அங்குலத் தடிப்பமுள்ள அந்தக் கொப்பியில் எல்லாவிதமான லொட்டோ பற்றிய தகவல்களும் இருப்பதாகச் சொன்னார். அவருக்கு அரு ஒரு புதையல் மாதிரி. அவருக்குக் கடந்த இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன்பு வந்த லொட்டோ எண்க்ள் எல்லாம் மனப்பாடம்.

# டயானாவின் விக்கல்





— கே.எஸ்.சுதாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவருக்கு இன்னமும் சிவபுராணம் தெரியாது" என்று சொல்லிச் சிரித்தார் டயானா. டயானா என்பது பேரம்பலம் தனது மனைவிக்கு வைத்த செல்லப் பெயராக இருக்க வேண்டும். உலகில் எங்குதான் மனிதருக்கும் அவர்களின் பெயருக்கும் பொருத்தம் சரியாக அமைந்திருக்கின்றது? கலியாணம் செய்தபோது, அவரின் சிகை அலங்காரம் டயானாவின் சாயலில் இருந்ததுதான் அந்தப் பெயர் வரக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

"எனக்கு லொட்டோ விழுந்தால், இதிலை இருக்கிற அனைவருக்கும் அதிலை ஒரு பங்கு உண்டு" என்றார் பேரம்பலம். கொடுக்கின்றாரோ இல்லையோ, இதைச் சொல்வதற்கு எப்படிப்பட்ட மனம் வேண்டும்!

காலம் மாறுகிறது. முதுமை காரணமாக முன்னையப் போல பேரம்பலத்தின் வீட்டிற்குப் போவதில்லை. அவரும் வருவதில்லை.

பேரம்பலத்தின் 75ஆவது வயது பிறந்ததின கொண்டாட்டம் வந்தது. மீண்டும் சந்தித்துக் கொண்டோம். அப்போது அவர் என்னைத் தனியாகத் தனது ரூமிற்குக் கூட்டிச் சென்றார். அறைக்குள் ஒரு விளையாட்டு லொட்டோ மெசின் வைத்திருந்தார். பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்டது. பேர்த்திக்கு Kmartஇல் வாங்கும் போது தனக்கும் அதுபோல ஒன்று வாங்கியதாகச் சொன்னார். அசப்பில் ரி.வி.யிலே பார்க்கும் மெசினைப் போலவே இருந்தது. அதை உருட்டி விளையாடி எல்லா விதமான லொட்டோ இலக்கங்களையும் போடக்கூடிய வசதி இருந்தது. இரண்டு பேருமாக இயந்திரத்தை இயக்கி விளையாடி அந்த வாரத்திற்காக இலக்கங்களைப் பெற்றுக் கொண்டோம். "இரண்டு பேருக்குமே இப்ப மறதி, அதோடை அறளை. இந்த மெசின் இருக்கிறது வாச்சுப் போச்சடா" என்றார் பேரம்.

பேரம்பலத்தின் பேர்த்தி பெரியவளாகி விட்டாள். சடங்கு பெரிதாகக் கொண்டாடினார்கள். நாங்கள் அவர்கள் வீட்டிற்குச் சென்று தண்ணீர் வார்த்து விட்டு, பிறகு ஹோலிற்குச் சென்றோம். இப்போது பேரம்பலத்தின் வீடு பெரிய பங்களா. இரண்டு மாடிக் கட்டிடம். டபுள் கராஜ். அழகான லாண்ட்ஸ்கேப். அம்சமாக இருந்தது. இப்போதும் பேரம்பலம் லொட்டோ போடுகின்றாரோ தெரியவில்லை. ஆனால் மூச்சுக்கொரு தடவை லொட்டோ பற்றிப் பேசும் அவர், அன்று லொல்டோ பற்றி வாயே திறக்கவில்லை. தாங்கள் 'வேர்ல்ட் றிப்' (World.Trip) இரண்டு தடவைகள் போய் வந்ததாகச் சொன்னார். ஹோலிற்கு சடங்கிற்கு வந்த அனைவருக்குமே தமது உலகச் சுற்றுலாவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

சடங்கு பெரிதாக நடந்தது. பேர்த்தி ஹோலிற்று 'ஹெலிகொப்டரில்' வந்து இறங்கினாள். மாமன்மார்கள் ஹெலியிருந்து மணவறை வரைக்கும் அவளைப் பல்லாக்கில் சுமந்து சென்றார்கள். பல்லாக்கு போற வழி எங்கும் பலவித வர்ணங்களில் புகை அடித்தார்கள். "எங்கடை ஊரிலை வாழைக்குலைக்குத்தான் புகை அடிக்கிறவை. இஞ்சை மனிசருக்கே அடிக்கினம். ஒருவேளை கிருமி சாகப் புகை அடிக்கிறான்களே?" என்று ஒருவர் முணுமுணுத்தார். இந்த மாதிரி ஒரு சடங்கை இதுவரை ஒருவரும் பார்த்ததில்லை என்று பேசிக்கொண்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வந்து காரில் இறங்கியதும், மனைவி என் கையைப் பிடித்தாள்.

"நான் விழமாட்டன். வடிவா நடப்பன். நீர் என்னை விடும்" என்றேன் நான்.

காரில் ஏறிய நேரம் தொடக்கம் ஏதோ ஒரு விசயத்தை அடக்கி வைத்திருக்கின்றாள், அவள். அதைச் சொல்வதற்காகத்தான் இந்தக் கைப்பிடிப்பு.

"ஒண்டைக் கவனிச்சனியளே! டயானாவுக்கு விக்கல் நிண்டு போச்சு!!"

"அப்ப பேரம்பலத்தாருக்கு லொட்டோ விழுந்திட்டுது" றைவர் சீற்றிலிருந்த மகள் தன்னை மறந்து கூக்குரல் போட்டாள்.

"எல்லாம் வரும் போகும்" என்றாள் மனைவி. அந்த 'எல்லாம்' என்பதற்குள் என்னவெல்லாம் அடங்கும்?

**பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களுக்கு மல்லிகை தன் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.**



பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அவர்கள் 24.10.2012 அன்று இலங்கை பாராளுமன்றத்தில் 'தமிழ் சஞ்சிகை வெளியீட்டாளர்களுக்கு நிதியுதவி வழங்கல்' பிரேரணையை சமர்ப்பித்து ஆற்றிய உரையில் ஈழத்து தமிழ் சிறு சஞ்சிகையின் வரலாற்றை எடுத்துரைத்து உரையாற்றி இருக்கிறார்.

அவ்வுரை பாராளுமன்ற உத்தியோகபூர்வமான ஏடானான ஹன்சாட்டில் பதியப்பட்டு இருப்பது ஈழத்து தமிழ் சிறு சஞ்சிகை யாளர்களுக்கு பெருமை சேர்க்கிறது. அதற்காக ஈழத்துச் சிறு சஞ்சிகையாளர்கள் சார்பாக, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, மல்லிகையை விசேடமாக குறிப்பிட்டு உரையாற்றி யமைக்காக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களுக்கு மல்லிகை தனிப்பட்ட முறையில் தனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு



# அடுத்தவரை நோக்கி இலக்கியத்தினூடாகத் திறக்கும் சாளரமும், சதாராஜின் கதை சொல்லும் கலையும்

தற்போது யுத்தம் முடிவுற்றிருக்கிறது. எப்படி முடிவுற்றதாயினும் அது நல்லதே. யுத்தம் எனப்படுவது தீவிரமாகத் தொந்தரவு தரும் செயற்பாடொன்றென்பதால் அவ்வாறான ஒன்று இல்லாமலிருப்பதே நல்லது எனினும் அண்மைக்கால அரசின் நிலைப்பாட்டையும் பேரம் பேசும் சக்தியையும் அடையாளத்தையும் தொடர்ந்தும் கொண்டு செல்வது நியாயமான பலத்தினாலல்ல. பொருளாதார பலத்தினாலும் மட்டுமல்ல. ஆயுத சக்தி எனப்படுவது உலக பலத்தைச் சமப்படுத்துவதில் பங்கு கொள்ளும் ஒன்றென்பது பூகோள அரசியல் யதார்த்தத்தின் மூலமாகத் தெளிவாகும் ஒன்று. அதி நவீன ஆயுத பலங்களைக் கொண்டிருக்கும் அமெரிக்காவானது எக்கணத்திலும் தமது சித்தாந்தங்களுக்கு எதிராகச் செல்லும் அதாவது முதலாளித்துவத்துக்கு எதிராகக் கிளம்பும் எந்தவொரு நாட்டின் மீதும் போர் தொடுக்கத் தயாராகவுள்ளது. அவர்கள் யுத்தம் செய்வது தாம் விரும்பும் விதத்தில் நிலத்தையும், நிலத்தில் வாழும் மனிதர்களையும் சுரண்டித் தின்பதற்கேயன்றி பொதுமகனுக்கு நன்மையைக் கொண்டு வருவதற்காகவல்ல. அதனாலேயே இம் மாபெரும் பக்தி படைத்தவனின் குறிக்கோளை பூலோக அரசியல் சங்கிலியிலுள்ள ஏனைய நாடுகளும் பின்பற்றுவதை உணர்ந்து கொள்ள முடிகிறது. உலகத்தில் உண்மையான சமாதானத்தை உருவாக்க வேண்டுமெனில் அமெரிக்காவானது தனது அணுசக்தியைக் கைவிட்டு விட வேண்டுமென அருந்ததி ராய் போன்ற செயற்பாட்டாளர்கள் கூறுவது அதனாலேயே. அணுசக்தி ஆயுதப் பாவனை குறித்த பலம் வாய்ந்த கருத்து வேறுபாடு அமெரிக்காவுக்குள்ளேயே இருக்கிறது. அமெரிக்காவின் ஆயுத பலத்தை நேசிப்பவர்கள், அந்த ஆயுத எதிர்ப்பாளர்களைத் துரோகிகளாகவே அறிமுகப்படுத்துகிறார்கள்.



**சிங்களத்தில் :**
**பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி**



**தமிழில்:**
**எம். ரிஷான் ஷெரீப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க யுத்த சாஸ்திரங்கள் குறித்த இவையனைத்தும் உண்மையே. இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகில் இடம்பெற்ற அனேக யுத்தங்களுக்கு அமெரிக்கா பதில் கூற வேண்டும். சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற அனைத்துக் கொடுமைகளுக்கும் இலங்கை அரசு பதிலளிக்க வேண்டும் என்பதைப் போன்றது அது. எனினும் அமெரிக்காவில் மானுடவியல் கல்வித் துறையில் தமது எதிரிகளென அடையாளம் கண்டுகொண்டவர்களைப் புரிந்துகொள்ளவும் குறிப்பிடத்தக்க முயற்சியொன்றை மேற்கொள்வர். ஐரோப்பாவைத் தாண்டிய புறவுலகத்தை மனித நேயத்துடன் புரிந்துகொள்வது சம்பந்தமாக இலக்கியத் துறையில் ஏற்பட்ட தேவையின் காரணமாகத்தான் இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஒப்பீட்டு இலக்கியம் எனும் விடயம் வளர்ச்சி கண்டது.

யுத்தம் கடந்து சென்ற இலங்கையின் இலக்கியத் துறையிலும் எம்மால் இது போன்ற ஒன்றைச் செய்ய இயலும். அந்த எண்ணத்தில்தான் எமது மானுடவியல் முது கலைமாணி கற்கைநெறி வகுப்புக்களில் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழிலக்கியங்கள் குறித்து அடிக்கடி உரையாடி வருகிறேன். எண்ணத்தின் பிரதி பலனாக எனக்குக் கிடைத்த அபூர்வமான தமிழ் சிறுகதை எழுத்தாளர் ஒருவர்.

சுதாராஜ். அவரது காட தொஸ் பவ்ரமுத மற்றும் நொபெனென பெதி எனும் சிறுகதைத் தொகுப்புகள் இரண்டிலும் யுத்தம் நிலவிவந்த முப்பது வருட காலத்துக்குள் தமிழ் மக்களின் வாழ்க்கை குறித்த பொதுவான ஊடக அறிக்கைகளிலும், அரசியல் கண்ணோட்டங்களிலும், இராணுவ அறிக்கைகளிலும் எமக்குக் கிடைத்திராத தமிழர் வாழ்க்கை குறித்து யதார்த்தமாக எழுதப்பட்டிருக்கிறது. இலக்கியத்தில் கிடைக்கும் யதார்த்தம் என்பது அனேக தகவல்களைக் கொண்டதல்ல. ஆயுதம் தாங்கிய குழுக்கள் சிலவற்றால் அடிக்கடி நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் வாழ்ந்த மக்கள் மிகவும் கடினமான தீர்மானமொன்றையெடுத்து, தாம் நேசிப்பவர்களையும், நேசிப்பவைகளையும் பாதுகாப்பதற்காக சில தசாப்தங்கள் துயருற்ற விதம் குறித்து இலக்கியங்களில் மட்டுமே செய்யப்படக் கூடிய நேரடி வர்ணனைகளோடுதான் சுதாராஜின் சிறுகதைகளில் எழுதப்பட்டிருக்கிறது.

நான் இத்தொகுப்புகளிலுள்ள கதைகளை எனது மாணவ மாணவிகளிடம் வாசிக்கக் கொடுத்து இக்கதைகளில் உள்ள தமிழ் மக்களுக்கு இலங்கை எனும் நாடு தென்படும் விதம் குறித்து தமது அவதானத்தைச் செலுத்தும்படி கூறினேன். சிங்களம் மற்றும் தமிழ் எனும் இரண்டு இனங்களுக்கிடையே இலங்கையின் யதார்த்த நிலைமையானது உணரப்படும் விதம் குறித்து ஆய்வு செய்வதே எமது பயிற்சியின் நோக்கமாக இருந்தது. இது உலகிலேயே உன்னதமான நாடு இலங்கை என சிறு வயதிலிருந்தே எண்ணி வரும் சிங்களப் பிள்ளைகளுக்குத் தம்மைப் பற்றிய சுய தெளிவொன்றைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு அநுபவமாக அமைந்தது. யுத்தத்தை ஆட் கொண்டிருந்த இரு தரப்பினருக்கும் மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கும், கிளிநொச்சியிலிருந்து திரும்ப யாழ்ப்பாணத்துக்கும் மீண்டும் இன்னும் பிற இடங்களுக்கும் சென்று வாழ முயற்சித்த சாதாரண தமிழ் பொதுமகனின் வாழ்க்கையானது, சுதாராஜின் அனேகக் கதைகளில் விவரிக்கப்பட்டிருக்கிறது. தத்தமது குடும்பங்களில் படித்த குடும்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்கள் உலகின் வெவ்வேறு நாடுகளுக்குப் பிரிந்து சென்ற பிற்பாடு, அழிந்து கொண்டு வரும் கலாசாரத்தைக் காப்பதற்கு முயற்சிக்கும் மக்களை இக்கதைகளில் எமக்குச் சந்திக்கக் கிடைக்கிறது. உதாரணமாகப் புத்தாண்டு சம்பிரதாயங்களைக் குறிப்பிடலாம். அச்சம்பிரதாயங்களின் படி உறவுகள் ஒன்றாக இருக்க வேண்டும். இங்குள்ள ஏழைத் தமிழ் மக்களால் அவுஸ்திரேலியாவிலோ கனடாவிலோ வசிக்கும் பிள்ளைகளிடம் புத்தாண்டுப் பயணம் செல்ல முடியாது. பிரிந்து போயுள்ள மக்களுக் கிடையே புத்தாண்டு எதற்கு? சுதாராஜின் வேரும் விழுதுகளும் கதையை வாசிக்கும்போது எனக்கு இவ்வாறுதான் தோன்றியது.

அவரது கதைகள் குறித்து இன்னும் எழுத வேண்டும். சிறிய பத்திக் கட்டுரை யொன்றுக்குள் எழுதி அடக்க முடியாத பெறுமதியொன்று சுதாராஜின் சிறுகதைகளில் உள்ளது. எனவே இப்பத்திக் கட்டுரையின் நோக்கமானது பெறுமதியான ஒன்றை இன்னுமொரு முறை வாசிப்பதற்காக வாசகர்களை அழைப்பதாகும். பத்திக் கட்டுரை எனும் வடிவத்தில் செய்ய முடிவது அழைப்பது மாத்திரமேயாகும்.

**"இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகில் இடம்பெற்ற அனேக யுத்தங்களுக்கு அமெரிக்கா பதில் கூற வேண்டும்."**

சுதாராஜ் எனும் பெயரில் எழுதிவரும் சிவசாமி ராஜசிங்கம் ஒரு விருது பெற்ற எழுத்தாளர் எனவும், அவர் இலங்கையின் எந்தவொரு இனத்தையும் ஓரக்கண்ணால் நோக்காது, இலங்கையின் இனப் பிரச் சினையை நடுநிலைமையில் நின்று பார்க் கும் எழுத்தாளர்களில் ஒருவர் எனவும் 'நொபெனன பெதி' தொகுப்பை சிங்கள மொழியில் மொழிபெயர்த்த திரு. முஹம்மத் ராஸூக் கூறுகிறார். அக்கூற்று ஒரு உண்மையான அளவீடு.

'நொபெனன பெதி' சிறுகதைத் தொகுப் பிலுள்ள 'வெள்ளைக் கோழி' எனும் கதையானது ஒரு அற்புதமான படைப்பு. கொழும்பில் தொழில் புரியும் மூத்த அண்ணன் ஊருக்கு வருகிறார். அது பெயரொன்றற்ற வடக்கின் ஒரு கிராமம். யாழ்ப்பாணத்துக்கு அருகிலிருக்கக் கூடும். கொழும்பில் கலவரம் என்பதனால்தான் மூத்த அண்ணன் அவசரமாக வந்திருக்கக் கூடும். இது எண்பத்து மூன்று கலவரத்துக்குச் சில காலத்துக்குப் பின்னர் என்பதனை அனுமானிக்க முடிகிறது. மூத்த அண்ணன் ஊருக்கு வருகையில் விதவிதமான இனிப்புகள், விளையாட்டுச் சாமான்களைக் கொண்டு வருவார் என்பதால் அவ்வீட்டிலிருக்கும் சின்னத்தம்பிக்கு மிகவும் சந்தோசம். மூத்த அண்ணன் ஊருக்கு வரும் நாளில் பொதுவாக இரவுணவுக்கு ஒரு கோழி பலியிடப்படும். அக்குடும்பம் நாட்டுக் கோழிகளை வளர்த்து வருகிறது.

இம்முறை அண்ணன் ஊருக்கு வருவதன் காரணத்தால், அவ்வீட்டில் வளர்க்கப்படும் வெள்ளைக் கோழி பலியிடப்படும் விதம் குறித்துத்தான் இச்சிறுகதையில் சித்தரிக்கப் படுகிறது. வெள்ளைக் கோழி அழகானது. புத்தி சாதுரியமானது. எனவே அதனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துப் பலியிட அக்குடும்பத்தினர் மிகவும் போராட வேண்டியிருக்கிறது. அதன் பின்னால் துரத்திச் செல்வது, அது வரும் வழியை மறித்து நிற்பது போன்றன விரிவாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கலவர காலத்தில் சிங்களவர்கள், தமிழர்களைத் துரத்தித் துரத்தி அடித்ததும் இப்படித்தான் என கோழியைப் பிடிக்கையில் கொழும்பிலிருந்து வந்திருக்கும் மூத்த அண்ணன் சொல்கிறார். அது சின்னத்தம்பிக்கு இன ரீதியான துன்புறுத்தல்கள் குறித்த ஒரு பாடமாகிறது. பிடிக்கப்பட்ட கோழியானது இறைச்சியாகத் துண்டுகளாக்கப்படும் போது உறக்கத்தில் விழும் சின்னத்தம்பிக்கு துன்புறுத்தப்படும் சம்பவங்களுடனான ஒரு கனவு தென்படுகிறது. சோறும் இறைச்சிக் கறியும் வெந்து வருகையில் அவன் உறக்கம் கலைந்து எழுகிறான்.

"அம்மா பெரியண்ணனை கொழும்புக்குப் போக வேண்டாம் எனச் சொல்லுங்கோ" எனச் சொல்கிறான்.

வெள்ளைக் கோழியைப் பிடிப்பதையும் பலியிடுவதையும் விபரித்த விதத்தில்தான் இச்சிறுகதையின் பெறுமதி தங்கியிருக்கிறது. குடும்பத்திலுள்ள பிள்ளைகள் பெரும் யுத்தமொன்றில் ஈடுபடுவதைப் போலத்தான் கோழியைப் பிடிக்கிறார். இக்கோழி பிடிக்கும் செயற்பாடானது, அரசியல் உரிமைகளற்ற ஒரு அகிம்சைக் குழுவினரிடையே அரசியல் அடக்குமுறைகள் நிகழ்த்தப்பட்டதையும், துன்புறுத்தல்கள் வளர்ச்சி பெற்றதையும் குறிப்பிடும் ஒரு குறியீடாக ஒப்புநோக்கப்படலாம். வெள்ளைக் கோழியின் மரணமானது அக்குழுவினரிடையே இருந்த அமைதி இல்லாமல் போனதைப் போன்றது. கதையில் நடைபெறுபவை ஐந்து அல்லது ஆறு வயதேயான சின்னத்தம்பியின் பார்வையில்தான் எம்மிடம் முன்வைக்கப்படுகிறது. எனவே சுற்றிவர நிகழ்பவை குறித்து அவனிடமிருந்து வெளிப்படும் அப்பாவித்தனமும் சிறுபிள்ளைத்தனமும் எமக்குள் உருவாகிறது. 1983-87 காலப்பகுதியில் வடக்கின் தமிழ் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அரசியலில் ஆட்கொள்ளப்பட்டு துயர வட்டத்துக்குள் சிக்கிக் கொள்ளப்பட்டது குறித்த எண்ணமும் இதனால் புலப்படுகிறது.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பொறியியலாளராகப் பட்டம் பெற்று, உலகில் பல்வேறு நாடுகளில் கடமை புரிந்து வந்துள்ள சுதாராஜ் வெளிநாட்டவர்களைப் பின்னணியாகக் கொண்டே தனது கதைகள் பலவற்றை எழுதியுள்ளார். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வெளிநாடுகளில் சந்தித்து ஒன்றாக வசிக்க முற்படுகையில் தாய்நாட்டிலிருந்து பெறப்பட்ட இனப்பாகுபாட்டை சண்டையிட்டுத் துரத்தியடித்து விட்டு, பொது மனிதாபிமானத்தை உணர்ந்துகொள்ள முற்படும் விதம் பல கதைகளில் வருகிறது. இனவாதத்தால் ஒருவரிடமிருந்து ஒருவர் வெளிப்படையாகவே பிரிக்கப்படும் இந்த இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு கதையில் கராச்சி விமான நிலையத்தில் சந்திக்கிறார்கள். இன்னுமொரு கதையில் ஈராக்கின் சீமெந்துத் தொழிற்சாலையில் சந்திக்கிறார்கள். இச்சந்தர்ப்பங்களில் தாய்நாட்டுக்குச் சொந்தமான விதவிதமான சம்பிரதாயங்களும், இனவாதங்களும், தேசியவாதங்கள் குறித்தான குறுகிய பாரவைகளும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து, இம் மனிதர்களுக்கு ஒன்றாய் இணைந்து செயற்பட நேர்கிறது. எனவே படிப்படியாகவேனும் கலாசாரத்தினால் தமக்குத் தரப்பட்ட அடையாளத்தைத் தாண்டி அனைவருக்கும் பொதுவான மனிதாபிமானத்தைத் தேடிக்கொள்ள அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறது. அது ஒருவர் மற்றவரைப் பிரிந்து வாழும் பெரும்பான்மையான கலாசாரமல்ல. ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழும் சர்வதேச கலாசாரம். தாய்நாடு எனப்படும் சூழலிலிருந்து உடல்ரீதியாகப் பிரிந்து வாழ்ந்தமையே அதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு அளித்தது. இந்த சர்வதேச கலாசாரத்தை தாய்நாட்டுக்குள்ளேயே உருவாக்க வேண்டுமெனில், நாம் தாய்நாடென அடையாளப்படுத்தும் பூகோளப் பகுதியை புதிய தொரு நாடாக மாற்ற வேண்டும். சுதாராஜின் சில கதைகளில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களின் மனிதாபிமானத்தை வெளிநாடுகளிலேயே வெளிப்படுத்துவதானது, தாய்நாடு எனும் தேசம் குறித்த வரையறுக்கப்பட்டதோர் பார்வை அந்நாட்டில் வாழும் மக்களது மனிதாபிமானத்தைச் சிதைத்திருப்பதைக் குறிப்பிடுவதற்காகவா? நாம் பிறந்த பூமியானது எதனால் எம்க்கு முக்கியதானதாக இருக்கிறதென மீண்டும் எம்மால் சிந்தித்துப் பார்க்க முடியாதா?


## புதிய சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா 1000/ (ஆண்டு மலர் உட்பட)

தனிப்பிரதி 50/

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

சந்தாவை நேரடியாகவோ, காசோலையாகவோ செலுத்தலாம்.

வங்கித் தொடர்புகளுக்கு

Dominic Jeeva - 072010004231,

Hatton National Bank, Sea Street, Colombo - 11

குறிப்பிடவும்.

காசோலையாக செலுத்துவதாயின் மேற்கூறிய வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிட்டு அதன் பற்றுச் சீட்டுப் பிரதியை மல்லிகைக்கு அனுப்பி வைக்கவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721

mallikaijeeva@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை




எப்படித்தான் சொன்னாலும்
எவர் செவிக்கும் ஏறாது...!

செப்படி வித்தை இவர்
தேர்தல் எனச் சொன்னாலும்...,
சத்தியமாய் இந்தச்
சனங்களுக்கு விளங்காது...!

நித்திரையா..., இல்லை...
நிம்மதியா... மனிசருக்கு...?

தெருச் சந்தி எங்கணுமே...
தேர்தல்... தூள் பறக்கும்...!

பத்திரிகைச் செய்தி...
பலர் மேடைப் பேச்சுக்கள்...,
எல்லாம் கலந்தொன்றாய்க்
குழப்பி... உயிரெடுப்பர்...!

சண்டைகளும் மூளும்...,
சரிக்கட்டல்களும் தொடரும்...!

தெருவோர மதிலெங்கும்
சுவரில்லாச் சித்திரங்கள்...,
இரவோடிரவாக
ஒட்டுவதும், கிழிப்பதுவும்...!

யார் யாரோ பதவி பெறப்
பகடைகளாய் ஆனவர்கள்...!

ஓடும் மீன் ஓடி...
ஒரு நேரம் வருமென்று
காத்திருக்கும் இலவுக்
கிளியாகிப் போனவர்கள்...!

முடவனுக்கும் ஆசை...
கொம்புத்தேன் சுவைப்பதற்கு!

வெற்றி சில பேர்க்கு...
வெறும் வயிறு பலபேர்க்கு...!

நாளை விடிந்தால்...
நால்வர் சிரிப்பார்கள்...!

நாற்பது பேர் ஓடி
ஒழிப்பார்கள்...,
கடன் துரத்தும்...!

எட்டாப் பழம் புளிக்கும்...,
என்ற நரிப் புத்தியதும்
இல்லை இவர்களுக்கு...!

என்னபடி எடுத்துச்
சொன்னாலும் கேட்காமல்
எம்பிக் குதித்தார்கள்...!
வெல்வோம் என நின்று
வீறாப்புப் பேசினார்கள்...!

யார்..., யாரோ... பதவி பெறப்
பகடைகளாய் ஆனவர்கள்...
காத்திருக்கும் இலவுக்
கிளியாகிப் போனார்கள்...!!



– முல்லை வீரக்குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல்



# உபாலியுடன் ஓர் உரையாடல்

உரையாடியவர்

- மேமன்கவி -

**கேள்வி : தமிழிலிருந்து சிங்களத்திற்கு மொழி பெயர்க்கும் பணியில் பரவலாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். அத்தகைய பணியின் பொழுது எத்தகைய அனுபவங்களையும் பிரச் சினைகளையும் எதிர்கொள்கின்றீர்கள்?**

பதில் : இலங்கையின் மொழிபெயர்ப்புத் துறையை எடுத்துக்கொண்டோமானால் சிங்களத்தி லிருந்து தமிழில் வந்த அளவு தமிழிலிருந்து சிங்களத்திற்கு படைப்புக்கள் போனது குறைவு. ஆனால் ஒப்பீட்டளவில் பார்க்கின்ற பொழுது குறை வாக இருக்கின்றது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றது.

1. சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப் பதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் இருக்கின்ற அளவுக்கு தமிழிலிருந்து சிங்களத்திறகு மொழி பெயர்க்கும் ஆற்றல் மிக்க மொழிபெயர்ப்பாளர்கள் நம் மத்தியில் மிகக் குறைவாகவே உள்ளனர்.

2. தேர்வு! சிங்களத்திலிருந்து தமிழிற்கு கொண்டு வரும் படைப்புக்களைப் பற்றிய தேர்வு நம் மத்தியில் இருக்கின்றது. ஆனால் தமிழில் இருந்து சிங்களத் திற்கு கொண்டு செல்லும் சரியான தேர்வு நம் மத்தியில் இல்லை. இதனையிட்டு சமீபகாலமாக நாங்கள் கவனம் செலுத்தி வருகின்றோம். ஏனெனில் இந்தத் தேர்வின் மூலம்தான் இலங்கை தமிழ் இலக்கியத்தைப் பற்றிய சிங்கள வாசகர்களின் எதிர் பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டியதாக இருக் கின்றது. இலங்கைத் தமிழ் பேசும் மக்களைப் பற்றியும், அவர்களின் பிரச்சினைகளைப் பற்றியும், அவர்களின் வாழ்வியலைப் பற்றியும் பேசுகின்ற படைப்புக்களைத் தான் நாம் தமிழிலிருந்து சிங்களத் திற்கு கொண்டு செல்ல விரும்புகின்றோம். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேளை அத்தகைய உள்ளடக்கத்தைப் பற்றி சிங்களத்திற்கு மட்டுமே கொண்டு செல்லும் நோக்குடன் பணிபுரியும் பொழுது சிலவேளைகளில் இலங்கை தமிழ் இலக்கியத் தைப் பற்றிய உயர்ந்த மதிப்பீடுகளை ஏற்படுத்தாத சில படைப்புகளும் அங்கு போய்விடும் ஆபத்தும் இருக்கின்றது. அதனால் அந்த உள்ளடக்கத்துடன் கூடிய இலங்கை படைப் பிலக்கியத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டும் வகையிலான படைப்புகளையும் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற விடயத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. இந்த இடத்தில்தான் தேர்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

**கேள்வி : ஆம்! நீங்கள் கூறுகின்ற தேர்வும் ஒரு முக்கியமான விடயம்தான். நீங்கள் கூட கணிசமான அளவில் பல தமிழ் படைப்புகளை சிங்களத்தில் கொண்டு வந்திருக்கின்றீர்கள். அது உங்கள் தனிப்பட்ட தேர்வைக் காட்டுகின்றது. அந்தத் தேர்வில் பார்க்கின்ற பொழுது கணிசமான அளவில் நீங்கள் தமிழகப் படைப்புகளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளீர்கள். இதற்கு என்ன காரணம்?**

**பதில் :** இதற்குக் காரணம் சொல்வதென்றால் சிங்கள மொழியைப் பொறுத்தவரை அது இலங்கையில் மட்டும் பேசும் மொழியாகவும், அதற்கான படைப்புகள் இலங்கையில் மட்டும் படைக்கப்படுவதாகவும் இருக்கின்றது. ஆனால் தமிழ் மொழியைப் பொறுத்தவரை அது உலகில் பல்வேறு பகுதி களில் பேசப்படும் மொழியாக இருப்பதனால் தமிழ் மொழி யில் படைக்கப்படும் இலக்கியங்களைப் பற்றி இலங்கை யோடு மட்டுமே மட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது. குறிப்பாக தமிழ்நாடு மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்களின் தமிழ் இலக்கியங்களைப் பற்றி யோசிக்க வேண்டி யிருக்கின்றது. அத்தகைய இலக்கியங்களை சிங்களத்திலும் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது. அப் பொழுதுதான் ஒட்டுமொத்தமான தமிழ் இலக்கிய வளர்ச்சி யைப் பற்றிய அறிதல் சிங்கள வாசகர்களுக்கு ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். அந்த அறிதலுடன்தான் இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியத்தைப் பற்றிய மதிப்பீடுகளை அவர்கள் உருவாக்க வழிவகுக்கும். இலங்கை தமிழ் இலக்கியம், சிங்கள இலக்கிய வளர்ச்சியிலிருந்து எவ் வாறு வேறு பட்டிருக்கின்றது. அத்தோடு இலங்கைக்குரிய தனித்துவத் துடன் கூடிய தமிழ் இலக்கியம் எவ்வாறு வளர்ச்சியடைந் திருக்கின்றது என்பதையும் ஒட்டுமொத்த தமிழ் இலக்கி யத்திலிருந்து இலங்கை தமிழ் இலக்கியம் வேறுபட்டு நிற்கின்றது என்பதை சிங்கள இலக்கிய உலகம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். இதைச் சற்று விரிவாகக் கூறு வதானால் சிங்கள



இலக்கியத்துறையைப் பொறுத்தவரை உலக மொழி இலக்கியங்கள் பரவலாக சிங்களத்தில் மொழி பெயர்க்கப் பட்டு வெளியிடப்படுகின்றன. அவை தம்மை அளவு கோலாகக் கொண்டுதான் சிங்கள இலக்கிய வளர்ச்சி நோக்கப்படுகின்றது. ஒரே நாட்டில் வாழும் சக மொழி இலக்கியப் போக்கைப் பற்றிய அறிதல் சிங்கள இலக்கி யத்துறையினருக்கு இல்லாமல் இருப்பது ஒரு குறை யாகும். அதை நிவர்த்தி செய்வதற்கு இலங்கைத் தமிழ் இலக்கியத்தைப் பற்றிய அறிதலுக்கு ஒட்டு மொத்தமான தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிய அறிதலை கொண்டு செல்ல வேண்டியிருக்கின்றது. அதனால்தான் என்னுடைய முயற்சிகளாக ஜெயகாந்தன், பிரபஞ்சன், சின்னப்பா பாரதி போன்ற படைப்பாளிகளின் படைப்புகளை சிங்கள மொழியில் மொழிபெயர்த் துள்ளேன். அத்தோடு புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழரின் படைப்புகளையும் சிங்களத்தில் கொண்டு வந்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி : இன்றைய சூழலில் உங்களைப் போன்ற பலர் சிங்களத்திலிருந்து தமிழிற்கும் தமிழிலிருந்து சிங்களத்திற்கும் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றீர்கள். கடந்த காலத்தோடு ஒப்பிடும் போது இப்பணி பரவலான முயற்சியாகத்தான் இருக்கின்றது. ஆனால் இரு பக்கத்திலும் ஒரு போதாமை தென்படுகின்றது. இதை நிவர்த்தி செய்வதற்கு என்ன செய்யலாம் என்று நினைக் கின்றீர்கள்?**

**பதில் :** கடந்த காலங்களில் தனிநபர் முயற்சியாகவே மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்றன. அந்நூல்களை வெளியிடுவதற்கான நிறுவனங்கள் மிக அரிதாக இருந்தன. அதனால் மொழிபெயர்ப்பாளர்களே அதனை வெளியிடு கின்ற சூழல்தான் இருந்தது. ஆனால், சமீப காலமாக இன்றைய சமூக அரசியல் மாற்றங்கள் மற்றும் தேவையின் காரணமாக இம்முயற்சி பரவலாகியுள்ளது. அதேபோல் கொடகே, தோத்தென்ன போன்ற நிறுவனங்கள் மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிடுவது முன்னேற்றகரமான செயலாகும். அதேவேளை நீங்கள் குறிப்பிட்டது போல் ஒரு போதாமை இருக்கத்தான் செய்கின்றது. இன்றைய சமூக அரசியல் தேவையின் காரணமாக மிகப் பரவலாகவும் தொகை அளவில் இரு மொழிகளிலும் மொழிபெயர்க்க வேண்டிய அவசரமும் அவசியமும் இருக்கின்றது. அதே வேளை இவ்வாறான மொழிபெயர்ப்பு முயற்சியின் பொழுது சில நடைமுறைச் சிக்கல்களும் இருக்கின்றன.

மொழிபெயர்ப்பாளர் ஒன்றிணைப்பு, அந்த மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிடும் நிறுவனங்களின் பெருக்கம் ஆகிய தேவைகளும் இருக்கின்றன. அத்தோடு இம்முயற்சியில் ஈடுபடும் பொழுது மொழி சார்ந்த பல சிக்கல்களும், பிரச் சினைகளும் இருக்கின்றன. இதற்காக நாங்கள் எல்லோரும் அரச மட்டத்தில் ஒரு வேலைத் திட்டம் இருக்க வேண்டும் என்று கோருகின்றோம். அத்தோடு இவ்வேலைத் திட்டத்தி னூடாக நாம் முன்பு பேசிக்கொண்டது போல் இரு மொழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டிய நூல்களைத் தெரிவு செய்வதற்கான பணியும், மொழிபெயர்ப்பாளர்களின் கூட்டிணைப்பும், அவர்களுக்கான கொடுப்பனவும் இவ் வேலைத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களாக இருக்க வேண்டும்.


**கேள்வி : சமீபத்தில் திக்குவல்லை கமால் மொழிபெயர்த்த உங்கள் விடைபெற்ற வசந்தம் என்னும் நாவல் இந்தியாவில் கேரள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்ததாக அறிகின் றோம். இது இந்தியாவின் பிற மொழிகளில் இலங்கை இலக்கியம் மொழிபெயர்க்கப்படும் ஒரு சூழல் தோன்றியிருப்பதாகத் தெரி கின்றது. இதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்.**

பதில் : என்னுடைய நூல் மட்டுமல்ல, இலங்கைத் தமிழில் எழுதப்பட்ட மேலும் சில நூல்களும் பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எனது நூலை மொழிபெயர்த்த பேராசிரியர் சுவாதி அவர்கள் வவணியூர் உதயனன் அவர்களின் பனிநிலவு, நூல் அறுந்த பட்டம் ஆகிய நாவல்களும், டென்மார்க் ஜீவகுமாரனின் சங்கானை சண்டியன், கோமதி போன்ற குருநாவல்களும் அவரது அன்புள்ள அம்மாவுக்கு என்னும் கவிதை நூலும் மலை யாள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அத்தோடு வவுணியூர் உதயனின் பனிநிலவு நாவல் பேராசிரியர் சுவாதி அவர்களின் சகோதரன் கிருஸ்ணன் அவர்களால் ஹிந்தி மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது. இந்நிகழ்வுகள் எமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய பணியாகும். இப்பணி மூலம் இலங்கை தமிழ், சிங்கள இலக்கியங்கள் இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் பணிக்கு முன்னோடியாக அமைந்திருப்பது எமக்கு பெருமை யளிக்கின்றது.

மேலும், மொழிபெயர்ப்புத் துறை சார்ந்தவர்கள் கூட்டாக இணைவதன் மூலம் இப்பணிகள் பரவலாக முன்னெடுத் துச் செல்லக்கூடியதாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**



# விடியும், இனி விடியும்!



ச.முருகானந்தன்

தினசரி குளிர் காற்றை உறிஞ்சி பனியில் நனைந்த தேயிலைச் செடிகள் பச்சைப் பசேலென துளிர்த்திருந்ததைப் பார்த்த பூவாத்தாவின் மனம் குதூகலித்தது. கடந்த சில வாரங்களாக மலையில் கொழுந்து குறைவாக இருந்ததால் தோட்ட நிர்வாகம் வேலை நாட்களைக் குறைத்திருந்தது. இதனால் வரும்படி கம்மியாகி அல்லல் பட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள், தேயிலைச் செடிகள் துளிர்த்திருந்ததைக் கண்டு மகிழ்வதில் வியப்பில்லைத்தானே?

பீலிக்கு குளிக்க வந்திருந்த இளமங்கைகளான பூவாத்தாவும் சரசுவும் பரந்து விரிந்திருந்த மலையின் மேல் பார்வையைப் படர விட்டிருந்தனர், கடந்த வருடத்தில் இந்தக் காலப்பகுதியில் தான் தினமும் வேலை கிடைத்ததுடன் நிர்ணயிக்கப்பட்ட கொழுந்தை விட அதிகம் இடை கிடைத்து கூடுதல் வருமானமும் கிடைத்ததை நினைத்துப் பார்த்த பூவாத்தா பூரிப்புடன் சினேகிதியை நோக்கினாள்.

"இது நல்ல கொழுந்துக் காலம். இந்த முறை உழைக்கிற காசில ஒரு சோடி காப்பு வாங்கிப்புடனும்..."

"ஆமாண்டி பூவு, தளிர்த்து செழித்து வளர்ந்திருக்கிற கொழுந்தைப் பாக்கிறப்போ இப்பவே வேலையை ஆரம்பிக்கணும் போலிருக்கடி. எனக்கும் ஏதாச்சும் நகை நட்டு செய்யணுமென்னு ஆசைதான். ஆனா வீட்டில தம்பி தங்கைன்னு செலவு அதிகம். ஆத்தா எளவு மிச்சம் பிடிக்க விடாதடி. பவுண் விலையும் ஏறிடிச்சு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓங்கப்பன் குடிக்கிறதை நிறுத்திற வரைக்கும் உன் ஆசை சரிப்பட்டு வராது. வீட்டில் ஒரு சல்லிக்காசு கூட வைக்க விடாது... ம்... எங்கப்பன் குடிக்காட்டிலும் வருத்தக்காரனாயிட்டாரு... நாலு வருசத்துக்கு முன்னால 'ஸ்ரைக்' அடிச்ச காலத்தில இரண்டு யூனியன் காரங்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்ல அப்பாவை செம்மையாகத் தாக்கினதுக்கப்புறம் மாசக் கணக்கில ஆஸ்பத்திரியில் கெடந்தார். அப்புறமா ஏலாமப் போயிட்டாரு..."

"ஆமாண்டி பூவு... நீ சொல்லுறதும் நெசம்தான். இப்பத்த நம் இளம் பெடியங்களில் நல்ல மாத்தம் தெரியுது. அதிகம் பேர் குடிக்கிறதில்லை. ஏதோ நாலெழுத்தென்னாலும் படிக்க கெடச்சதால புத்தி வந்திருக்கு..."

"நம்ம தோட்டத்திலேயே பெரிய பள்ளிக்கூடம் இருந்தா ஓ.எல். வரையென்றாலும் படிச்சிருக்கலாம். ரவுண் பள்ளிக்கூடம் போறதென்னா லேசான காரியமா? தூரம்... பாதையும் சரியில்லை. பஸ் போக்குவரத்துமில்ல. மத்தத் தோட்டங்கள் சிலதில வசதி கிடைச்சதால படிச்சு மாஸ்டர்மாராக வந்திருக்காங்கடி சரசு. ஏன், டீச்சராயும் வந்திருக்காங்க. எங்களுக்குத்தான் கொடுப்பினை இல்லடி சரசு..."

"அது கெடக்கட்டும் பூவு. மேட்டு லயத்து ராசு ஒன்னையைப் பத்தி விசாரிச்சாண்டி" அவளை ஆழமாக நோக்கியபடி கூறினாள். அவள் இதைக் கூறிய போது இறக்கை கட்டி வானத்தில உயர உயர பறப்பது போலிருந்தது. ஒரு மாதத்திற்கு முன்னால் ராசு அவளிடம் அவளை விரும்புவதாக கூறினான். ராசு ரோலி கரட்டில்லாத பையன். வேல வெட்டியிலயும் கெட்டிக்காரன். சரி என்று சொல்லி விடலாமா என பூவு யோசித்தாலும் இடையில் வந்த வெட்கம் தடுக்கவே ஒன்றுமே சொல்லாமல் விட்டு விட்டு என்று நடந்துவிட்டாள். சரின்னு சொல்லியிருக்கலாமேன்னு கவலைதான் அவளுக்கு. அதற்கப்புறமா அவன் அவளிடம் இது பற்றி பேசவேயில்லை. இப்போ சரசு கேட்ட போது அவளது உள்ளமெல்லாம் பூரித்தது.

தோழிகள் இருவரும் பீலியிலிருந்து லயத்துக்குத் திரும்பி வந்தபோது அடுத்த காம்பராவில் கூட்டமாகப் பலரும் நின்றிருந்தார்கள். என்னமோ ஏதோன்னு பதறியபடி அங்கு சென்று பார்த்தபோது சவுதியிலிருந்து சித்திராக்கா வந்திருந்தா. அவளைப் பார்த்தவுடன் அடையாளமே தெரியவில்லை. அந்த மாதிரி பூரிப்பாக இருந்தா. உடுப்பு, அணிகலனைப் பார்த்ததும் பூவாத்தாவுக்கு பிரமிப்பாக இருந்தது.

'இரண்டு வருடங்கள்தான் சித்திரா சவுதியில் வேலை செய்துவிட்டு வந்திருக்கிறா. எவ்வளவு பொருட்களைக் கொண்டு வந்திருக்கிறா. தோட்டத்தில வேலை செய்தா பத்துப் பன்னிரண்டு வருடத்திலும் முடியாது' என பூவாத்தா நினைத்ததையே சரசுவும் சொன்னாள்.

"நாமளும் வெளிநாட்டுக்குப் போனா என்னடி?" பூவாத்தா ஆவலோடு கேட்டாள். "எனக்கும் கூட ஆசையாகத்தான் இருக்கு. போன மாசம் கூட தோட்டத்துக்கு வந்திருந்த ஏஜண்டு கேட்டப்போ 'பயம்' என்று சொல்லி அம்மா மறிச்சிட்டா. அப்பனுக்கு என்னை அனுப்புறதில விருப்பம்தான்" என சரசு பதில் சொன்னாள். இருவருக்குமே வெளிநாடு போய் உழைக்கும் ஆசை தொட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்குச் சென்ற பூவாத்தா அம்மாவிடம் தனது ஆசையைக் கூறினாள். "அங்கே பயமில்லையாடி. அவ்வப்போது பேப்பரில என்னென்னமோ கதையெல்லாம் வருது... சில வீடுகளில சரியான கடும் வேலையாம்... ஓய்வு ஒழிச்சல் இல்லாம வேலை செய்யணுமா? சில வீடுகளிலை கடுமையாகத் தண்டிப்பாங்களாம்" தான் கேள்விப்பட்டதை அம்மா கூறியும் பூவாத்தாவுக்கு மனசு மாறவில்லை.

"அம்மா, எல்லா வீடுகளிலையும் அப்படியில்லையாம். சித்திராக்காவுக்கு கிடைச்ச வீடு ரொம்ப நல்லமாம். கடுமையாக நடத்தவில்லையாம், இப்போ லீவில வந்தப்போ நிறைய சாமான்கள் கொடுத்து விட்டவங்களாம். நல்ல நல்ல உடுப்பெல்லாம் கொடுத்தாங்களாம். நாளைக்கு எங்களுக்கும் அதில தாறதா சொன்னா..."

மகள் சொல்வதைக் கேட்டதும் அம்மாவின் மனதும் ஈடாடியது. வீட்டுக் கஸ்டம், கணவனின் நோய், கடன் சுமை. மகள் சவுதிக்குப் போனால் மாசா மாசம் பணம் அனுப்புவாள். கஸ்டங்களும் குறையும் என பலவாறாக அவள் யோசித்தாள்.

அடுத்த நாள் பூவாத்தா சரசுவைச் சந்தித்த போது வீட்டில் அம்மாவுடன் கதைத்தது பற்றி கூறினாள். சரசுவும் சிரித்தபடி, "நானும் வீட்டில் கதைச்சேன். அம்மாவும் ஒருமாதிரி சம்மதிச்சிட்டா" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

இதற்கிடையில் ராசு மறுபடியும் பூவாத்தாவிடம் தனது மனதைக் காட்டிய போது இம்முறை பூவாத்தாவும் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். அதே நேரம், இவர்கள் சவுதிக்குப் போகப் போவது பற்றியும் கேட்டான். அவள் சிரித்தபடி தலையசைத்தாள்.

"பூவு... இளம் பெண்கள் கண் காணாத தேசத்துக்குப் போறது ஆபத்தில்லையா? ஏன் இங்கேயே தோட்டத்தில வேல செய்யலாமே... சவுதியில கெடுத்திடுவாங்களாம்..."

"இந்தத் தோட்டத்தில இருந்து குளிர் மழை பாராமல் வேலை செய்தாலும் எதுவும் மிஞ்சப் போறதில்லை. எல்லாப் பொருட்களும் வெல கூடிக்கிட்டே போகுது. வீட்டிலேயும் கஸ்டம். அதுதான் போகணும்மின்னு தீர்மானிச்சோம். ஏன் ராசு, நீ கூட வெளிநாடு போகலாமே?"

"எனக்கு விருப்பமில்ல... தோட்ட வேலை சரிவராவிட்டா டவுனில கடை கண்ணியில வேலை செய்யலாம். நீயும் புடவக் கடை இல்லாவிட்டா காமன்ற்ஸ்ல வேலை செய்யலாம்..." ராசு அவளை எப்படியும் வெளிநாட்டுக்கு கவுஸ் மெயிட்டா போறத தடுக்கவே முயற்சித்தான். ஒவ்வொரு சந்திப்பின் போதும் அவன் கேட்கும் போதும் அவளது மனது தடுமாறும்.

ராசுவை விரும்பிப் பழக ஆரம்பித்த பின்னர் பூவாத்தாவின் மனதில் வெளிநாடு செல்லும் ஆசை குறைந்து கொண்டே வந்தது. சரசுவிடம் இதைக் கூறியபோது அவள் வெகுண்டெழுந்தாள். "ஏன்ரி பூவு, உன்னை நம்பித்தானே நானும் எல்லா ஆயத்தங்களும் செய்தேன்... இப்ப குழம்பினாக்க...?"

பூவு பதிலெதுவும் கூறாமல் மௌனமாக இருக்கவே சரசுவின் கோபம் அதிகரித்தது. "உன்னை நம்பி எல்லா ஒழுங்குகளும் செய்தேன்... ஏஜென்டுக்குக் கொடுத்த காசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி திருப்பித் தரமாட்டான்... உங்கம்மாவும் எவ்வளவு கஸ்டப்பட்டு கடன்பட்டு செலவளிச்சு பாஸ்போட் எடுத்தாங்க..." அவள் சொல்வதிலுள்ள நியாயம் பூவாத்தாவுக்குப் புரிந்தது.

மறுமுறை ராசுவைச் சந்தித்தபோது எல்லா விபரங்களையும் எடுத்துச் சொன்னாள். "இரண்டு வருசம் வேல செய்திட்டு வாறேன். அப்புறமா நாம கலியாணம் கட்டிக்கலாம்..." அவள் கெஞ்சுவதைப் பார்க்க அவனுக்கும் அந்தரமாக இருந்தது. எனினும் அவளைப் பிரிந்திருப்பதை அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

நீண்ட நேர கலந்துரையாடலுக்குப் பின்னர் அவள் போவதற்கு சம்மதித்தான் ராசு. "நான் உன்னையே நினைச்சபடி இருப்பேன்."

"ஒன்னுக்கும் யோசிக்காதீங்க... இரண்டு வருசம் போறது தெரியாமல் போயிடும்." அவள் கண் கலங்கினாள்.

பிரியப் போகின்றோம் என்ற ஆதங்கத்தில் அடுத்த சில நாட்கள் பூவாத்தாவும் ராசுவும் நெருங்கிப் பழகினர். முத்தங்கள் பரிமாறி தம் காதலின் ஆழத்தை பறை சாற்றிய போது இப்படி ஒரு தப்பு நடந்துவிடும் என பூவாத்தா நினைக்கவில்லை. வழக்கம் போல மேலோட்டமாக என்றுதான் தொடங்கினார்கள். மறுநாள் அவள் புறப்படப் போகின்றாள் என்ற தவிப்பு அவனுக்கு. அவனைப் பிரிந்து கண் காணாத தேசம் போகப் போகும் கவலை அவளுக்கு. இருவரும் ஒருவரை ஒருவர் தழுவி ஆறுதல் பெற்ற போது உணர்ச்சிகளின் உச்சத்தில் ஏதோ ஒரு சக்தி இருவரின் கட்டுப்பாட்டையும் உடைத்துக் கொண்டு அந்த இன்பத்தின் எல்லைக்கு இருவரையும் இட்டுச் சென்றது. சில நிமிடங்களில் அந்த இச்சை மிக்க வெறியாட்டம் ஓய்ந்து அடங்கிய போது அவன் கேட்டான், "பூவு... நீ போகத்தான் வேணுமா?"

அவளுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. எல்லையில்லா இன்பமான மன நிலையையும் மீறி இப்போது அவளது மனது அழத் தொடங்கியது. 'சீ... அவசரப்பட்டுட்டம். அதனால என்ன? கட்டிக்கப் போறவன் தானே?' அவள் தன்னையே தேற்றிக் கொண்டாள். போவதா விடுவதா என்ற குழப்பம் மனதில் மீண்டும் எழுந்தது.

அவளது மௌனத்தை உடைத்துக் கொண்டு ராசுதான் தொடர்ந்தான். "பூவு... என்ன பதிலையே காணோம். இங்கேயே நின்னுடு. நீ கொழுந்து எடுத்துக்கலாம். எனக்கும் மலையில வேல கிடைக்கும்..."

"எனக்கென்ன? உன்னை விட்டுட்டு போக விருப்பமா?... ஏஜென்டிடம் காசைக் கொடுத்திட்டோமில்ல... அதான்... அவன் பணத்தையும் திருப்பித் தரமாட்டான். பொறுத்ததோட இன்னும் கொஞ்சக் காலம் பொறுங்க... இரண்டு வருசம் வேலை செய்தால் போதும்..."

மிகுந்த கவலையுடன் பிரிந்தார்கள்.

குறிப்பிட்ட படி மறுநாள் பயணம் போகவில்லை. இரண்டு வாரம் தாமதமாகும் என ஏஜென்ட் கூறினான். இந்த இரண்டு வாரங்கள் அவர்கள் இருவருக்குமே தேனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனித்தது. மலையுச்சி, தோப்பு, ஒதுக்குப்புற தேயிலைத் தோட்டம் என அடிக்கடி சந்தித்துக் கொண்டனர்.

இரண்டு வாரம் கடந்த பின்னர் பூவாத்தா கொழும்புக்குச் சென்றாள். அங்கே ஒரிரு நாட்கள் பயிற்சி வழங்கினார்கள். அத்தோடு மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொண்டார்கள். பூவாத்தாவின் சலத்தைச் சோதித்த போது அவள் கருவுற்றிருப்பது தெரிய வந்தது. பூவாத்தா அதிர்ந்து போனாள். அவளது பயணமும் இதனால் இரத்தானது. ஏஜென்டும் தன் மீது தவறில்லை என பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுத்து விட்டான்.

ஏமாற்றத்துடன் ஊருக்குத் திரும்பிய அவளை வீட்டில் துருவித் துருவிக் கேட்டார்கள். அவள் 'பாசை' அறிவு காணாதுன்னு திருப்பியிட்டாங்க... அரபு கொஞ்சம் தெரியணுமாம்" என சமாளித்தாள். "அடுத்த மாதம் அனுப்புவாங்களாம்" அவள் ஒருவாறு கூறினாள்.

மாலையில் ராசுவைச் சந்தித்து கண்ணீர் மல்க எல்லாவற்றையும் கூறினாள்.

"இப்ப என்ன செய்யுறது பூவு? வீட்டுக்குத் தெரிந்தா பிரச்சினையாயிடும்போ" ராசு பதறினான்.

"மூடி மறைச்சு என்ன செய்யுறது? அப்படி மறைத்தாலும் இரண்டு மூன்று மாதத்தில தெரிய வரும்தானே? அதற்கிடயில் கலியாணம் செய்திடலாம்... எங்கப்பனை ஆத்தாவை ஒங்க வீட்டுக்கு சம்மந்தம் பேச அனுப்புறேன்..." பூவாத்தா கண் கலங்கியபடி கூறியபோது, ராசு பேசாமல் நின்றான்.

**"ராசுவின் பெற்றோர் மறுத்தது மட்டுமல்லாமல் ராசுவும், தனக்கும் பூவாத்தாவுக்குமிடையில் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று சாதித்தான். வாதாடி களைத்த பூவாத்தாவின் பெற்றோர் வீட்டுக்குத் திரும்பி அவளை நையப் புடைத்தனர். கதறி அழுதாள் பூவாத்தா."**

"என்ன, சொல்ல ராசு..."

"அவசரப்படாத பூவு... வீட்டில முதல்ல நம்ம விருப்பத்தைப் பத்தி சொல்லுறேன்... நாளைக்கு இங்கிட்டு வா... விபரம் சொல்லுறேன்..."

சொல்லி விட்டுப் போன ராசு மறுபடி அவளைச் சந்திக்க வரவில்லை. விசாரித்ததில் அவன் எங்கோ போய் விட்டதாகச் சரசு சொன்னாள். பூவாத்தா இடிந்து போனாள். இதற்கிடையில் அவளது கருவில் உருவான குழந்தை வளர வளர வாந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மசக்கையுமாகி வீட்டில் எல்லாமே தெரிய வந்தது. முதலில் அவளை ஏசிய பெற்றோர் பின்னர் ராசு வீட்டுக்குச் சம்மந்தம் பேசிச் சென்றனர். எங்கோ சென்று தங்கியிருந்த ராசுவும் வீட்டுக்குத் திரும்பியிருந்தான்.

ராசுவின் பெற்றோர் மறுத்தது மட்டுமல்லாமல் ராசுவும், தனக்கும் பூவாத்தாவுக்குமிடையில் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று சாதித்தான். வாதாடி களைத்த பூவாத்தாவின் பெற்றோர் வீட்டுக்குத் திரும்பி அவளை நையப் புடைத்தனர். கதறி அழுதாள் பூவாத்தா. அவளை ஏமாற்றமும் கவலையும் வாட்டி வதைத்தது. நம்பிக்கைத் துரோகம் செய்த ராசு மீது ஆத்திரமாக வந்தது. 'தற்கொலை' செய்வதைத் தவிர வேறு வழியே இல்லை என்று தவித்தாள். எனினும் ஒரு தடவை ராசுவைச் சந்திக்க வேண்டுமென மனது ஏங்கியது. மாலையில் சரசு அவளிடம் வந்தபோது அவள் மூலம் ராசுவுக்குத் தகவல் அனுப்பினாள். "வராது விட்டால் தற்கொலை செய்வேன்னு சொல்லடி சரசு."

மறுநாள் மலைத் தோப்பில் அவனைச் சந்தித்த போது அவன் முடிவாகச் சொல்லி விட்டான். "பெத்தவங்கள மீறி என்னால ஒண்ணும் முடியாது... கருவை அழிச்சிடலாம்."

"அப்படின்னா ஏன்டா காதலிச்சே? ஏன்டா தப்பெல்லாம் பண்ணினே?" அவள் குமுறினாள்.

"நான் மட்டும்தானா தப்புப் பண்ணினேன். நீயும் தானேடி?" அவன் ஈவிரக்கமற்று விதண்டாவாதம் பேசியதை பூவாத்தாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"நாளைக்கு என்ர பிரேதத்திலதான் முழிப்படா."

இரவு முழுவதும் பூவாத்தாவால் உறங்க முடியவில்லை. ராசுவின் மனதிலும் பயம் தொட்டது. ஒருவேளை உண்மையாகவே தற்கொலை செய்துவிடுவாளோ?

காலையில் எதுவும் நடக்கவில்லை. பூவாத்தா ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். 'பெண்கள் காலம் காலமாக குடும்ப கௌரவம், மானம் மரியாதை என்னு எதையும் தாங்கியபடி வாழ்ந்ததால்தான் பெண்களுக்கு இன்னும் விடிவு கிட்டவில்லை. குற்றவாளிகளை சட்டத்தின் முன்னர் நிறுத்தனும்.' கடந்த மாதம் மகளிர் அமைப்புக் கூட்டத்தில் பெண்ணிய அமைப்பு பிரதிநிதி உரையாற்றியது அவளது நினைவுக்கு வந்ததால் அவள் ஆக்கபூர்வமாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். அந்த முடிவால் மனது அமைதியானது.

பூவாத்தா காலையில் பெற்றோருடன் பொலிஸ் நிலையம் சென்று மகளிர் விவகாரங்களுக்குப் பொறுப்பான பெண் பொலிஸ் அதிகாரியிடம் முறையிட்டாள்.

பூவாத்தா தற்கொலை செய்யாததனால் சற்று பயம் தெளிந்து நிம்மதியுடன் இருந்த ராசுவுக்கு பேரிடி காத்திருந்தது. தோட்டத்து லயத்துக்கு வந்திருந்த பொலிசார் அவனைக் கைது செய்து விலங்கிட்டு அழைத்துச் சென்றனர்.

விடியும், இனி விடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காலத்திடம் கரைந்து போன திக்கவயல் சி.தர்மகுலசிங்கம்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு சாதனை வீரனாகத் தடம் பதித்து சென்றவரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மலர்வாக மணந்தவருமான திக்கவயல் சி.தர்மகுலசிங்கம் அவர்களின் ஒரு வருட நினைவு தினம் வருகின்ற 02.11.2012 அன்றில் நினைவு கூரப் படுகின்றது. மிகக் குறுகிய காலத்தினுள் அறிமுகமாகி, பல அறிவுரைகளால் ஆற்றுப் படுத்திய இந்த நல்ல மனிதர், ஓர் தந்தையின் ஸ்தானத்தில் நின்று எனது ஆற்றல் களையும் வளர்த்துவிட எத்தனித்தமை இன்னும் எனக்குள் ஆச்சரியமான ஓர் விடயம். கடந்த 2011 ஆகஸ்ட் மாதம் ஓர் தினத்தில் தொலைபேசியினூடாக எனது கவிதை பற்றி சிலாகித்த அவர் முன்பின் அறிமுகமில்லாத என்னை ஊக்கப்படுத்த வேண்டும், உதவி செய்ய வேண்டும் என நினைத்த அவரின் பெருந்தன்மை இப்போதும் கவிஞர் அவர்கள் மீதான மரியாதையினை அதிகரிக்கின்றது.

மூத்தவர்களின் வழிகாட்டல்கள், ஆலோசனைகள் என்பவை இளைய சமூகத்திற்கு எத்தனை அவசியமானதென்பதை இவர் போன்ற பெரியவர்களின் முன்மாதிரி நடவடிக்கைகள் மூலமே வளர்ந்து வருகின்றவர்கள் அதனை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப் பதும் தங்கியுள்ளது. அந்த முன்மாதிரியான, பெருந்தன்மையான விடயங்களை திக்கவயல் அவர்கள் மூலமாக என்னாலும் உணர்ந்து கொள்ள முடிந்தது. இலக்கிய உலகினில் தனது மொழியாழுமையினால் தமிழை சிறப்பித்துச் சென்ற அமரர் திக்கவயல் சி.தர்மகுல சிங்கம் அவர்கள் பற்றி நானறிந்த சில விடயங்களை உங்களோடும் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

சிதம்பரப்பிள்ளை, மயிலிப்பிள்ளை ஆகிய இருவருக்கும் 1947-09.13 அன்றைய தினத்தில் அவதரித்த தர்மகுலசிங்கம் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்.



த.எலிசபெத்

மூன்று சகோதரர்களுடன் வளர்ந்த இவர், தனது 20வது வயதில் எழுத்துத்துறைக்குள் காலடி பதித்துக்கொண்டவர். 1967ஆம் ஆண்டில் 'சிரித்திரன்' எனும் நகைச்சுவை ஏட்டில் திக்க வயல் எனும் புனைப்பெயரில் எழுத ஆரம்பித்து, தொடர்ந்து 23 ஆண்டுகள் அச்சஞ்சிகையில் தத்துவக் கட்டுரைகள், சிறுகதைகள் எனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடராக எழுதி வந்துள்ளார். அதிகமாக மக்கள் பிரச்சினைகள் பேசும் கட்டுரைகளாகவே அவை அமைந்துள்ளமை விசேட அம்சமாகக் குறிப்பிடலாம். அத்தோடு இவருடைய பல கட்டுரைகள் இலக்கியவாதிகளிடையே ஆய்வுக் கட்டுரையாக நோக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலக்கியத்திலும் சிறப்பித்த திக்கவயல், பத்திரிகைத்துறையிலும் ஈடுபட்டு வந்துள்ளமையையும் அவரது இலக்கிய அல்லது தமிழ் மீதான ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கின்றது. 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீரகேசரி பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும், 1987ல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு' புதினப் பத்திரிகையில் ஒரு வருடம் கடமையாற்றிய இவர் 1995ல் தினகரன் பத்திரிகையில் 'இலக்கியத்தில் சிரித்திரன் காலம்' எனும் கட்டுரையைத் தொடராக எழுதி வந்துள்ளார்.

மட்டு நகரில் ஓர் விலைக் கட்டுப்பாடு பரிசோதகராக கடமையாற்றிய இவர் தனது தொழில் நிமித்தம் பல்வேறு பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழ்ந்ததாகவும் அறிய முடிந்தது. இவ்வாறு பல இன்னல்கள் பிரச்சினைகள் மத்தியிலும் தனது பேனைச் சேவையினை இடைநிறுத்தாத திக்கவயல், எட்டு நூல்களைப் பிரசவித்துள்ளார். 1984ல் 'தத்துவப் படகு' எனும் தத்துவக் கட்டுரைகளின் தொகுப்பும் 'வரலாற்றில் தமிழும் தமிழனும்', 'சிந்தனைப் போராளி சிவஞான சுந்தரம்', 'தமிழன் நினைவு' கவிதைத் தொகுதி, 2003ம் ஆண்டில் 'மட்டக்களப்பில் கண்ணதாசன்' எனும் ஓர் ஆய்வு நூலும், 'நாட்டுக் கருடன் பதில்கள்', 'மார்க்சீயம் வரலாறு கண்ணோட்டம்', சிந்தனையைக் கிளறிய சிரித்திரன் மகுடி' ஆகிய எட்டுமே அவையாகும். இடையறாத இலக்கியச் சிந்தையில் தரித்திருந்த திக்கவயல் அவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தின் வரலாறு B.A. (Hons) பட்டதாரியுமாவார்.

காலத்தால் அறிந்த இக்கவிஞரின் கலை இலக்கிய சேவையினைப் பாராட்டி மத்திய மாகாண சபைக் கல்வி அமைச்சரால் 'இலக்கியச் சுடர்' எனும் பட்டம் வழங்கப்பட்டது. தனிமனிதனாக செயற்பட்ட திக்கவயல் 'சுவைத்திரள்' எனும் நகைச்சுவை இதழை 1993ஆம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பில் வெளியிட்டு வந்தார். இலங்கையில் மட்டுமல்லாது உலக நாடுகளிலும் வாசக வட்டங்களையும், எழுத்தாளர்கள், படைப்பாளிகளையும் அறிமுகப்படுத்தி களமமைத்துக் கொடுத்துவந்த சுவைத்திரள் நகைச்சுவைக்கென்று குறிப்பிட்டு சொல்லக்கூடிய சஞ்சிகையாக வெளிவந்தது. புன்னகையை மறந்து போயிருக்கும் நம் அவசர உலகில் சுவைத்திரளின் பங்கு மிக அவசியமானதொன்றாகிப் போன வேளையில், 37 இதழ்கள் மட்டுமே வெளிவந்த நிலையில் தடைபட்டுப் போனது இலக்கிய உலகின் துரதிர்ஷ்டமே.

நாடறிந்த எழுத்தாளனாய், இலக்கியத்துறை அரவணைத்த மொழியாளனாய் தமிழுலகில் தடம் பதித்த திக்கவயல் சி.தர்மகுலசிங்கம் அவர்கள் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் மண்ணுலகை விட்டேகிய செய்தி மிகுந்த அதிர்ச்சியலைகளை ஏற்படுத்திய சோகமாகியது. தனது 9வது இதழாக வெளியிட நினைத்த 'இலக்கியத்தின் சிரித்திரன் காலம்' எனும் தொகுப்பும், சுவைத்திரள் 38வது இதழும் அச்சில் இருக்கும் பொழுதே இவரின் உயிர் இலக்கிய சுவாசத்தை நிறுத்திக் கொண்டது. தமிழுலகின் பேரிழப்பாகும். கிட்டத்தட்ட கடந்த நாற்பத்து நான்கு ஆண்டுகளாகச் சிந்திய பேனா மையின் மூச்சு மூர்ச்சையானது. ஆனாலும் அவர் தந்த இலக்கிய பொக்கிஷங்கள் காலத்தோடு கைகோர்த்து பயணித்துக் கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# இரங்கலுடன் காத்திருத்தல்

அழகை எல்லாம் பனிப்பாறையாய்
சுமந்து வந்தாள்
அழையா விருந்தாளியாக
என் வனத்துக்குள்

காட்டுப்பூக்கள் கையசைத்தன
பட்சிகள் பாடிப் பறந்தன
பட்டாம் பூச்சிகள் தலைக்குனிந்தன
எனக்குள் இருந்த புலிகள் கூட
பூனைகளாய் படுத்துக் கொண்டன

ஆனால் அடிமனநரி மட்டும் ஊளையிட்டது

என் விழிவானத்து விண்மீன்கள்
அவளது பனிப்பாறைகளை உடைத்தன



மல்லிகையும் சிவப்பு ரோஜாவும்
கலந்த புன்சிரிப்புடன்
உடைந்த பனித்துண்டுகளை
பொறுக்கி எடுத்தவாறே
என்னருகில் அமர்ந்தாள்

நான் வியர்வையில் மழையானேன்
என்சூட்டில்
சூரியன் மலைக்குள்
இரத்தம் கக்கியவாறு பதுங்கியது

பனித்துண்டொன்றை
ரொம்ப நேர்த்தியாய் செதுக்கி



– ஈழக்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவாக்கித் தந்தாள்
என் காட்டுப்பூக்கள் செத்தன
இன்னுமொரு பனித்துண்டில்
கிளியொன்றை செதுக்கித் தந்தாள்
என் பட்சிகளின் பாடல்களை மறந்தேன்

பட்டாம்பூச்சியை தந்தபோது
எல்லா அழகுகளையும் அவளில் மட்டுமே தரிசித்தேன்

பிறகு ஒரு சிங்கம்
எனக்குள் இருந்த மிருகங்கள் எல்லாம்
வனத்தை மாற்றிக்கொண்டன

ஆனால் அடிமனநரி மட்டும் ஊளையிடுவதை நிறுத்தவில்லை
எனக்கது ஒரு பொருட்டாக இருக்கவுமில்லை

லாவகமாய் கைகளை உதறினாள்
பனித் துகள்களால் குளிர்ந்தேன்

அவள் செதுக்கியவை எல்லாம் உருகிவழிய வழிய
இருவரும் அதில் சேர்ந்து நனைந்தோம்
புற்களில் விழுந்த குமிழிகளை
உடைத்து மகிழ்ந்தோம்

மழைநாட்களில் நெருப்பாகி
கைகோர்த்து நடந்தோம்

நீருற்றுக்களில் மூழ்கி எழுந்தோம்
நதிகளில் நீந்தி விளையாடினோம்

ஒருநாள் கடலில் முத்துக்குளிக்க அழைத்தேன்
நாளை என்று போனாள்

நெய்தலுக்கு இன்னும் அவள் வரவில்லை
இரங்கலுடன் காத்திருக்கிறேன்
என் அடிமனநரி அவள் பாலைவன ஒட்டகத்தில்
பயணிப்பதாக சொல்லிச் சொல்லி
என்னை கடித்துக் குதறுகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபாலி லீலாரட்ன வின்

# நாவல்களிலிருந்து சில பகுதிகள்

## 1. மனுதெய்வ வனம் (மனுதெவ் அரண) - 2006

இருள் படர ஆரம்பிக்கும் போது பெருந்தோட்ட லயன் வரிசை எல்லையிலுள்ள சிறு ஒழுங்கைகளுக்கூடாக கல்கந்தை கோயில் பக்கமாக பெரியோர் சிறியோர் அனைவரும் வெளிப்பட்டனர். கோயில் பூமியை நோக்கிச் செல்லும் தாரிட்ட பாதையில் நகரத்திலிருந்து வந்த பல வாகனங்கள் பயணித்தன. வருடாந்த தேர் உற்சவம், அபிசேக உற்சவம் போன்ற பூஜை உற்சவத்துக்கும் கோயில் பூமி தயாராகியிருந்தது. பெரும் பூஜைகள் நடக்கும் போது பெரிய சத்தம் எழுப்பும் ஒலிபெருக்கிகள் இல்லாமையே ஒரு குறைபாடாகத் தெரிந்தது. இருந்தாலும், தோட்டப்பகுதி தொழில் நுட்பக் கலைஞர் ஒருவருக்குச் சொந்தமான ஒலிநாடா யந்திரத்திற்கூடாக வெளிப்பட்ட பக்தி கீதம் கோயிலுக்குள் ஒலித்த வண்ணமிருந்தது...

"குன்றத்திலே குமரனுக்குக் கொண்டாட்டம்"

## 2. விடைபெற்ற வசந்தம் (பின்வன்தலாவ) - 2008

வெள்ளையன் வருவதைக் கண்ணுற்று சுனில் அவனருகே சென்றான். அவன் வருவது எதற்காகவென்று வெள்ளையன் அறிந்திருந்தான்.

"வேலயில்லடா, காணிக்கை இருப்பது இரண்டு சதம்" வெள்ளையன் சொன்னான்.

"யோசிக்காதேடா. ஆசாரி தாத்தாவிடம் வாரவங்களும் அவாப் போலவே அவிசல் கஞ்சன்கள். கைகால நீட்டி ஒரு இருபத்தைந்து சதம் வைக்க முடியாத அவங்களுக்கு? பேயா... பிச்சக்காரனுக்கு கொடுக்கிறது போலவா கடவுளுக்கும் கொடுக்கணும்? பரவாயில்ல. அதயாவது கொடு" அவ்வாறு கூறியபடி சுனில் பூஜை பொருட்களின் பக்கமாகப் பார்த்தான்.

"இந்த முட்டையும் மாடசாமிக்கா?" அவ்வாறு யோசித்தவாறு தொடர்ந்து சுனில் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முட்டையைக் கையிலெடுத்து நன்கு பரிசோதித்துப் பார்த்தான்.

வெள்ளையன் குழப்பமடைந்தான். அவனது மனதில் ஒருவிதப் பயம் பற்றிக் கொண்டது.

## 3. பனிப்பள்ளத்தாக்கு (மிதும் நிம்னய) - 2012

"இந்தக் காலத்தில படிக்கிறதுக்கு பத்திரிகையொன்று இல்லை ஐயா. எல்லாவற்றிலுமே இருப்பது, தமிழர்களைப் பற்றி உணர்ச்சி வசப்பட்டு எழுதியிருப்பதுதான். இந்தப் பேப்பர் காரங்களும் செய்றது தமிழர்கள விற்றுப் பிழைப்பதுதான். ஓர் இனம் என்ற வகையில் எங்களுக்கும் ஒரு அபிமானம் இருக்கு. இது எங்கட தாய்நாடு. நாங்கள் சிறுபான்மையாக இருந்தாலும், எங்களுக்கும் இந்த நாட்டில் சமாதானமாக நன்றாக வாழக்கூடிய நிலையிருக்கு. சிங்கள மக்கள் எங்கள் சுதந்திரத்தைக் குழப்புவதில்லை. இந்த நாட்டில் எந்த இடத்திலும் எங்களால் வாழ முடியும். எங்களுக்கு விருப்பமான தொழிலயும் செய்யலாம். எங்கள் மதக் கலாசாரத்தை மதிக்கின்றனர். இதற்கு மேல் என்ன? இந்தப் பேப்பர்காரரும், படித்த தமிழரும், அரசியல்வாதிகளும் இல்லாத பிரச்சினையை உருவாக்கிறாங்க ஐயா. அதனால் சிங்கள மக்கள் எங்கள சந்தேகத்தோட பார்க்கிறாங்க..."

செல்லையா செய்திப் பத்திரிகையைக் கையிலெடுத்து ஒருபக்கமாக வைத்துவிட்டு ஆவேசத்தோடு சொன்னார்.


**மல்லிகை 48ஆவது ஆண்டு மலர்**


**மல்லிகை 48வது ஆண்டு மலரில் சிறப்புப் பகுதியாக மொழிபெயர்ப்பு படைப்புக்கள் இடம் பெற இருக்கின்றன. மொழிபெயர்ப்பு படைப்புக்களை அனுப்ப விரும்புவர்கள் 15.12.2012 முன் படைப்புக்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.**

**மின்னஞ்சலில் அனுப்ப விரும்புவோர் மல்லிகையின் மின்னஞ்சல் முகவரிக்கு Ms Wordஇல் பாமினி எழுத்துருவில் (Fonts) அனுப்பி வைக்கவும். குறுந்தகடு (CD) மூலம் அனுப்ப விரும்புவோரும் இதனைக் கவனத்தில் கொள்ளவும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வினை



மல்லிகை, 400ஆவது இதழ் சில மாற்றங்களோடு வெளிவந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.



படைப்பாளிகளின் படங்களோடு ஆக்கங்கள் பிரசுரிக்கப் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

அட்டைப்படம், '400 கலை இலக்கியப் பயணத்தின் ஒரு மைற்கல்' அர்த்தமுள்ளதாக அமைந்துள்ளது.

உள்ளடக்கம் புதிய பாணியில் அறிமுகஞ் செய்யப் பெற்றுள்ளது.

"வெளியீட்டு ஊடகங்கள் படைப்புக்களை வெளியிடுவதில் காட்டுகின்ற ஆர்வம், அப்படைப்பைப் பற்றிய சுவைஞர்களின் வாசகர்களின் அபிப்பிராயங்களை - கருத்துக்களை வெளியிடுவதில் காட்டுவதில்லை. இந்நிலை மாற வேண்டும். படைப்பாளிக்கும் வாசகர்களுக்கும் சுவைஞர்களுக்குமிடையிலான உறவு - தொடர்பு நெருக்கப்பட வேண்டும்" என்ற மல்லிகை ஆசிரியரின் கருத்து மிக முக்கியமானதொன்றாகும்.



இரா.சடகோபனின் 'கருஞ் ஜுலை' அந்தக் கொடூரமான நினைவுகளைத் தட்டியெழுப்பக் கூடியதாக - ஒரு வித உள உளைச்சலை ஏற்படுத்துவதாக இருந்தது.

தோழனாய் இருந்தவர்கள் தோள் கொடுக்க வேண்டிய சமயத்தில், இனவாத இழிசனப் போக்கால் மனம் மாறியதைக் காண முடிந்தது.

பதுளையில், டாக்டர் சிவஞானம் 'தெய்யா' எனப் போற்றப் பெற்றவர். 'கருஞ் ஜுலை'யின் போது, அவரோடு நட்புப் பாராட்டியவர்கள் அவரைக் கொலை செய்ய எத்தனித்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் மறக்க இயலாது. இதில் வேடிக்கை என்னவென்றால், டாக்டரின் மனைவி ஒரு பௌத்தர். இங்கு மதமோ நட்போ இடம்பெறவில்லை. 'கொலைவெறி'யே தலைக்கேறி இருந்தது.

காத்தநகர், முகைதீன் சாலியின் 'பண்டார மாத்தையா' கதையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நம்பிக்கை இழந்த நட்புக்கு ஒரு நெருடலாகவே கதை அமைந்திருந்தது.



ஸ்ரீ ரஞ்சினியின், 'மீண்டும் ஒரு பிறப்பு' கதையும் ஒரு விதத்தில் மேற்குறிப்பிட்ட கதைகளோடு சம்பந்தப்படுவதையும் காணலாம்.

## பதுளை சாரணாகையூம்

புதுமணம் பரப்பத் தொடங்கியிருக்கும் மல்லிகை தற்பொழுது தனது மரபினில் புதுமையைத் தாங்கி வருகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆசிரியர் பக்கம், சிறுகதை, கவிதை, கட்டுரை, ரசனைக் குறிப்புக்கள், வாசகர் கருத்துக்கள், கேள்வி பதில் என்பனவே வழமையான சிற்றிதழின் சிறப்பாக இருந்து வருகின்றது. ஆயினும் கடந்த செப்டம்பர் மாத இதழோடு இது மாற்றமடைந்திருப்பதை மல்லிகை வாசகர்கள் அறிவார்கள்.

இதிலே எழுத்தாளனின் ஆக்கத் தலைப்புகளுடன் அவர்களது பெயர்களும் முன்பக்கத்திலேயே பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. நிச்சயம் இடம்பெற வேண்டிய ஒன்று. தொடர்ந்து வருவது சிறப்பு. இல்லையேல் பக்கம் பக்கமாகப் புரட்டி யார் யார் எல்லாம் இந்த இதழில் என்ன என்ன விடயம் பற்றி எழுதி இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதே கஷ்டம்.




இந்நடைமுறை மல்லிகையின் ஆரம்பகால இதழ்களில் பின்பற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பழைய வாசகர்கள் அறிவார்கள். அக்கால எழுத்தாளர்களின் பெயர்கள் முன் அட்டையிலேயே பிரசுரமாயின. சுமார் 37 வருடங்களுக்கு முன்னர் 1975ஆம் ஆண்டு ஜுலை மாத மல்லிகை இதழில் பிரபல எழுத்தாளர்களான எல்.முருகபூபதி, ஆகசி, பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், பிரபல இலக்கிய விமர்சகரும், ஆய்வாளருமான கே.எஸ்.சிவகுமாரன், எஸ்.எம்.ஜே.பைஸ்தீன், மு.கனகராஜன், ஜமாலி, ஏ.கிரீன், மருதூர் கொத்தன் ஆகியோருடன் (எம்.எம்.மன்ஸுர்) என்னுடைய பெயரினையும் முன் அட்டையில் பிரசுரித்திருந்ததை ஓர் உதாரணத்துக்காகவும், புதிய வாசகர்கள் அறிய வேண்டும் என்பதற்காகவும் அவ்விதழின் புகைப்படப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி ஒன்றினையும் இங்கு தந்துள்ளேன். இவ்விதழ் மூலம் அன்றைய மல்லிகையின் தோற்றத்தினையும் அறிந்துகொள்ள முடியும். அதற்குப் பிற்காலத்தில்தான் அட்டைப்பட நாயகர்கள் மல்லிகையின் முன் பக்கத்தினை அலங்கரிக்கத் தொடங்கினர் எனலாம்.



தற்பொழுது ஆசிரியரின் கருத்து, சட்டம் கட்டிப் போடப் பட்டிருப்பதும் ஒரு மாற்றம்தான். ஞாபகக் குறிப்புக்கு உள்ளாகுப வரையும், குறிப்பு எழுதுபவர்களையும் வாசகர் அறிந்து கொள்ளும் வகையில் புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுவது சிறந்ததொரு செய்கை. மற்றது இரசனைக் குறிப்புக்கு உள்ளாகும் நூலின் படமும், எழுதியவர், விமர்சகர் பெயர்களும் படங்களுடன் இடம் பெறுகிறது. மொழிபெயர்ப்பும் அப்படித்தான். ஆரம்ப எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் என்பவர்களது பெயர்களோடு, ஆரம்ப எழுத் தாளரின் வாழ்க்கைக் குறிப்புகளும் இடம்பெறுவது ஆக்கத்துக்கு அழகு சேர்க்கிறது.

நிகழ்வின் அவதானங்களை சிறந்த முறையில் தொகுத்து பொருத்தமான புகைப்படங்களுடன் விபரங்களைத் தந்துவரும் கே.பொன்னுத்துரை அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கொடகே சாகித்திய விழா 2012இல் விருது பெற்றவர்களின் விபரங்கள் தாங்கிய புகைப்படங்கள், தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் அமரர் கலாசூரி ஆர்.சிவகுருநாதன் அவர்களின் நினைவுப் பேருரை விபரங்களோடு வழமையான இலக்கியப் படைப்புக்கள் இதழைச் சிறப்படையச் செய்திருக்கிறது.




கடந்த இதழுடன் ஒப்பியல் என்றொரு அம்சத்தைச் செய்து வரும் மேமன்கவி 'இரு பௌருஷம்'கள் என்ற கதைத் தலைப்பை இரு வேறுபட்ட எழுத்தாளர்கள், அதாவது இந்தியாவின் (தமிழ கத்தின்) பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனும், இலங்கை எழுத்தாளர் எஸ்.ராஜகோபால் என்பவரும் எப்படித் தமது கதைக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள், அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை, கருப் பொருள் என்பவற்றை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்ந்திருக்கிறார்.

2001-2010 வரையிலான பத்தாண்டு காலத்தில் மல்லிகையில் வெளியான சிறுகதைகளைப் பற்றியும், அவற்றின் தன்மைகளைப் பற்றியும் கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ் பி.ஏ. சிறப்புப் பாட நெறிக்காக ஆய்வு செய்து சிறந்த, காத்திரமான ஓர் ஆய்வுக் கட்டுரையை பிரியதர்சினி தந்திருக்கிறார். இக்கட்டுரையைப் படைப் பதற்கு அவர் 254 மல்லிகைச் சிறுகதைகளை ஆராய்ந்திருக்கிறார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அறியும்போது அவர் எத்தகைய முயற்சியை மேற் கொண்டிருக்கிறார் என்பது புரிகிறது. கடந்த 400ஆவது இதழில் நான் மொழிபெயர்த்த கே.ஜயதிலக்க அவர்களின் சிறுகதையின் தலைப்பு இடம்பெறவில்லை என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். அச்சிறுகதையின் தலைப்பு **'மாற்றம்'** ஆகும்.



மாவனல்லை **எம்.எம்.மன்ஸூர்**

ஒக்டோபர் 2012, 400ஆவது இதழ், மல்லிகை படித்தேன். மல்லிகை அண்மைக் கால இதழ்கள் வடிவமைப்பிலும், உள்ளடக் கத்திலும் புதிய பரிமாணங்களை எட்டியிருப்பது குறித்து மகிழ்ச்சி. தமிழகத் தீவிர இலக்கிய சஞ்சிகைகளின் தரத்திற்கு மாற்றம் கண்டிருப்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அம்சமாகும். 1983இல் நடந்த கொடூர மனித இனக் கொலையை சடகோபன் கருஞ் ஜூலையாக்கிப் படைத்திருந்தார். சிறந்த பதிவு. வாசிப்போரை உறைய வைக்கும் எழுத்தோட்டம்.

அதைப் படித்த அதிர்விலிருந்து இன்னும் நான் மீளவில்லை. இது கதையல்ல! நிஜம். ஸ்ரீரஞ்சினியின் மீண்டும் ஒரு பிறப்பு நெஞ்சை நெகிழ வைக்கும் கதை. யுத்தக் கொடூரத்தால் ஒரு கையினை இழந்த பெண்ணின் துயரம் செறிந்த இருப்புத் துல்லிய மாக்கப்பட்டிருந்தது.



'காவி உடைக்குள் ஒரு காவியம்' மறைந்த தமிழ் அபிமானி ரத்னவன்ச சுவாமிகள் குறித்த நினைவுச் சித்திரத்தை முருகபூபதி வடித்திருந்தார். அது என் மனதில் பழைய நினைவுகளை இரை மீட்ட வைத்தது. முருகபூபதி அவர் மீது அதீத அன்பு பாராட்டினார். நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார் என்பது இலக்கிய உலகம் நன்கறிந்த செய்தியாகும். அவரை அடிக்கடி விகாரைக்குச் சென்று சந்தித்துக் கலந்துரையாடியவர்களில் நானும் நிலாமும் முக்கிய இடம் பெறுகிறோம்.

மினுவாங்கொடைக்கும், கொரஸ்ஸ பன்சலைக்கும் ஏழு மைல் தூரமிருக்கும். இருந்தும் அவரது மரணச் செய்தியினை உடனே எனக்கு அவுஸ்திரேலியாவிலிருந்து தொலைபேசியில் அறியத் தந்தவர் முருகபூபதி. சுவாமிகளை அறிந்த கொழும்பு எழுத்தாளர்களுக்கெல்லாம் நான் தொலைபேசியில் அறிவித்தும், அவரது இறுதிக் கிரியைகளில் எவருமே கலந்துகொள்ளாதது, இலக்கிய துர் அதிர்ஸ்டவசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேமன்கவியின் இரு பௌருஷங்கள் ஒப்பியல் பார்வை, சிலாகிக்கத் தக்கவை. ஜெயகாந்தன் - ராஜகோபல் ஆகியோரின் சிறுகதைகளை தேடல் மனதுடன் தேடிப் பிடித்து ஒரு காத்திரமான ஆய்வினைச் சிறப்பாக அவர் செய்திருந்தார்.

இறுதியாகத் தூண்டில் கேள்வி - பதிலில் ஈழத்து பெண் கவிஞர்களின் கவிதைகள் ஓலங்கள் என்ற தமிழகப் பெண் கவிஞர்களின் கருத்து பற்றி எனக்குச் சிரிப்பு வந்தது.

மனித கொலைகளும், இனவெறியும் தலைவிரித்தாடும் ஈழ மண்ணிலிருந்து ஓலங்களும், அவலமுமின்றி வேறெதைக் கேட்க முடியும்? ஈழத்துப் பெண் கவிஞர்களில் பலர் தமிழகத்தை மிஞ்சும் அளவிற்குப் போர்ச் சூழலை நேர்த்தியாகக் கவிதையாக்கியுள்ளனர். தமிழகப் பெண் கவிகள் பலரிடம் சந்தை இரைச்சலாய், உடல் மொழி ஓலம்தான் செவிபடைக்கக் கேட்கிறது.

மினுவாங்கொடை முபஷீர்

A. R. R. HAIR DRESSERS

89, Church Road,
Mattakuliya,
Colombo - 15.
Tel : 0112527219

முற்றிலும் குளிரூட்டப்பட்ட சலூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எண்ணமும் எழுத்தும்**

கட்டுரைத் தொகுப்பு

**எஸ்.சந்திரபோஸ்**

அஸ்ரன் பப்பிளிக்கேசன்

கொழும்பு



**கண்ணீரினூடே தெரியும் வீதி**

சிறுகதைத் தொகுதி

**தேவமுகுந்தன்**

காலச்சுவடு

சென்னை



**ஓசை**


ஆசிரியர்:

**மூதூர் முகைதீன்**

மூதூர் கலை

இலக்கிய மன்றம்

மூதூர்




**கூடுகள் சிதைந்தபோது**

சிறுகதைத் தொகுப்பு

**அகில்**

வம்சி

சென்னை



**கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது**


கவிதைத் தொகுப்பு

**ஏ.பீர் முகம்மது**

கல்முனை கலை

இலக்கியப் பேரவை

கல்முனை



**ஊற்றுக்களும் ஒட்டகங்களும்**

கட்டுரைத் தொகுப்பு

**லெனின் மதிவானம்**

பாக்யா பதிப்பகம்

கொழும்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்



# ஆர்.எம்.நௌஸாத்தின் 'வெள்ளி விரல்' - சமூகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் விளக்கு





– மேமன்கவி –

## 1. நானும் ஆர்.எம்.நௌஸாதும்

ஆர்.எம்.நௌஸாத்!

புதுக்கவிதை இலங்கையில் குறிப்பாகக் கிழக்குப் பிரதேசத்தில் புது வெள்ளமாய் பாய்ந்து கொண்டிருந்த, 70களின் நடுப்பகுதி காலந் தொடக்கம் அவரது படைப்புகளின் மூலமும், நேரிலும் நான் அறிந்து வைத்திருக்கும் படைப்பாளி.

இடைப்பட்ட காலத்தில் அவரது இலக்கிய குரல் உரத்து ஒலிக்காத நிலையில், நட்டுமை என்ற நாவலுடன் அவரது இலக்கியக் குரல் அவதானத்துடன் ஒலிக்கத் தொடங்கிய பொழுதும், இடைக்கிடையே இலக்கிய ஊடகங்களில் "இன்ன இன்ன போட்டிகளில் இன்ன இன்ன இடத்தைப் பெற்ற" என்ற அடையாயாளத்துடன் அவரது படைப்புக்கள் படிக்கக் கிடைத்தன.

அவ்வாறான படைப்புக்கள் ஒரு தொகுப்பாக "வெள்ளி விரல்" என்ற பேரில் என் கையில் கிடைத்தமை, அவரது படைப்புக்களை பற்றி எனது வாசக அனுபவத்தை முன் வைக்கும் தருணமாக அமைந்தது.

மற்றப்படி, அவருக்கு இந்த நூலுக்காகக் கிடைத்த சாகித்திய மண்டல பரிசு அவரிடமிருந்து இந்த நூலை பெறுவதற்கும், அவருடனான தொடர்பைப் புதுப்பித்துக் கொள்ள உதவியதே தவிர, அவரது படைப்புக்களை பற்றிய எனக்கான கருத்துக்களை உருவாக்கத்திற்கு காரணமாக அமையவில்லை என்பதை இங்கு அழுத்தமாகச் சொல்ல வேண்டி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வெள்ளி விரல் தொகுப்புக்குள் உள் நுழைந்த பொழுது...

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பிரதிகள் ஒவவொன்றையும் வாசித்து முடிந்த பொழுது, அப்பிரதி ஒவ்வொன்றின் இறுதியிலும் அப்பிரதிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்த தர நிர்ணய சான்றிதழ்களான, அதாவது "இன்ன இன்ன போட்டிகளில், இன்ன இன்ன பரிசு" என்ற அறிவிப்புக்கள். அவ்வறிப்புக்கள் அவரது பிரதிகளிட்ட பிறரின் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தியதன் காரணமாக, அவரது பிரதிகளிட்ட எனது வாசிப்பு அனுபவத்தின் மீது செல்வாக்கு செலுத்த முயற்சித்தமை, முதலில் இத்தொகுப்பை படிக்க ஆரம்பித்த பொழுது நான் எதிர்கொண்ட நெருக்கடி ஆகும்.

படிக்கத் தேர்ந்தெடுக்கும் எந்தவொரு நூலுக்கும் வழங்கப்படும் முன்னுரை, பதிப்புரை, என்னுரை என்ற வகையான உரைகளை, அந்த நூலை ஒட்டிய திறனாய்திற்கு வருவதற்கு முன், அவ்வகையான உரைகளை வசிப்பதைத் தவிர்ப்பவன் என்ற வகையில் அவ்வறிப்புக்கள் எனக்கு நெருக்கடியை ஏற்படுத்தின.

அதேவேளை அப்பிரதிகளைப் பற்றிய என்னுடைய அனுபவத்தை மேலும் கூர்மைப்படுத்திய, உதவிய குறிப்புக்களாக, அப்பிரதிகள் வெளிவந்த ஆண்டுகள், வெளியீட்டுக் களங்கள் பற்றிய விபரங்கள் உதவின என்பதும் மறுப்பதற்கில்லை.

## 3. வெள்ளி விரல் தொகுப்புப் பிரதிகளில், உள்ளடக்கங்கள் தரும் அனுபவங்களைத் தாக்கபூர்வமாக வெளிப்படுத்தாத பிரதிகளின் பட்டியல்

1. வதனமார்
2. வேக்காடு
3. கல்லடிப் பாலம்
4. தலைவர் வந்திருந்தார்
5. சாகும் தலம்

மேற்குறித்த பிரதிகளில் வெளிப்பட்ட உத்திகள், நடை, சித்திரிப்பு போன்றவைகளில் அவை சிறப்பாக இருப்பினும், அப்பிரதிகள் பேச முனையும் விடயங்கள் பற்றிய அனுபவங்களைத் தாக்கபூர்வமான முறையில் உள்வாங்க வைக்கவில்லை என்ற காரணத்தால் மேற்குறித்த பட்டியலில் அப்பிரதிகள் இடம்பெறுகின்றன.

## 4. 12 பிரதிகளைப் பற்றிய 12 குறிப்புக்கள்

### 1. தாய் மொழி

தாய்லாந்து நாட்டில் ஓர் உல்லாச விடுதியில் காவலாளியாகப் பணிபுரியும் இலங்கை தமிழர் ஒருவர், அவ்விடுதியில் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவனை பொலீஸிடம் ஒப்படைக்க, அதற்குப் பிறகு அவன் ஒரு தமிழன் என்று தெரிந்த பின், அவனை பொலிஸிடமிருந்து தப்பிக்க வைத்து, அதன் காரணமாக அந்தக் காவலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்ளும் ஆபத்துடன் இப்பிரதி முடிகிறது. தாய்லாந்து நாட்டு மொழியை தாய் (Thai) என்று சொல்வதும், அச்சொல்லை தாய் மொழி என்ற தமிழ்ச் சொல்லுடன் இணைப்பது என்பது சொல் விளையாட்டாக இருந்த பொழுதும், அச்சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது. இப்பிரதியின் தொடக்கமானது வெளிநாட்டு வேலை வாய்ப்பில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைப் பற்றிப் பேசப் போகிறது என்ற வாசக எதிர்பார்ப்புக்கு மாறாக தாய் மொழி பிரியனின் தியாகத்துடன் முடிகிறது.

## 2. வதனமார்

காணாமல் போன தன் பசு மாட்டை கண்டுபிடிக்கப் பேயாட்டியின் உதவி நாடி போகும் சோணியன், பேயாட்டியின் மந்திரத்திற்குக் கட்டுபட்டு தன் பசுவை தேடி காட்டுக்குள் ஓட, அவனுக்கு பின்னால் அவனது மருமகனும் ஓட, இறுதியில் காணாமல் போன பசு மாடு நக்கிக்கொண்டிருக்கும் நிலையில் மருமகன் சோணியனின் பிணத்தைக் காணுவதுடன் முடிகிறது.

இப்பிரதி கணிசமான அளவில் பேயாட்டி, மந்திரம் என்பதை பற்றி பேசினாலும், ஒட்டு மொத்தமான பிரதி வழியாக கிடைக்கப் பெறும் அனுபவம் தாக்கபூர்வமான ஒன்றாக அமையாமல் போவதால் இப்பிரதி, உள்ளடக்கங்களைத் தரும் அனுபவங்களைத் தக்கபூர்வமாக வெளிப்படுத்தாத பிரதிகளின் பட்டியலில் சேர்கிறது

## 3. வெள்ளி விரல்

புதுமணப் பெண் நஸீறா அவள் கணவன் தொடும் பொழுது அனல் அடிப்பதாக கூறுவதைக் கேட்டு அவனது பாட்டி அவளுக்கு யாரோ சூனியம் செய்து விட்டார்கள் எனக் கருதி, ஊரில் பிரபலமான ஒரு மலையாள மாந்திரிகம் செய்யும் ஒருவரிடம் அழைத்துச் செல்ல, அங்கு "ஒரு ஆணின் விரல் நுனி பட்டாலும் கொதித்துப் போகும்" தன் பேத்தி நஸீறா, எந்தவித எதிர்ப்புமின்றி அந்த பரிகாரியுடன் அவரது படுக்கைறையில் அவருடன் கட்டுண்டு இருப்பதை கண்டு அதிர்ந்து போகிறாள்.

பிரதியின் ஆரம்பம் மலையாள மாந்திரிக்காரனின் கபட நாடகத்தைப் பற்றி, அவரது போலிமை பற்றிப் பேசப் போகும் பிரதியாக இருக்கும் என்று பார்த்தால் இறுதியில் நஸீறா என்ற பெண்ணின் பாலியல் உணர்ச்சி சம்பந்தமாக பேசுவதாக முடிகிறது.

நஸீறாவின் இம்மாற்றம் ஏன் ஏற்பட்டது, எதற்கு ஏற்பட்டது என்ற விபரிப்பு அப்பிரதியில் திறந்த நிலையில் காணப்படாத்தால், வாசகர்கள் தமக்கு விருப்பமான முறையில் தமக்கான ஒரு பிரதியை, நஸிறா பாலியல் உணர்ச்சியை முதன்மைபடுத்தி உருவாக்கிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை அப்பிரதியின் கட்டமைப்பு வழங்குகிறது. அத்தோடு பெண்ணியச் சிந்தனையுடன் யோசிக்க வைக்கும் ஒரு பிரதியாக அது முடிந்தும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பொறுத்த வரை, உத்தியிலும் சரி, கட்டமைப்பிலும் சரி, பேசும் பொருளிலும் சரி இத்தொகுப்பில் அமைந்துள்ள பிரதிகளில் தாக்கபூர்வமான பிரதியாக இப்பிரதி எனக்குப் படுகிறது.

## 4.விட்டு விடுதலையாகி..

விட்டு விடுதலையாகி எனும் பிரதியில் நிகழ் காலத்தில் தற்கொலைதாரி தன் மரணத்திற்கு பின் அங்கும் இங்கும் அலைந்து, (அதாவது மேல் உலகுக்கும் கீழ் உலகுக்கும்) இறுதியில் பிரதி எதிர்காலத்தை நிகழ் காலமாக்கி முடிக்கிறது.

இப்பிரதி ஆயுத அரசியல் அல்லது போரட்ட அரசியலின் ஓர் ஆயுதமாக பயன்படும் தற்கொலைதாரி ஒருவரின் இறப்பையும் பிறப்பையும் கூறிச் செல்கிறது. நிகழ்காலத்தில் தற்கொலை தாக்குதல் நடத்தும் தற்கொலைதாரி ஆணா? பெண்ணா? என்ற குறிப்பு இல்லை. ஆனால் எதிர்காலத்தில் பிறக்கின்ற தற்கொலைதாரி பெண் என்ற குறிப்பு வருகிறது. அதன் மூலம் தற்கொலைதாரிகள் காலம் காலமாக பிறந்து கொண்டுதான் இருக்கிறார்கள் ஆணும் பெண்ணுமாய் என்பதனை சொல்லி இருக்கிறது அப்பிரதி. ஆனால் பேசி இருக்கும் பொருள் சம்பந்தமான தாக்கபூர்வமான அனுபவத்தை அப்பிரதி தரத் தவறி விடுகிறது. அதன் காரணமாக உள்ளடக்கங்கள் தரும் அனுபவங்களை தாக்கபூர்வமாக வெளிப்படுத்தாத பிரதிகளின் பட்டியலில் இப்பிரதியும் சேர்ந்து விடுகிறது.

## 5. வேக்காடு

பிரதியில் பேசத் தொடங்கும் விடயத்திலிருந்து, அவ்விடயத்துடன் தொடர்பு கொண்ட, இன்னொரு விடயத்துடன் முடிந்து விடுகின்ற பிரதியாக வேக்காடு அமைகிறது.

உம்மாவின் மறுமணத்தை பற்றிய பிரஸ்தாபிப்புடன் தொடங்கும் இப்பிரதி, உம்மா என்ற பெண் இன்றைய ஆணிய சிந்தனையால் கட்டமைக்கபட்டுள்ள சமூகத்தில் எவ்வாறு போட்டி பொருளாக்கப்படுகிறாள் என்பதையும், எவ்வாறு விலை பேசப்படுகிறாள் என்பதையும் சித்திரித்தாலும், இறுதியில் உம்மாவை மணம் முடிக்கும் சாச்சா உம்மாவின் பிள்ளைகளை கைவிடுவதாக முடிக்கிறது. உம்மாவின் பிள்ளைகளே கதை சொல்லியாக (ஆண்கள்) இருக்க, அவர்களின் தேவை (சொத்து உரிமை) பற்றிய கவனக் குவிப்பாக பிரதியின் இறுதி பகுதி வெளிப்படுகிறது.

இதன் காரணமாக இப்பிரதியும் உள்ளடக்கங்கள் தரும் அனுபவங்களை தாக்க பூர்வமாக வெளிப்படுத்தாத பிரதிகளின் பட்டியலில் இப்பிரதியும் சேர்ந்து விடுகிறது. அத்தோடு உம்மாவின் நிலைப்பாடு, குரல் இப்பிரதியில் பதிவாகத் தவறியமை, இப்பிரதி ஒரு பெண்ணியப் பிரதியாகும் சந்தர்ப்பத்தையும் இழந்து விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.கல்லடிப் பாலம்

மட்டகளப்பு கல்லடிப் பாலத்தில் ஒரு முஸ்லிம் பெண்ணை காதலிக்கும் ஒரு தமிழ் இளைஞன் தன் காதல் ஏற்படுத்திய பிரச்சினையைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க, கல்லடிப் பாலம் அவனுடன் பேசுவதாக இப்பிரதி அமைக்கபட்டுள்ளது

இதே பாலத்தில் அரை நூற்றாண்டுக்கு முன்னால் முஸ்லிம் இளைஞன் ஒருவனும் தமிழ் பெண் ஒருத்தியும் காதலித்தாகவும், அவர்களின் காதல் ஏற்றுக்கொள்ளப் படாதமையால், அவர்கள் இருவரும் இப்பாலத்திலிருந்து வாவியில் பாய்ந்து தற்கொலை புரிந்து கொண்டதாகவும், அதேபோல் நீயும் உன் காதலியும் தற்கொலை புரிந்து கொள்ளுங்கள் என்று கல்லடிப் பாலம் சொல்லுகிறது. ஆனால், அந்தத் தமிழ் இளைஞனோ தான் காதலிக்கும் முஸ்லிம் பெண்ணை கைவிடுவது என்ற தீர்மானத்திற்கு வருவதுடன் கதை நிறைவு பெறுகிறது.

முதல் வாசிப்பில் இதுவொரு காதல் கதை பற்றிய பிரதியாக வெளிப்பட்டாலும், அப்பிரிதியில் பேசப்படும் அந்தக் காதல் பற்றிய வெளிப்பாடு தாக்கமாக வெளிப்பட வில்லை. அதன் காரணமாக இப்பிரதியும் உள்ளடக்கங்கள் தரும் அனுபவங்களைத் தாக்கபூர்வமாக வெளிப்படுத்தாத பிரதிகளின் பட்டியலில் சேர்ந்து விடுகிறது.

அதேவேளை இப்பிரதி கிழக்குப் பிரதேச தேசியங்களின் அரசியல், தலைமுறை இடைவெளி என்பவை பற்றியும் குறியீடாகப் பேசியும் இருக்கிறது என்பதும் மறுப்பதற்கில்லை.

## 7.மீள்தகவு

கலவரச் சூழலால் அங்கவீனமான ஒருவர், அரசு தருகின்ற கொடுப்பனவுக்காக அலைகின்ற அலைச்சலை இப்பிரதி பேசுகிறது. இதுவரை சொன்ன பிரிதிகளிலும் சரி, இனி சொல்லப் போகும் பிரதிகளிலும் சரி, 'காலம்' அலைகிறது என்றால், இப்பிரதியோ நிகழ் காலத்திலிருந்து எதிர்காலம் வரை அந்த அங்கவீனர் தொடர்ந்து அரச நிறுவனங்களுக்கு அலைவதைச் சொல்லுகிறது. அதன் மூலம் இப்பிரதி அரச நிர்வாகத்தின் சீரழிவை தாக்கபூர்வமாக முன் வைக்கின்ற பிரிதியாக வெளிப்படுகிறது. அதேவேளை மெல்லியதாக அது ஆயுத அரசியலைப் பற்றி பேசிச் சென்றாலும் அவ்வரசியல் முதன்மையான பேச்சாக இல்லை. இப்பிரதியில் மேற் சொன்ன அவங்கவீனரின் அலைச்சல் சித்திரிக்கப்பட்ட விதம் வாசிக்கப்படும் பொழுது வாசகர் களுக்கு ஏற்படுகின்ற களைப்பே இப்பிரதியின் வெற்றி ஆகுகின்றது.

## 8.காலவட்டம்

காலவட்டம் எனும் இப்பிரிதி யுகா யுகாந்திரமாக ஒரே நிகழ்வு பல்வேறு கால வெளிகளில் திரும்பத் திரும்ப நடந்து கொண்டு இருப்பதென்பதை, ஒல்லாந்தர் காலனிய யுகம் தொடக்கம் பின்காலனியச் சூழலில் இந்த தேசத்தில் நடந்தேறிய போர் சூழல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் நவகாலனியத்தின் உச்ச காலகட்டத்தில் நடக்கப்போகும் அணுகதிர் யுத்தம், அதற்குப் பிறகு வரும் யுகத்தில் நடக்கப் போகும் அணு ஆயுத யுத்தம் ஆகியவற்றின் போது நடக்கப் போகும் ஒரே மாதிரியான ஒரு சம்ப புனைவைப் பற்றி பேசுகிறது. அதனை ஒரு சிறுகதை வடிவத்தில், அதுவும் ஒரு நாவலாக விரித்து சொல்ல முடிந்த ஒரு காலவெளியை பயன்படுத்தி சொல்லி இருப்பது பாராட்டக் கூடியதாக இருக்கிறது.

காலவட்டம் என்ற இப்பிரதியின் ஆரம்பம் எது? முடிவு எது? சொல்ல முடியாத வகையில் காலவட்டத்தின் கோட்டின் ஒரு பகுதியிலிருந்து இப்பிரதி தொடங்குகின்றது. ஆனால், அதுவே ஆரம்பம் அல்ல. வட்டத்திற்கு ஆரம்பம் எது? முடிவு ஏது? என்று சொல்ல முடியாத மாதிரி, அவ்வகையான கால வட்ட வடிவத்தை எடுத்துக் காட்டுவதற்கு இப்பிரதிக்குள் பயன்பட்டிருக்கும் ஒற்றைச் சொல் ஒன்று கை கொடுக்கிறது.

**"...இந்தக் குரல்...? இந்தக் குரலை எப்போதோ கேட்டிருப்பது போலுணர்ந்தார்... எப்போது ஒரு யுகத்தின் முன்னரா...?"**

இப்பிரதியின் ஆரம்ப பகுதியில் இடம்பெறும் ஒரு வாக்கியத்தின் இறுதியில் வரும் **"முன்னரா?"** என்பதுதான் அந்த ஒற்றைச் சொல். அவ்வாக்கியம் அக்கதையின் ஆரம்ப பகுதிதான். ஆனால், அந்த ஒற்றைச் சொல் காலத்தால் அக்கதை எங்கோ எப்பொழுதோ தொடங்கி விட்டது என்பதனை உணர்த்துகிறது. அதனால்தான் அப்பிரதிக்கு தலைப்பு காலவட்டம். இத்தொகுப்பில் இடம் பிடித்துள்ள அவ்வுத்தியினை பயன்படுத்தி படைக்கப்பட்ட பிரதிகளில் மிக சிறப்பாக கட்டமைக்கப்பட்ட பிரதி இது என்பதே என் அப்பிராயம்.

## 9.தலைவர் வந்திருக்கிறார்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களுடனான உரையாடல் வடிவில் அமைந்த இப்பிரதி, உத்தி அளவில் பாராட்டக்கூடிய பிரதி என்றாலும், இன்றைய முஸ்லிம் காங்கிரஸின் நிலையை பற்றி, போக்கை பற்றி, அப்பிரதி பேசினாலும், ஏனோ எனது வாசிப்பில் அப்பிரதி ஒரு அரசியல் அறிக்கையாக மிஞ்சி விடுகிறதே தவிர, ஒரு நல்ல சிறுகதை பிரதியாக என் வாசிப்புக்கு வசமாகவில்லை என்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். அதன் காரணமாகவே இப்பிரதியும் உள்ளடக்கங்கள் தரும் அனுபவங்களை தாக்கபூர்வமாக வெளிப்படுத்தாத பிரதிகளின் பட்டியலில் சேர்ந்து விடுகிறது.

## 10.நல்லதொரு துரோகம்

ஒரு பொலீஸ் அதிகாரிக்கு ஊர்காவற்படை வீரன் செய்யும் நல்லதொரு துரோகத்துடன் முடிகின்ற இப்பிரதி, ஆரம்பிக்கும் பொழுது போர்ச் சூழலைப் பற்றி பேசி, ஊர்காவற்படை வீரனின் விசுவாசமான பணியைப் பற்றிய பிரதியாக முடியும் என்ற எதிர்ப்பார்ப்புக்கு மாறாக, அந்த பொலிஸ் அதிகாரி ஒரு சிறுமியை பாலியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறைக்கு உட்படுத்தி, அவளை சுட்டுக் கொல்வதைக் கண்ட அந்த ஊர்காவற் படை வீரன், அந்த அதிகாரியைச் சுட்டுக் கொன்று, அவருக்குப் புரியும் நல்லதொரு துரோகத்துடன் நல்லதொரு பிரதியாக முடிகிறது.

## 11.ஸீனத்தும்மா

இந்தத் தொகுப்பில் அமைய பெற்ற சிறந்த பிரதிகளிலே இக்கதைப் பிரதியும் ஒன்று என்று சொல்லாம்.

கிராமம் ஒன்றில் பாலியலுடன் தொடர்புப்படுத்தி பேசப்படும் ஒரு பெண்ணின் கொலையுடன் தொடங்கி, பாராளுமன்ற அரசியலின் திரிபான பேச்சுகளுடன் முடிக்கின்ற பிரதியாக இப்பிரதி வெளிப்படுகிறது.

கட்டமைப்பிலும் சரி, பாத்திர வார்ப்பிலும் சரி மிகச் சிறப்பாக இப்பிரதி கட்டமைக்கப்பட்டு இருக்கிறது.

இத்தொகுப்பில் அமைந்த பிரதிகளில் பெண்ணியச் சிந்தனையுடன், அதேவேளை நேரடியாக அதைப் பற்றிய பிரஸ்தாபிப்பு இன்றி புனையப்பட்டிருக்கும் இப்பிரதி, பெண்ணியப் பிரதியாகப் பேசக் கூடிய சந்தர்ப்பங்களை அதிக அளவில் கொண்டிருக்கும் பிரதி என்பது மறுப்பதற்கில்லை.

## 12.சாகும் தலம்

இப்பிரதி எதிர் வரும் நூற்றாண்டில் 'மூத்தகுடி'களை விஞ்ஞான அறிவியல் தொழில் நுட்பங்களால் கொல்லுவதைக் காவிய காலக் காதலர்களான துஷ்யந்தன் சகுந்தலையைக் கொண்டு அப்பணி மேற்கொள்ளப்படுவதாகச் சித்திரிக்கப்படுகிறது.

இப்பிரதியில் நம்மை வாசிப்பு மூத்த குடிகளின் கொலை என்றால், கதாசிரியரின் கவனம் எல்லாம் துஷ்யந்தன் - சகுந்தலை காதலாகவே இருக்கிறது.

அதேவேளை இப்பிரதியின் வாசிப்பில் ஒரு கேள்வியும் எழுகிறது. மூத்த குடிகளை விஞ்ஞான அறிவியல் தொழில் நுட்பங்கள் கொண்டு கொல்லுவதற்கும், துஷ்யந்தன் - சகுந்தலை காதலுக்குமான இணைவு எந்த தர்க்கத்தின் அடிப்படையிலானது என்பது தெளிவு இல்லாமல் போய்விடுகிறது. இறுதியில் அவர்கள் இருவரது தற்கொலையும், மூத்த குடிகளின் அழிவும் சரி, தாக்கபூர்வமாக நம் மனதில் பதியாமலே பிரதி நிறைவு பெற்று விடுகிறது. அதன் காரணமாக, இப்பிரதியும் உள்ளடக்கங்கள் தரும் அனுபவங் களைத் தாக்கபூர்வமாக வெளிப்படுத்தாத பிரதிகளின் பட்டியலில் இடம் பிடித்துக் கொள்கிறது.

## 5.வெள்ளி விரல் தொகுப்பின் பிரதிகளைப் பற்றி சில பொதுக் குறிப்புக்கள்

1. காலத்தைப் பற்றிய 'பிரக்ஞை' அவரது பெரும்பாலான பிரதிகளில் முதன்மை பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக இவர் Flash-Back உத்தியினை கையாளுவதில்லை. முக்காலங்களை அல்லது வெவ்வேறான காலங்களை ஒரே பிரதியில் இணைத்தல் என்பது அவரது பிரதான பாணியாக இருக்கிறது. அவரது பிரதிகளில் காலம் காலமாக நடக்கும் சம்பவங்கள் ஒரே மாதியாக இருப்பது போல், முடிவுகளும் ஒரு மாதிரியாகவே இருக்கின்றன.

**(உம் - காலவட்டம். விட்டு விடுதலையாகி, மீள்தகவு)**

ஆனால், விதி விலக்காகக் கல்லடிப் பாலத்தில் முடிவு வேறுபட்டு விடும்.

**2.** உத்திகளில் அவரது எழுத்து முறை முற்றும் முழுதுமாக நேர் கோட்டு எழுத்து முறையாக இருப்பதில்லை. நேர்கோட்டு எழுத்து முறையின் ஒழுங்கிலிருந்து சற்று விலகியதாக இருக்கும். அதேவேளை மேஜிக்கல் ரியலிஸத்தை (Magical Realism) நினைவுப்படுத்தும் வகையிலும் வெளிப்படும் **(உம் கல்லடிப் பாலத்தில் பாலம் பேசுவது, தலைவர் வந்திருக்கிறார் கதையில் மறைந்த தலைவர் பேசுவது போன்றவைகளைச் சொல்லாம்.)**

**3.** நௌஸாத்தின் பிரதிகளில் எள்ளல் உள் ஒளிந்து கொண்டிருக்கும் நிலத்தின் அடியிலே ஓடும் நீரூற்று போல். அதனால் அது பிதுங்கலாகத் தெரிவதில்லை.

## 6. முடிவாக...

மொத்தத்தில் ஆர்.எம்.நௌஸாத்தின் **'வெள்ளி விரல்'** தொகுப்பு -

அது கொண்டிருக்கும் பிரதிகளில் பெரும்பாலான பிரதிகள் சமூகப் பிரக்ஞையுடன் கூடிய, சமூகத்தின் பல விடயங்களை வெளிச்சம் போட்டு காட்டுகின்ற உள்ளடகங்களையும், உருவங்களையும் கொண்டிருப்பதன் மூலம், ஈழத்து நவீன தமிழ் சிறுகதைப் பரப்பில், 80களுக்குப் பின்னான ஈழத்து நவீன தமிழ் சிறுகதை வளர்ச்சியில் பங்கு கொள்ளுகின்ற தகைமையைப் பெற்றுக்கொள்ளும் தொகுப்பாக இருக்கிறது எனலாம்.

மல்லிகை முதலாவது இதழில் மல்லிகையின் வருகை அறிந்த சில இலக்கியப் பெரியார்கள் சொன்ன கருத்துக்கள் **'உங்கள் கருத்து'** என்ற தலைப்பில் இடம் பெற்று இருந்தன. அவை உங்கள் பார்வைக்கு...

### உங்கள் கருத்து

'மல்லிகை' மலர்வது கண்டு மகிழ்ச்சி. பொதுஜன ரசனை என்னும் போலி மயக்கைக் கண்டு ஏமாந்து போகாமல், உண்மையான இலக்கியத்தை நேர்மையான முறையில் அது வளர்க்க வேண்டும் என்பது எனது வேணவா. வளர்க்கும் எனத் திடமாக நம்புகிறேன்.
இரசிகமணி கனக-செந்திநாதன்

நமக்கென்று சில தனித்துவமான இலக்கியக் கருத்துக்கள் உண்டு. அவை பண்படுத்தப்பட வேண்டும். மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டும். மல்லிகை இதைச் செய்யும் என நம்புகின்றேன்.
ஏ. ஜே.

மல்லிகை என்ற மாத இதழை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அதன் தோற்றமும் வளர்ச்சியும் தமிழ் இலக்கியத்திற்குத் தொண்டு செய்யும் என நம்புகின்றேன்.
ஞா. நல்லையா
முன்னாள் செனட்டர்.

மல்லிகையின் வளர்ச்சிக்கு என்னால் இயன்ற அனைத்தையும் செய்வேன்.
'நந்தி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருமண்வெளி அருள் செல்வநாயகம்
## ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி-2012

### முடிவுகள்

**முதலாம் பரிசு - ரூபா 10000**

'கரைகளைத் தாவிடிய உறவுகள்'



காத்தநகர் முகைதீன்சாலி

இல.37, தாவூத் வீதி,

புதிய காத்தான்குடி-03.

**இரண்டாம் பரிசு - ரூபா 5000**

'காட்டுப்பூ'



பெரிய ஐங்கரன்

புலோலி

பருத்தித்துறை.

**மூன்றாம் பரிசு - ரூபா 3000**

தொடரும் பயணங்கள்



சுப்பையா கமலதாசன்

கெர்ஸ்வேலட்,

மத்திய பரிவு,

பொகவந்தலாவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# காலமும் கவிதையும் ...



அருணாசுந்தரராசன்
தமிழ்நாடு



அவரவர் கருத்தை
அவரவர் எண்ணப்படி
அவரவர் எழுதிக் கொள்ளட்டும்
அவரவர் கவிதையென

அவரவர் நிலத்தில்
அவரவர் விருப்பப்படி
அவரவர் விதைத்துக் கொள்ளட்டும்
அவரவர் தேவைக்கென

வாசிப்பின்போது
கரைந்துவிடும்
கவிதையின் ஒப்பனை

அறுவடையின்போது
தெரிந்துவிடும்
விதைப்பின் தன்மை

பாழ்பட்டுப்போன
காரணம் சொல்லி
சமூகத்தை விலக்கிவைத்து
வாழ்ந்திட முடியாது

நஞ்சு கலந்திருப்பதாகக்
குற்றம் சுமத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையைப் புறந்தள்ளி
இலக்கியம் பேசிட முடியாது

அழகானது கிளி
அதைவிட அழகு அதன் மொழி
ஆனாலும்
கூண்டுப்பறவை அதனால்
உயர உயரப் பறந்திட முடியாதே ...?

முன் என்றும் பின் என்றும்
நவீன மோகம் பிடித்தாட்ட
சொற்களின் கவர்ச்சியில்
வடிவ மயக்கத்தில்
வீழ்ந்து கிடக்கின்றன விட்டில்கள்
வீழ்கின்றவை பார்த்து
தேடிப்போய் மாய்கின்றன மற்றவையும்

மனநோயாளியின்
குண நலன்களோடு
காகித வீதிகளில்
வலம் வருகின்றன கவிதைகள்

ஆரவார சாயம் பூசி
வளைத்து விடப் பார்க்கிறார்கள்
புதுவகை மன்மதன்கள்

கடைச் சரக்காகிப் போன காதலும்
கண்டபடி எழுதும் கவிதைகளும்
கவனிப்புக் கோட்டை
எட்டுவதே இல்லை

காலமும்
கவிதையைக் கைவிடுவதில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டில்



– டொமினிக் ஜீவா

> 22.02.1970 அன்று நண்பர் செழியன் பேரின்பநாயகம் அவர்கள் என்னை 'தினகரன்' பத்திரிகைக்காக கண்ட பேட்டியை இங்கு காலத்தின் தேவை கருதி மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

## பெருமைக்குரியவர்

**– செழியன் பேரின்பநாயகம்**

"இலக்கியம் மக்கள் சமுதாயத்தின் நல்வாழ்வுக்கென உணர்ந்து கொள்ளும் காலம் வரும்போது எழுத்தாளர்கள் அத்தனை பேரும் ஒன்றிணையும் பொது அமைப்பு உருவாகலாம். கருத்து முரண்பாடு இலக்கிய அடிப்படையில் விமர்சன ரீதியாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்."

மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் பயிலும் காலமது. ஒருநாள் கல்லூரியின் விக்டோரியா மண்டப வாசலில் உட்கார்ந்து மட்டக்களப்பு வாவியில் பட்டுத் தெறித்து வீசும் தென்றலை நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன். அன்று மாலை 'இலக்கியச் சந்திப்பு' ஒன்று ஏற்பாடாகியுள்ளதாகச் செய்தி கிட்டியது. மகிழ்ச்சியான செய்தி. நானும் அன்று மாலை அந்தச் சந்திப்பு நடக்குமிடம் நோக்கிச் செல்லுகிறேன். அன்றுதான், அங்குதான் ஈழத்தின் பிரபல எழுத்தாளர் டொமினிக் ஜீவா எனக்கு அறிமுகமானார். கூடியிருந்த எழுத்தாளர்களுக்கு இந்த அறிமுகம் தேவையற்றதாயினும், என் போன்ற இலக்கிய தாகமுள்ள ஒரு மாணவனுக்கு இந்த அறிமுகம் தேவையானதாக அமைந்தது.

ஜீவா ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள், அவர்களின் எதிர்காலம் பற்றியெல்லாம் பேசினார். ஜீவாவின் பேச்சும் அவர் சிந்தையும் ஈழத்து எழுத்தாளர்களின் வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோய்ந்திருந்தது கண்டு உள்ளம் பூரித்தேன். அன்று பெரிய இலக்கியச் சண்டை நடந்ததென்றே சொல்வேன்.

இந்நிகழ்வை நான் நினைவில் நிறுத்தி நண்பர்களுடன் பேசி மகிழ்வதில் தனி இன்பம் காண்பேன். திடீரென ஒருநாள் எங்கள் வீட்டு வாசலில் நின்ற தபால் சேவகர் ஒரு தபாலை என்னிடம் நீட்டினார். பெற்று விரித்து பார்த்த போது 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல்! எழுத்தாளர் டொமினிக் ஜீவா அனுப்பி இருந்தார். 'தண்ணீரும் கண்ணீரும்' ஜீவத் துடிப்புள்ள சிறுகதைத் தொகுப்பு என்பேன். பல தடவைகள் கண்ணீரால் சொல்லும் அக்கதைகளைப் படித்துச் சுவைப்பதுடன் ஜீவாவின் எழுத்தாற்றலையும், கற்பனைத் திறனையும் எண்ணிப் பார்ப்பதுண்டு. இந்நூல்தான் பின்னர் சாஹித்திய மண்டலப் பரிசினையும் தட்டிக் கொண்டது.

முதல் தடவையாக இலக்கியக் கருத்தரங்கில் சந்தித்தேன். இரண்டாவது தடவையாக நூலில் சந்தித்தேன். என் உள்ளத்தில் நீங்காத இடம் பிடித்துக் கொண்ட இந்த எழுத்தாளரை நான் யாழ்ப்பாணம் போகும் வேளைகளிலெல்லாம் சுகம் கேட்டுவர மறப்பதில்லை. யாழ் நாடு இத்துணை பெரிய எழுத்தாளனை வைத்திருக்கிறது என்று எனக்கு ஒருவித பெருமையும் எழுவதுண்டு.

நான் என் அலுவலக மேசையில் குனிந்து நிமிர்ந்து எழுதுவதில் சிரத்தையுள்ளவனாக இருக்கிறேன். செய்தி ஒன்றை எழுதுவதில்தான் இத்துணைச் சிரத்தையும்! குனிந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். திடீரென என் மேசையில் மல்லிகை விழுகிறது. சட்டென்று நிமிர்கிறேன். என் எதிரே ஒருவர் நிற்கிறார். அவர் வேறு யாருமல்ல, ஈழத்தின் பிரபல எழுத்தாளர் டொமினிக் ஜீவாதான்.

"செழி, உங்களுக்கொரு 'மல்லிகை' " என்று முணுமுணுத்து நிற்கிறார். டொமினிக் ஜீவா என் முன்னே போட்டது மல்லிகைப் பூவையல்ல. மல்லிகை மணம் கமழும் சிறந்த கருத்துக் கருவூலங்களை உள் வைத்திருக்கும் அவருடைய 'மல்லிகை' என்ற இலக்கிய மாத இதழைத்தான். எழுதிய செய்தியை ஒருபுறம் வைத்து ஜீவாவைப் பார்த்து உட்காரச் சொல்கிறேன். என் எதிரே சிரித்து நிற்பவரும் பார்த்த முகம். 'மல்லிகை' அட்டையை அலங்கரிக்கும் படமும் பார்த்த முகம். ஆயிரத்து முந்நூற்றுக்கும் மேலான தடவைகள் தமிழ் மக்கள் மேடையில் பார்த்த முகம். அட்டையை அலங்கரிப்பவர் வேறு யாருமல்ல, ஈழத்திற்குத் தனிப்புகழ் தேடித்தந்த நாடக மேதை நடிகமணி வைரமுத்துவேதான். இவரைக் கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் சந்தித்த கதையும் உள்ளே புரட்டினால் பார்க்க முடிகிறது.

மல்லிகையின் முகப்பு அட்டையைப் பார்த்துவிட்டு, ஜீவாவின் முகத்தைப் பார்த்தேன். அவரின் முகத்தில் ஈழத்தில் தமிழ் எழுத்தாளர்களின் எதிர்கால சுபீட்சத்தின் எதிரொளி பளிச்சிட்டது.

"ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கவிதை வரியொன்றும் என் கண்ணில் தைத்தது. இவ்வுணர்வுக்குள் தோய்ந்து நிற்கும் ஜீவா சமீபத்தில் தமிழகம் சென்று வந்தார் என்பதை நான் அறிவேன். இருபது ஆண்டுகளாக எழுதியும், பேசியும் வரும் இந்த எழுத்தாளரிடம் பலவற்றைக் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆதலால் "ஜீவா அவர்களே, உங்களிடம் பல கேள்விகளைத் தொடுக்க விரும்புகிறேன். விடையிறுக்க விருப்பந்தானே" என்றேன். "கேள்வியை என் முன்னே நிறுத்துங்களேன்" என்றார்.

◆ **ஈழத்தில் சமீபகால இலக்கிய விழிப்புப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? மக்கள் உங்கள் பக்கம் ஆதரவு காட்டவில்லை. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற மனோபாவம். தேசிய உணர்வற்ற தன்மை. இந்நாட்டுப் படைப்பாளிகளின் தகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாத அறியாமை. இச்சூழ்நிலை கொஞ்சம் மாற்றம் பெற்று வருகிறது. இதற்கு உதாரணமாகச் சமீப காலத்தில் நிறையப் புத்தகங்கள் வெளிவருகின்றன. தவிர, பல நல்ல இரசிகர்களும், இலக்கிய ஆர்வலர்களும் இதயபூர்வமான ஒத்துழைப்புத் தருகின்றனர். கூடிய சீக்கிரத்தில் நாம் நல்ல இலக்கிய வளர்ச்சிக்குரிய சூழ்நிலையை எதிர்பார்க்கலாம்.

கூட்டங்களும், சஞ்சிகை வெளியிடுதலும், நூல் வெளியிடுதலும் இணைந்து பிணைந்தால்தான் நமது இலக்கியப் போராட்டம் வெற்றி பெறுமென நினைக்கிறேன். தமிழ் நாட்டிலில்லாத ஒரு புதுமை இலங்கையில் உண்டு. சிறந்த எழுத்தாளன் சிறந்த பேச்சாளனாகவும் இருக்கிறான். பேச்சு, எழுத்து, கவிதை முத்துறையிலும் திறமைசாலிகள் இருக்கிறார்கள். இது புதுமை மட்டுமல்ல, நமக்குப் பெருமையுங்கூட.

இதனால் ஈழத்து எழுத்தாளன் தனித்து எழுத்தில் மட்டுமல்ல, தனது எழுத்துத் திறனைப் பேச்சின் மூலமும் மக்கள் மத்தியில் எடுத்துக் காட்டுகிறான். இப்பேச்சுத் திறனால் நாம் சமீபத்தில் பல இலாபங்களைப் பெற்றிருக்கிறோம். இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் எழுத்தாளனின் இதயக் குரலைப் புரிந்து கொள்வதற்கும், அவர்களது இலக்கிய நோக்கங்களை அறிந்து கொள்வதற்கும் இப்பேச்சு அரங்குகள் மிக்க உதவி செய்துள்ளன.

◆ **ஈழத்து இலக்கிய கர்த்தாக்களிடம் துடிப்பும் வேகமும் குறைந்திருக்கின்றன. சோர்ந்த நிலையில் காண்கின்றேன்.**

யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இக்கூற்றை மறுக்கிறேன். ஏனெனில், வாரம் ஒரு தமிழ்ப் புத்தகம் வெளிவருகிறது. சிறுகதை, நாவல், ஓரங்க நாடகம், விஞ்ஞானத்துறை, சரித்திரத்துறை நூல்கள் பல வெளிவருகின்றன. அவையெல்லாம் மக்கள் அரங்கின் முன் மதிப்புப் பெற்றன. இதுதவிர, வட பிரதேசத்திலுள்ள கல்லூரிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் நிலையங்கள், சனசமூக நிலையங்களில் கிழமை தோறும் எழுத்தாளர்கள் தமது கருத்துகளைச் சொல்லி வருகிறார்கள். இதைவிடப் புதுமை என்னவென்றால், முன்னொரு காலத்தில் ஆலயங்களில் 'சின்ன மேளம்' ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெற்றது. ஆனால் இன்றைய சமுதாய மாற்றத்தினால் ஆலயங்களில் நடக்கும் திருவிழாக்களில் முக்கிய நிகழ்ச்சியாகக் கவி அரங்குகள் நடத்தப்படுகின்றன. இது ஒரு பெரிய இலக்கிய மாற்றம். சமீபத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சி வாரத்தில், உள்ளூராட்சி மன்றங்கள் எழுத்தாளர் நிகழ்ச்சிகளைச் சிறப்பு அம்சமாகச் நடத்தின. இன்னொன்று புங்குடுதீவுப் பகுதியில் புங்குடுதீவில் பிறந்த எழுத்தாளர்கள் அத்தனை பேரையும் கௌரவித்திருக்கிறார்கள்.

◆ **ஈழத்து எழுத்தாளர்கள் சர்ச்சைகளிலிருந்து விடுபட்டு பலம் பொருந்திய அமைப்பொன்றின் கீழ்ச் செயற்பட்டால், பெரும் பலன் கிட்டும் அல்லவா?**

கருத்து முரண்பாட்டினால் எழுத்தாளர்கள் முரண்பட்டுச் சர்ச்சைகள் செய்வதும், தங்கள் ஆக்கங்களைப் படைப்பதும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மிகத் தேவை. அதே சமயம் கருத்து முரண்பாடுகளைத் தனிப்பட்ட விரோத குரோதங்களாக எண்ணிச் செயற்படுவதும் அல்லது தனி மனிதர்களைத் திட்டுவதும் ஈழத்து இலக்கிய முயற்சிகளைக் கெடுத்து விடும். எழுத்தாளர்கள் அத்தனை பேரும் பொது அமைப்பில் ஒன்றிணைய வேண்டும் என்பதைப் பொறுத்தவரை, இந்த முரண்பாடுகளை மீறி, அந்தப் பொது அமைப்பு பரஸ்பரம் புரிந்து கொள்ளும் காலகட்டத்திலும், இலக்கியம் மக்கள் சமுதாயத்தின் நல்வாழ்விற்கு என உணர்ந்து கொள்ளும் காலம் வரும் போதும் அந்தப் பொது அமைப்பு உருவாகலாம். கருத்து முரண்பாடு இலக்கிய அடிப்படையில் விமர்சன ரீதியாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

◆ **நீங்கள் எழுதிய முதல் கதையின் பெயரென்ன? பத்திரிகையில் அது பிரசுரமானபோது என்ன செய்தீர்கள்?**

நான் முதலில் எழுதிய கதையின் பெயர் 'எழுத்தாளன்'. 'சுதந்திரனில்' பிரசுரமாகியது. இவ்வேளையில் சார்ல்ஸ் டிக்கன்ஸ் அனுபவம் எனது ஞாபகத்திற்கு வருகிறது. சார்ல்ஸ் டிக்கன்ஸின் கதையைப் பிரசுரிப்பதெனத் தீர்மானித்த செய்தி கூறும் 'போஸ்ட் கார்ட்' என்று அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாம். சார்ல்ஸ் என்ன செய்தார் தெரியுமா? 'போஸ்ட் கார்ட்டை'த் தூக்கிக் கொண்டு லண்டன் மாநகரை ஓர் இரவு முழுவதும் ஒரு நண்பரைத் தேடி இச்செய்தியைச் சொல்ல அலைந்தாராம். நான் இப்படி யாழ்ப்பாண மாநகர் முழுவதும் திரியா விட்டாலும், நானும் ஓர் எழுத்தாளன் என்பதில் ஏற்பட்ட மகிழ்ச்சியால் அன்றிரவு தூக்கமே வரவில்லை. படுக்கையில் தவித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ **நீங்கள் வெளியிட்டுள்ள சிறுகதைத் தொகுப்புகள் பற்றி குறிப்புத் தர முடியுமா?**

மூன்று சிறுகதைத் தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. 'தண்ணீரும் கண்ணீரும்' பதினொரு சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. 1960ஆம் ஆண்டு சாஹித்திய மண்டலப் பரிசில் பெற்ற நூல் அது. 'பாதுகை' பதினொரு கதைகளைக் கொண்டது. மற்றது 'சாலையின் திருப்பம்' பத்துக் கதைகளைத் தொகுத்தது.

என் கதைகளில் பல பிராக்கில் உள்ள செக்கோஸ்லோவாகிய சர்வகாலசாலையில் டாக்டர் கமில் சுவலபில் அவர்களால் செக்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இன்னும் பல கதைகள் 'தண்ணீரும் கண்ணீரும்', 'பாதுகை', 'சாலையின் திருப்பம்' போன்ற கதைத் தொகுப்பு களிலிருந்து ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில கதைகள் சிறந்த மொழிபெயர்ப்பாளரான நண்பர் ஏ.ஜே.கனகரத்தினா வினால் மொழிபெயர்க்கப்பட்டு 'ஒப்சேவர்', 'சண்டே டைம்ஸ்' இதழ்களில் வெளிவந்துள்ளன.

'வெண்புறா' என்னும் ஒரு கதை 'மஞ்சரி'யில் மறுபிரசுரம் செய்யப் பட்டது. சென்னை 'ஹிந்து' பத்திரிகை இத்தொகுதியைப் பாராட்டி, ஒரு நீண்ட விமர்சனம் எழுதியுள்ளது. அழகு சுப்பிரமணியம் அவர்கள் இக்கதைகளில் ஆலோசனைகளும் கூறியுள்ளார். என்னைப் பாராட்டி நீண்ட கடிதமும் எழுதியுள்ளார்.

◆ **ஈழத்தின் பிரபல எழுத்தாளர் அ.ந.கந்தசாமி அவர்களை நீங்கள் முதல் தடவையாக எப்படிச் சந்தித்தீர்கள்?**

சில நண்பர்கள் சேர்ந்து இலக்கிய சர்ச்சையில் ஈடுபட்டிருந்த காலம். எங்களுக்குள் சர்ச்சை செய்வோம். ஒரு தெளிவான இலக்கிய அல்லது ஆழமான இலக்கிய அறிவோ இல்லாத காலமது. அக்கால கட்டத்தில்தான் அ.ந.க. எனக்கு அறிமுகமானார். ஏதோ ஓர் ஆவேச உணர்ச்சியில்தான் அப்பொழுது எழுதத் தொடங்கினேன். சமுதாயத்தில் என்னைப் போன்றவர்களுக்குக் கிடைத்த வேதனையான அநுபவங்கள் எங்களுடைய அன்றைய எழுத்துக்குப் பசளையாக அமைந்தன. அதிலிருந்து ஓரளவு கற்றுக் கொண்டோம். எழுத்தாளன் என்பவன் வெறும் பேனா பிடிப்பவன் மட்டுமல்ல. சமுதாயப் போராட்டக்காரனுமாவான். எழுத்தாளனுக்குச் சமுதாயக் கடமைகள் உண்டு. அந்த அனுபவம் கற்றுத் தந்த பாடமிது. எனவேதான் என்றும் பாதை தவறாமல், மயக்கமடையாமல், எவ்வித ஊசலாட்டமும் இல்லாமல் நாங்கள் தொடர்ந்து வந்த பாதையில் இன்றும் நடக்கக் கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ **அ.ந.க.வுடன் மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்றைக் கூற முடியுமா?**

அ.ந.க.வின் ஆரம்பகாலத் தொடர்புகள் எனக்கொரு அரசியல் அறிமுகமாகவே கிடைத்தன. அவரை எனக்கு அறிமுகப்படுத்தியவர் திரு. ஆர்.ஆர்.பூபாலசிங்கமாவார். 'சுவீந்திரன்' என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதிக் கொண்டிருந்த காலத்தில் இலக்கிய நண்பனாக அறிமுகமானார். எனது வீட்டிற்குப் பக்கத்தில் அவர் தங்குவதற்கான ஓர் அறையை எடுத்திருந்தார். அக்காலத்திலேயே நடுநிசி வரைக்கும் இருவரும் இலக்கியச் சண்டை பிடித்திருக்கிறோம். இன்றும் இந்த அற்புத மனிதனை நினைத்துப் பார்க்கிறேன். சரியான இலக்கியப் பாதையைச் செப்பனிட்டுத் தந்தவர் திரு. அ.ந.கந்தசாமிதான்.

நிரம்பவும் உணர்ச்சி வசப்பட்டவர். சாதிக் கொடுமையைச் சாடுவதில் அந்தக் காலத்திலேயே மிக்க வேகம் காட்டியவர். கவிதைகளையும், பேச்சுக்களையும் சாதிக் கொடுமைகளைச் சாடிச் செய்தவர்! வளர்ந்து வரும் எழுத்தாளர் பரம்பரைக்கு உற்சாகமும் ஊக்கமுந் தரத் தக்கவர்களில் முதன்மையாக நின்றவர் அவர்.

நாற்பது நாற்பத்திரண்டாம் ஆண்டுக்குள் உட்பட்ட காலமென நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் தொடங்கிய மறுமலர்ச்சி இலக்கியக் குழுவில் மிக முக்கிய பங்கெடுத்து உழைத்தவர்களில் அ.ந.க. முக்கியமானவராவர். இந்த அருட்டுணர்வுகள்தான் எம்மைப் போன்ற இளம் உள்ளங்களுக்கும் ஒரு புதிய உணர்வைத் தந்தன. எனவே யாழ்ப்பாணத்தில் பொதுவாக இலக்கிய வளர்ச்சிக்கு அ.ந.க. பெரும் பங்கைச் செலுத்தினார். கடைசியாக நான் அவரைக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இறப்பதற்குப் பத்து தினங்களுக்கு முன்னர் சந்தித்தேன்.

அன்று நான் ஆத்ம சாந்தி பெற்றேன். 'மல்லிகை'யில் அவரது அட்டைப்படத்தை அட்டையில் பிரசுரித்து, அதை நான் அவரைச் சந்தித்த போது கொடுத்தேன். 'மல்லிகை'யில் அவரைப் பற்றி எழுதிய வாசகங்களை என்னை படிக்குமாறு சொன்னார். படித்துக் காட்டினேன். இந்த நிகழ்ச்சியை என்னால் மறக்க முடியாது. மரணப் படுக்கையிலும் 'நான் ஓர் எழுத்தாளன்' என்ற பெருமிதம் அவர் முகத்தில் சுடர்விட்டது.

◆ **தமிழக எழுத்தாளர்கள் மத்தியில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய நினைப்பு என்ன என்று கூறுவீர்களா?**

வளர்ந்து வரும் புதிய தலைமுறை எழுத்தாளர்கள் ஈழத்து எழுத்தாளர்களிடம் மிக்க மதிப்பு வைத்திருக்கின்றனர். ஈழத்து எழுத்தாளர்கள் திட்டவட்டமான ஓர் இலக்கியப் பார்வை கொண்டவர்கள் என்பது அவர்களுடைய கணிப்பு. 'சரஸ்வதி' காலத்திலிருந்து இன்றைய 'தாமரை', 'கண்ணதாசன்' சஞ்சிகைகளில் எழுதிவரும் எழுத்தாளர்கள், இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு சாரார் பிரபல எழுத்தாளர்களாக ஜனரஞ்சகமாகக் கணிக்கப்படுபவர்கள். இவர்களுக்குப் பொதுவாகவே ஈழத்தைப் பற்றி எவ்வித இலக்கிய அக்கறையும் இல்லை. நமது நாட்டைப் பற்றி மட்டுமல்ல, தமது நாட்டில் இருக்கக் கூடிய எழுத்தாளர்களைப் பற்றியே ஒன்றுமே தெரியாதவர்களும் அது பற்றி அக்கறை கொள்ளதவர்களுமாக இருக்கிறார்கள்.

நாம் எப்படித் தமிழகத்தின் புதிய பரம்பரையைத் தெரிந்து வைத்திருக்கிறோமோ, அதைப் போலவே அந்தப் புதிய பரம்பரையினரும் நமது தகுதிவாய்ந்த படைப்பாளிகள் பற்றித் தெரிந்து வைத்திருக்கின்றனர். இதில் ஒரு சங்கடமிருக்கிறது. தமிழகத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் சஞ்சிகை புத்தக வாய்ப்புக்கள் இங்கிருந்து அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே சொந்த முயற்சியின் மூலமாவது அவர்களை இனங் கண்டு தொடர்புகளைப் பலப்படுத்துவது இந்த நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாததொன்று.

**◆ இரு நாடுகளுக்குமிடையிலான இலக்கிய முயற்சிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பலர் உடன்பட்டு உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இன்னும் பலர் நமது பிரச்சினை என்னவென்று புரிந்து கொள்ளாதிருக்கிறார்கள். சிலர் நினைக்கிறார்கள், தமிழகத்துப் பிரபல சஞ்சிகைகளில் ஈழத்து எழுத்தாளர்களுடைய எழுத்துக்கள் வராததினால் கோபம் கொண்டுள்ளார்கள் என்று. இது வெறும் தப்பான அபிப்பிராயம். நான் தமிழகத்தில் இலக்கியக் கூட்டமொன்றில் சொன்னதைப் போல, ஈழத்து எழுத்தாளன் தமிழகத்து சஞ்சிகைகளில் எழுதி, தன்னைத் தரமற்றவனாக்கிக் கொள்ள என்றுமே முனைய மாட்டான் என்பதிலிருந்து நாங்கள் தரமான இலக்கியப் போராட்டம் நடத்துகிறோமே தவிர தமிழகத்துச் சஞ்சிகைகளில் இடம் பிடிப்பதற்குக் காவடி தூக்குவதல்ல நமது நோக்கம் என்பது தெளிவு.

**◆ ஈழத்து எழுத்தாளர்கள் கையாளும் தமிழ் தமிழகத்துக்குப் புரியாது. அதனால்தான் கதைகளைப் பிரசுரிக்க முடியாதிருக்கிறது என்கிறார்களே? இதைச் சற்று விளக்க முடியுமா?**

புதுமைப் பித்தனின் திருநெல்வேலித் தமிழும், ஜானகிராமனின் தஞ்சாவூர்த் தமிழும், ஜெயகாந்தனின் சென்னை கொச்சைத் தமிழும் இந்த நாட்டு இரசிகனுக்கு அல்லது நமக்குப் புரிகிறது. ஏனெனில் நமக்கு இலக்கியப் பொறுப்பிருக்கிறது. ஆனால் நமது தமிழ் அவர்களுக்குப் புரியவில்லையாம். அவர்களுக்குப் 'புரியாததினால்' நமது தேசத்துக்கு மிகப் பெரிய நஷ்டமொன்றும் வந்துவிடப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ எழுத்தாளர் ஜெயகாந்தன் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

சமீப கால ஜெயகாந்தனுக்காக நான் அனுதாபப்படுகிறேன். பாதை தவறி, சறுக்கிக் கொண்டு தடம் புரண்டு போகும் அவர், தமது சறுக்கலுக்கே ஒரு தத்துவ முலாம் பூச இன்று முயன்று வருகிறார். அவரது 'ஞானரதம்' மாத இதழை நான் சமீபத்தில் படித்துப் பார்த்தேன். 'விகடனில்' தகழி சிவசங்கரம்பிள்ளையின் பேட்டிக் கட்டுரையையும் நான் ஊன்றிப் படித்தேன். சில மாதங்களுக்கு முன் தமிழகம் சென்றிருந்த பொழுது அவருடன் நேரில் பல பிரச்சினைகள் பற்றி பேசியிருக்கிறேன். இவை சகலவற்றையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது, 'சரஸ்வதி' காலத்து ஜெயகாந்தன் மிக வேகமாகவே தன்னைத் தானே சீரணித்துக் கொண்டு வருகிறார் எனத் தோன்றுகிறது. மக்கள் மத்தியிலிருந்து தோன்றிய ஒரு திறமைசாலியான எழுத்தாளர் ஜெயகாந்தன் இன்று தன்னைப் பிரமுகர் வரிசையில் உயர்த்திக் கொண்டு விட்டார். தொடர்ந்து ஒரு நட்சத்திரப் பதவிக்குத் தன்னைத் தயார்ப்படுத்துகிறாரோ என்ற சந்தேகம் எனக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

எழுத்தாளன் மீனைப் போன்றவன். மக்கள் சமுதாயம் என்பது கடல். மக்கள் சமுதாயத்தின் தொடர்பற்ற எழுத்தாளன் காலகதியில் கடலிலிருந்து கரையில் வீசப்பட்ட மீனைப் போல மக்கி மடிந்து போவது திண்ணம். ஜெயகாந்தனும் மக்கள் சமுதாயத்திலிருந்து தினசரி தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு வருவதைக் கூர்ந்து கவனிக்கலாம். சமீபத்தில் அவரது படைப்புக்களும், மேடைக் கருத்துக்களும் இதைத்தான் நிரூபிக்கின்றன.

1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழகத்தில் சரஸ்வதி வெளியீடாக வெளிவந்த கனது முதலாவது சிறுகதைத் தொகுப்பான **தண்ணீரும் கண்ணீரும்** தொகுப்புக்கு **எண்ணமும் எழுத்தும்** எனும் தலைப்பில் என்னால் எழுதப்பட்ட என்னுரையில்....

**"ஈழத்தின்-எனது தாய்த் திருநாட்டின்-விடுதலைக்குப் பின்பு,சுதந்திரத்துக்குப் பின்னர், தேசத்தில் பல புதிய புதிய பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன. இது இயற்கையும் கூட. 'சுதந்திரத்தை யார் அனுபவிப்பது?' என்று தொடங்கி இனப்பிரச்சினை, மொழிப்பிரச்சினை ஈறாகப் பலப்பல கருத்து மோதல்கள், எண்ணச்சிதறல்கள் நாட்டில் ஒரு புதிய ஒரு விழிப்பை, ஒரு வகைப் பரபரப்பை, உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தின. அதன் எதிரொலிகள் காலாகாலத்தில் இலக்கியத்திலும் பிரதிபலித்தன. ஈழத்து இலக்கியம் தனக்குத்தானே தூண்டுகோலாக அமைந்தது. இலங்கை இலக்கிய வட்டம் புதுப் போக்கில் சிந்திக்க ஆரம்பித்தது."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நீங்கள் தரமான இலக்கியச் சுவைஞரா?

'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகளைத் தொடர்ந்து படியுங்கள்.

கடந்த 47 ஆண்டுகளுக்கு மேலாக நமது மண்ணைச் சார்ந்த படைப்பாளிகளின் பல் துறைப்பட்ட நூல்களை வெளியிட்டு வருகின்றது, மல்லிகைப் பந்தல் நிறுவனம்.

மல்லிகைப் பந்தல் வெளியீடுகளை நீங்கள் வாங்கும் போது, அதனது பொருளாதார ஆதரவு மல்லிகை மாத இதழுக்கும் சுவறுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

மல்லிகைப் பந்தல்
தொலைபேசி : 2320721
201/4, புதிய கதிரேசன் வீதி.கொழும்பு 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy

## Digital Centre (Pvt) Ltd

**We Are Leading Towards to new prints in various Styles**

- Low Cost
- High Speed
- High Quality

- Any Paper or Any Board
- 1200 dpi x 8 bit High Resolutuion colour output
- Panorama Print 13 x 40

**NO** Positive Plates Colour Separation



KONICA MINOLTA

## Digital Pro Lab & Digital Offset Press

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hotline - 0755 303030**